கிரியா பாபாஜி அன்பகம், கனடா
யோக வாழ்வு

பக்கங்கள்: 20

விலை: 30.00

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

www.theempunal.lk தீ : 01 புனல்:10 03.07.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

NEEDO

NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION

BUILD THE NATION TOGETHER

## கட்டவிழும் சுகாதாரப் பேரிடர்: பொருளாதாரக் கையறு நிலை போல சுகாதாரத்துறையிலும் ஏற்படுமா?

செல்வழகன்



மே மாதத் தொடக்கத்தில் இருந்து அவ்வப்போதான தளர்வுகளுடன் ஆரம்பித்த பயணத் தடை இரண்டு மாதங்களாக நீண்டு இப்போது தளர்த்தப்பட்டிருக்கிறது. மேற்குலக நாடுகளில் இத்தகைய பயணத் தடைகள் போடப்பட்டு, பலனளிக்காத நிலையில் தொடர் முடக்கத்தை இறுக்கமாக அமுல்படுத்தியும், விரைவான தடுப்பூசி செலுத்தும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியுமே கொவிட் வைரஸ் தாக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தின. அவ்வாறிருந்த போதிலும் திரிபடைந்த வைரஸ் தாக்கம் பிரிட்டனில் அதிகரித்திருப்பதையடுத்து தளர்வு காலத்தை மேலும் நீடித்துள்ளது.

எமது நாட்டில் மூன்றாவது அலையின் தாக்கம் அதிகரிக்கப் போவது குறித்து சுகாதாரத் தரப்புகள் குறிப்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், விசேட வைத்திய நிபுணர் சங்கத்தினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தினர் அபாயச் சங்கினை ஊதியும் எதுவும் எடுபடவில்லை. புத்தாண்டு காலத்தை முழுமையாக முடக்கி, மக்களது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துமாறு விடுத்த கோரிக்கைகள் எவையும் எடுபடவில்லை.

அதன் விளைவாக ஏற்பட்ட புத்தாண்டுக் கொத்தணி நாடு முழுவதும் வியாபித்து, இரட்டை இலக்கத்தில் இருந்த மரண எண்ணிக்கையை நான்கு இலக்கத்துக்கு மாற்றி விட்டது.



> **“தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதற்குப் பலரும் தயங்குகின்றனர். குறிப்பாக, அங்கு வழங்கப்படும் உணவு தொடர்பில் பலரிடமும் அதிருப்தி உள்ளது. தனிமைப்படுத்தல் என்பது தவிர அங்கு பெரிதாகச் சிகிச்சைகள் இடம்பெறுவதில்லை என்ற அபிப்பிராயங்களும் மக்கள் மனதில் உள்ளது. இதனால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதனைத் தவிர்த்து, தமது நோய் நிலைமையை வெளிக்காட்டாது இருப்பவர்களும் உள்ளனர். அவர்கள் தமது வீட்டில் இருந்து சுடு நீர் ஆவி எடுத்தல், சுடுநீரை அடிக்கடி குடித்தல், நோயெதிர்ப்பு விற்றமின்களை எடுத்தல் முதலானவை போதுமானது என நினைக்கின்றனர். இந்த நினைப்பு சமூகத்தில் இனங்காணப்படாத பல தொற்றாளர்களை உருவாக்கவும், வீட்டில் மரணங்கள் நிகழவும் வாய்ப்பளிக்கின்றன.”**

நாளொன்றுக்கு இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேலான தொற்று எண்ணிக்கை பதிவாகும் நிலையில், பயணத் தடை விலக்கலின் பின்னர் சற்றுக் குறைந்த -

▶ 04


## சீன முதலீட்டாளர்களும் தமிழர் தரப்பு எதிர்கொள்ளும் சவால்களும்

சி.அ.ஜோதிலிங்கம்

> **“வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குகின்ற போது சீனா தொடர்பில் என்ன வகையான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது மிக முக்கியமான விவகாரமாக உள்ளது. சீன அரசாங்கத்தின் நலன்களுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற காரணத்தினால் தமிழ் மக்களுடைய நலன்களில் துளியளவு கூட கவனம் செலுத்துவது இல்லை என்பது வெளிப்படை. இதனால் தமிழ்த் தரப்பினர் சீனாவின் எதிர்த் தரப்பினராகக் கருதப்படும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம், இந்தியக் கூட்டோடு சேர்ந்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.”**




பூநகரி கௌதாரி முனை கடலட்டை, இன்று தமிழர் அரசியற் பரப்பில் முக்கியமான பேசு பொருளாக மாறிவிட்டது. மூன்று பணிப்பாளர்களைக் கொண்ட ஒரு தனியார் நிறுவனம் அந்தக் கடலட்டைப் பண்ணையை ஆரம்பித்து இருக்கின்றது. மூன்று பணியாளர்களில் ஒருவர் கொழும்பைச் சேர்ந்த சிங்களவர். மற்றைய இருவரும் சீனர்கள். கம்பனி “குவிடன் பிறைவேட் லிமிட்டட்” என்ற பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதோடு சீனர்களுக்கு சீன



முகவரியே வழங்கப்பட்டிருக்கிறது. பதிவு ஒப்பந்தத்தில், கடலட்டைப் பண்ணை நடத்துதற்குரிய பரப்பு எல்லை, நிதிக் கொடுப்பனவுகள், அதன் பங்கீடுகள் என்பன பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரு தொழில் நிறுவனம் உருவாக்கப்படுவதாக இருந்தால் அப் பிரதேசத்தினுடைய உள்ளூராட்சி சபையோடு தொடர்பு கொண்டு அதனுடைய அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அதனை மேற்கொள்ளவில்லை. நேடியாக கொழும்பில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலமே இப் பண்ணையை உருவாக்கினர். இவ்வாறான முதலீட்டுத் திட்டங்களை கோத்தபாய ராஜபக்ஷ அரசாங்கங்கள் ஒரு ஆக்கிரமிப்பு கருவியாக பயன்படுத்தியிருக்கின்றதா? என்ற சந்தேகமே ஏற்படுகின்றது. இது தொடர்பாக தமிழரசியற் கட்சிகள் கண்டனங்களைத் தெரிவித்ததோடு “சீனர்களுடைய முலீட்டுத் திட்டத்தை அனுமதிக்க மாட்டோம்” எனக் கூறியிருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறிதரன், சுமந்திரன் போன்றவர்கள் இப் பண்ணையை பார்வையிடச் சென்று பாதை சரியில்லை எனக் கூறி திரும்பி வந்துவிட்டார்கள். உண்மையில் மக்களுடைய பிரச்சினையை



▶ 11

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஐரோப்பிய விஜயத்திற்கு பின்னர் நேட்டோ நாடுகள் போருக்கான தயார்ப்படுத்தலை அதிகரித்துள்ளன. ரஷ்சியாவையும் சீனாவையும் நெருக்கடிக்குள்ளாக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கான நகர்வுகளை நேட்டோ தரப்பு அதிகரித்து வருகிறதைக் காணமுடிகிறது. அவ்வகைச் சூழல் ஒன்றுக்கான அரசியல் தோற்றப்பாடு காட்சிப்படுத்தப்படுவதை அவதானிக்கும் போது ஒரு போர்ச் சூழல் ஏற்படுகிறதாகவே தெரிகிறது. அது உலகளாவிய போராக அமையுமா அல்லது மட்டுப்படுத்தப்பட்ட போராக அமையுமா என்பது தொடர்பிலேயே அதிக சந்தேகங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. இக்கட்டுரையும் அத்தகைய போருக்கான சூழல் காணப்படுகிறதா என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

முதலில் Michael Beckley எழுதிய America is not ready for a war with China எனும் கட்டுரை வெளிப்படுத்தும்



# அமெரிக்காவின் தலைமையில் நேட்டோ உலகளாவிய போருக்கு தயாராகிறதா?


சாராம்சத்தை நோக்குவோம். அமெரிக்காவின் பனிப்போருக்கு பின்பான காலப்பகுதியில் இராணுவத்திற்கான செலவீனமாக 19 டில்லியன் அமெரிக்கடொலரை ஒதுக்கி வந்துள்ளது. அதே காலப்பகுதியில் சீனாவோ 16 டில்லியன் அமெரிக்கடொலருக்கு அதிகமான ஒதுக்கங்களை மேற்கொண்டு வருகிறது. அதிகமான ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள் அமெரிக்கா ஒரு அபாயமான போருக்கு போவதற்கு முடியாத நிலையிலுள்ளதாகவும் அதற்கு அதிக காலம் தேவைப்படுவதாகவும் அவ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த மார்ச் (2021) இந்தோ-பசுபிக் படையணியின் தளபதி அட்மிரல் பிலப் டேவிட்சன் குறிப்பிடும் போது இந்தோ-பசுபிக் ஆதிக்கம் செய்வதற்கு குறைந்தது அடுத்த ஆறு வருடங்களாவது தேவைப்படும் எனவும் சீனாவின் படைப்பலம் அமெரிக்காவை விட உயர்வாக உள்ளதாகவும் கிழக்காசியாவை அமெரிக்கா பலப்பிரயோகத்தினாலேயே கைப்பற்ற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமன்றி அமெரிக்கா மரபுரீதியான இராணுவ பரிமாணத்தில் வீழ்ச்சியை அடையும் போது சீனா வளர்ச்சியடைவதாகவும் அமெரிக்காவின் பாதுகாப்பு கட்டமைப்பை விட அரசியல் கட்டமைப்பே வலுவானதாக உள்ளதாகவும் சீனா இரு முனைகளிலும் வலுவாக உள்ளதாகவும் அக்கட்டுரை விவாதிக்கிறது. மேலும் சீனாவின் இராணுவத்தினையும் அதன் விரிவாக்கத்தையும் தடுக்கும் விதத்திலேயே அமெரிக்காவின் பாரிய இராணுவ அரசியல் உபாயங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் மிக மெதுவாகவே அமெரிக்க இராணுவ மற்றும் பாதுகாப்பு தந்திரோபாயங்கள் சீனாவுடன் ஒப்பிடும் போது நகர்வதாக குறிப்பிடப்படுகிறது.

ஜோ பைடன் நிர்வாகம் சீனாவுக்கு எதிரான இராணுவ நகர்வை இரட்டிப்பாக்கிய போதும் அதன் நகர்வு ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது தீவிரமாக நகர முடியாது திணறுவதாகவும் அதற்குக் காரணம் மிகப் பெரியளவான பாதுகாப்புக் கட்டமைப்பை அமெரிக்கா உலகளாவிய ரீதியில் கொண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் பைடன் நிர்வாகம் முழு அளவிலான திட்டமிடலுடன் ஆசியா முதலிடம் என்ற கொள்கையை பிரயோகப்படுத்தும் விதத்தில் பென்ரகன் சிஐஏ காங்கிரஸ் சென்ற மற்றும் இராணுவக் கட்டமைப்புக்களையும் பயன்படுத்த திட்டமிட்டு வருகிறது. ஆசியாவை முழுமையாகக் கைப்பற்றுவதே பைடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் முதல் இலக்காக உள்ளது. ஆனால் அவற்றை எல்லாம் இலகுவில் சீனா கைவிடும் என்ற கணிப்பில் அமெரிக்க செயல்பட முடியாது என்றும் அவ்வாய்வு கூறுகிறது. அது மட்டுமன்றி சீனா ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நகர்வை மேற்கொள்ளுமாயின் அது தாய்வானை கைப்பற்றுவதாகவே அமையும் எனவும் அவ்வாய்வு தெரிவிக்கின்றது.

இவ்வாய்வின் படி முழுநீள போருக்கு செல்வதற்கான தயாரிப்பில் அமெரிக்கா தற்போது இல்லை என்பதையும் அதற்கான கால அவகாசத்தைக் கொண்டு அமெரிக்கா நகர்வதாகவும் அக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. அப்படியாயின் ஏன் கருங்கடல் பகுதியிலும் அரபிக் கடலிலும் சிரியா ஈராக் இலக்குகளிலும் அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ கூட்டாளி நாடுகள் இராணுவ நகர்வுகளை மேற்கொள்ள முனைகின்றன. அதனை விரிவாக அவதானிப்பது அவசியமானதாகும்.

முதலாவது ஜோ பைடனின் ஐரோப்பிய விஜயத்திற்கு பின்பான நேட்டோவின் நகர்வுகள் இராணுவ கொதிநிலையை அதிகரிக்கச் செய்துள்ளன.
நேட்டோவின் அங்கத்துவ நாடுகள் உக்ரையினை பாதுகாக்கும் விதத்தில் கருங்கடலை அண்டிய பகுதியில்





போர்க் கப்பல்களை நடமாட்டத்தை அதிகரித்துள்ளன. குறிப்பாக பிரிட்டனின் போர்க் கப்பலான ஏச்எம்எஸ் எனும் நாசகாரி கருங்கடலை நொக்கி நகர்ந்ததும் ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சின் எச்சரிக்கை மட்டுமன்றி ரஷ்யா தனது விமானப்படையை கண்காணிப்பில் ஈடுபடுத்தியதையும் காணமுடிகிறது. இது கடல் ரீதியாக ஒரு தாக்குதலை மேற்கு ஐரோப்பாவிலிருந்து எதிர்கொள்ளும் வழிகளையும் உபாயத்தை தயார் செய்து வருகின்றன. ரஷ்யாவின் போர் தயாரிப்புகள் உக்ரையினை நோக்கி அமைவதனாலும் நேட்டோ நாடுகளை எச்சரிக்கும் நடவடிக்கைகளை ரஷ்ய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள் வெளியிடுவதையும் எதிர்க்கும் நோக்கில் செயல்படுகின்றன. அது மட்டுமன்றி ரஷ்யாவை நெருக்கடிக்குள் தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் அதன் இயல்பான இராணுவ மற்றும் பொருளாதார வளர்ச்சியை தடுக்கலாம் என நேட்டோ நாடுகள் கருதுகின்றன. அதாவது ரஷ்யாவின் வளர்ச்சியை மட்டுப்படுத்துவதே நேட்டோவின் முதன்மையான நோக்கமாகும். இதனால் போர் ஒன்றுக்கான சூழல் நிலவுவது போல் அதட்டிக் கொள்ள நேட்டோ தரப்பு முயலுகிறது. கருங்கடலை அண்டிய பகுதியில் 32 நாடுகளது கடற்படைகளுக்கான பாரிய போர்ப் பயிற்சி ஒன்றுக்கான நகர்வை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. இதனை அடுத்து ரஷ்யாவும் பாரிய போர் ஒத்திகைக்கு தீர்மானித்துள்ளதாகவும் நேட்டோ நாடுகளுக்கும் குறிப்பாக பிரிட்டனுக்கு எச்சரிக்கை செய்துள்ளதையும் காணமுடிகிறது. உக்ரைனை மையப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ரஷ்யா சீனா அணியை போருக்குள் இழுத்துவிடுவதற்கான நடவடிக்கையை நேட்டோ தரப்பு ஆரம்பித்துள்ளது.

இரண்டாவது அராபியக் கடலை நோக்கி நேட்டோவின் அணிநாடுகள் தமது போர்க் கப்பல்களை நகர்த்துகின்றன. அப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தில் அதிக பாதிப்பினை நேட்டோ நாடுகள் எதிர்கொண்டிருப்பதுடன் கடல் பகுதியை ஏறக்குறைய ரஷ்யாவிடமும் சீனாவிடமும் இழந்துள்ள போக்கானது இராணுவ ரீதியில் மேற்குக்கு துரதிஸ்ரவசமானதே. அதனால் இந்தோ-பசுபிக் கடலை கைப்பற்றும் விதத்தில் ஆசியாவினது அல்லது இந்துசமுத்திரத்தினது கடற் பிராந்தியங்களை கண்காணிப்பதுவும் அதனை அடுத்து கைப்பற்றுவதுமான நடவடிக்கையை நேட்டோ தரப்பு ஆரம்பித்துள்ளது. இதனால் கருங்கடலில் குவிந்துள்ள நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு அராபிக் கடல் பகுதியில் கவனத்தை திசைதிருப்ப முடியுமென நேட்டோ அணி கருதுகிறது. இது ரஷ்யாவையும் சீனாவையும் நெருக்கடிக்குள்ளாக்குவதன் மூலம் போர் என்ற எச்சரிக்கையுடன் இரு நாடுகளது இயல்பான போக்கினையும் தகர்க்க முடியுமென உத்தி கொள்கின்றன.

மூன்றாவது சிரியா மற்றும் ஈராக்கில் அமைந்துள்ள ஈரான் ஆதரவு பேராளிப்படைகள் மீது அமெரிக்கா விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. குறிப்பாக

> அராபியக்கடலை நோக்கி நேட்டோவின் அணிநாடுகள் தமது போர்க்கப்பல்களை நகர்த்துகின்றன. அப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தில் அதிக பாதிப்பினை நேட்டோ நாடுகள் எதிர்கொண்டிருப்பதுடன் கடல் பகுதியை ஏறக்குறை ரஷ்யாவிடமும் சீனாவிடமும் இழந்துள்ள போக்கானது இராணுவ ரீதியில் மேற்குக்கு துரதிஸ்ரவசமானதே. அதனால்இந்தோ-பசுபிக்கடலைகைப்பற்றும் விதத்தில் ஆசியாவினது அல்லது இந்து சமுத்திரத்தினது கடற் பிராந்தியங்களை கண்காணிப்பதுவும் அதனை அடுத்து கைப்பற்றுவதுமான நடவழிக்கையை நேட்டோ தரப்பு ஆரம்பித்துள்ளது.

27.06.2021 அன்று ஹெஸ்புல்லா மற்றும் அல்கொய்தா அமைப்புக்கள் மீது சிரியாவிலும் ஈராக்கிலும் தாக்குதல் நிகழ்த்தியதாகவும் ஐந்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகவும் பென்ரகன் அறிவித்துள்ளது. இத்தாக்குதலால் அமெரிக்க இராணுவத்தை பாதுகாக்கவும் வன்முறைகள் அதிகரிக்காமல் இருக்கவும் நிகழ்த்தியதாக பென்டகன் மேலும் தெரிவித்தது. ஆனால் இந்த தாக்குதல் ஈரான் பேராளிக்குழுக்களை இலக்கு வைத்திருப்பதுடன் ஈரான் ரஷ்யா சீன சிரியாக கூட்டிற்கு எதிரான நடவடிக்கையாகவே தெரிகிறது. கருங்கடல் முதல் சிரியா எல்லை வரையும் அத்தகைய நெருக்கடியை தொடர்ந்து நகர்த்துவதன் மூலம் குழப்பத்தை ரஷ்யா சீனாவுக்கு ஏற்படுத்துவதனைக் காணமுடிகிறது. காரணம் மேற்காசியப் பிராந்தியம் முழுமையாக இழக்கும் நிலையில் அமெரிக்காவும் நேட்டோவும் காணப்படுகின்றன. நேட்டோவின் அங்கத்துவ நாடான துருக்கி அமெரிக்காவுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்வதும் ரஷ்யாவுடன் கைகோர்த்துள்ளமையும். சிரியா ஈரான் நாடுகளுடன் சீனா ரஷ்யா நெருக்கமடைந்திருப்பதுவும் பாரிய நெருக்கடியை முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் அமெரிக்கா எதிர்கொண்டது. அது நேட்டோவையும் பாதித்திருந்ததுடன் மேற்காசியாவின் இழப்பானது அமெரிக்க இருப்பை நெருக்கடிக்கு தள்ளியது.

எனவே உலகளாவிய ரீதியில் அமெரிக்கா போர் ஒன்றுக்கான வாய்ப்பினை உருவாக்க முயன்றாலும் அதற்கு தயாரில்லை என்பதை அதன் நகர்வுகளும் நடவடிக்கைகளும் காட்டுகிறது. மைக்கல் குறிப்பிடுவது போல் ஒரு தயாரிப்புக் காலமாகவே அமெரிக்க தற்போதைய காலத்தைக் கருதுகிறது. முழு நீள போரை தவிர்ப்பதுடன் அதற்கு தயாராகாத நிலையும் அதேநேரம் மட்டுப்படுத்தப்பமட்டுள்ள போர் ஒன்றுக்கான நகர்வையும் அமெரிக்கா சார்ந்த நேட்டோ தரப்பு மேற்கொள்ள முனைகிறது. ரஷ்யா மற்றும் சீனாவை இயல்பான வளர்ச்சியில் செல்லவிடாது தடுப்பதன் மூலம் நெருக்கடியை ஏற்படுத்தி அதனை ஒரு போர்ச் சூழலாக மாற்றி குழப்பத்தினை அடைய முனைகிறது. அதாவது மட்டுப்படுத்தப்பட்ட அளவு என்பது உக்ரைன்-ரஷ்ய போரா கவோ அல்லது ஈரான் எதிர் மேற்காசிய நாடுகள் போரா கவோ அல்லது சிரியா-துருக்கி போராகவோ அல்லது சீனா-தைவான் போராகவோ உருவாக்கவும் அதில் ஓரணிக்கு ஆயுதத் தளபாடங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி எதிரணியைத் தோற்கடிப்பதன் மூலம் தனது ஏகாதிபத்திய அமைவைத் தக்கவைக்க முயலுகிறது. இதனையே ஒரு போர் அரங்காக அமெரிக்காவும் நேட்டோவும் கருதுகின்றன. அதனை நோக்கிய நகர்வையே உலகளாவிய ரீதியில் ஏற்படுத்த முனைகிறது. இதற்கான பதில்களும் எதிர்த்தரப்பான ரஷ்ய சீனா ஈரான் சிரியா மற்றும் வடகொரியா போன்றவற்றின் தீர்மானங்களிலும் தங்கியுள்ளது. காரணம் அண்மையில் சீனாவும் ரஷ்யாவும் மீளவும் தமக்கிடையிலான உடன்பாடுகளை நீடித்துள்ளன.

■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# கொதிநிலையில் தென்னிலங்கை; தமிழரை துணைக்கு அழைக்கிறது ஒருதரப்பு

அரசுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவதற்காக தமிழர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ஸ தேரர். ஆனால் ராஜபக்ஷ அரசு ஆட்சியைப் பொறுப்பெடுத்த காலத்தில் அவர்களைக் கொண்டாடியவர்களில் இவரும் ஒருவர். அப்படியானவர் இப்போது அவர்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளார் என்றால் தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் போக்கு படுபாதாளத்திற்குப் போய்க்கொண்டிருப்பதாக விளங்கிக் கொள்ளமுடிகிறது. ஆட்சியாளர்கள் அடுத்தடுத்து மேற்கொண்டுவரும் ஒவ்வொரு செயற்பாடுகளும் நாட்டு மக்களாலும் அரசியல் செயற்பாட்டாளர்களாலும் விமர்சனத்துக்குளாக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணம் அவர்களது செயற்பாடுகள் நாட்டினைப் பாதிப்பதாக அமைவதோடு வெறுமனே குடும்ப நலன் சார்ந்ததாக அமையப்பெறுவதுமேயாகும். அதன் ஒரு அம்சமே பஸில்ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் செயற்பாடு. ஏற்கனவே அரசின் செயற் பாடுகளில் அதிருப்தி அடைந்திருக்கும் தென்னிலங்கை இப்போது மேலும் கொதிப்படைந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில்தான் அரசுக்கெதிரான சிங்களத் தலைமைகள், செயற்பாட்டாளர்கள் தமிழர் தரப்பினையும் தமக்குத் துணையாக இழுத்துக் கொள்ள முனைகின்றார்கள். ஆட்சியாளர்கள் முன்னெடுக்கும் தான்தோன்றித்தனமான செயற்பாடு தமிழ்மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் பாதிக்கும் என்ற உண்மையினை இப்போதுதான் தென்னிலங்கைத் தரப்பு உணர்ந்துகொள்ளத் தொடங்கியிருக்கின்றது. உண்மையில் இப்போது சிக்கல்களை நேரடியாக எதிர்கொண்டு வரும் தரப்பாக சிங்களத் தரப்பே இருக்கின்றது. இதனை எப்படி எதிர் கொள்வது என்பது அவர்களுக்கு பெரும் சவாலாக அமைகின்றது. தமிழர்கள் காலம் காலமாக தென்னிலங்கை ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த அடக்குமுறைகளையும் பேரிடர்களையும் சர்வ சாதாரணமாக கடந்துவந்த காரணத்தினால் இப்போது எழுந்துள்ள நெருக்கடிகளை பெரியளவில் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், சிங்களத் தரப்புக்கு இவை எல்லாம் புதியவை என்பதால் அவர்கள் அச்சத்துக்கும் பீதிக்கும் உள்ளாகின்றனர்.

கொரோனா பேரிடர் ஏற்பட்ட காலத்தில் இருந்து எதிர்க்கட்சியினர் அரசுக் கெதிரான கோசங்களையும் கருத்துக்களையும் முன்வைக்கத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் இப்போதைய களநிலவரத்தினைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியினைப் தமதாக்கிக் கொள்வதற்கு முயற்சித்துவருகின்றனர். அதற்குச் சாதகமாகவே தொடர்ந்தும் ராஜபக்ஷ குடும்பத்தினர் செயற்பட்டு வருகின்றனர். அவர்களது எண்ணம் எல்லாம் தமது தேர்தல்காலத்து வெற்றியென்பது அறிதிப் பெரும்பான்மையானது என்பதே. ஆனால் அரசியல் களத்தில் எதுவும் நிலையானதல்ல என்ற பாடத்தினையும் இதற்கு முன்னைய தேர்தல்களில் பெற்றிருக்கின்றனர். இருந்தாலும் அத்தகைய பாடம் சரியான புத்தியினைப் புகட்டியதாகவும் தெரியிவில்லை. தொடர்ந்தும் தனித்த அதிகாரப்போக்கினை முன்வைத்து செயற்படுவதிலேயே குறியாகவும் உள்ளனர். கடந்த பொசன் தினத்தினை முன்னிட்டு மரண தண்டனைக் கைதியான துமிந்தசில்வாவை விடுதலை செய்ததனைத் தொடர்ந்து எழுந்த எதிர்ப்பு நிலையினைச் சமாளிக்க முடியாத ஜனாதிபதி அதற்கு நியாயமான காரணங்கள் எதனையும் முன்வைக்காது. 'யாருக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். யாருக்குப் பொதுமன்னிப்பு வழங்கக் கூடாது என்று எனக்குத் தெரியும். யாரும் எனக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை' என்று அதிகாரத் தொனியில் தெரிவித்திருக்கின்றார். ஜனநாயக நாட்டில் எத்தகைய அதிகாரமுடைய நபராக இருந்தாலும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படவேண்டும் என்பதோடு நாட்டு மக்கள் எல்லோருக்குமுரித்தான செயற்பாட்டினை பாரபட்சமின்றி முன்னெடுக்கவேண்டும். தனித்து விருப்புவெறுப்பு சார்ந்து செயற்படுவது எதிர்கால அரசியல் இருப்பினைக் கேள்விக்குள்ளாக்கும் என்பது வெளிப்படை. அதன் எதிரொலி தென்னிலங்கை எங்கும் கேட்கத்தொடங்கியிருக்கிறது. இது இவ்வாறிருக்க புதிதாக எழுந்துள்ள சர்ச்சை பசில்ராஜபக்ஷவினுடைய அரசியல் பிரவேசம். இது குடும்ப ஆட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னெடுக்கும் செயற்பாடு, இதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்ற எதிர்ப்புக்குரல்கள் தென்னிலங்கையில் எழத் தொடங்கியிருக்கின்றன. இங்கு எதிர்க்கட்சி மட்டுமல்ல அரசின் பங்காளிக் கட்சிகளுக்குள்ளும் புகைந்து கொண்டிருக்கும் நெருப்பாக இருக்கின்றது. இங்கு ஒரு நாடகமும் நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆளும் தரப்பு அமைச்சர்களின் விருப்பமாகவும் அவர்களே பசிலை அதிகாரமுள்ள அமைச்சுப்பதவிக்கு கொண்டுவருவதற்கு முனைப்புக் கொள்வதாகவும் வெளிகாட்டப்படுவதே அந்த நாடகம். எது எப்படியிருந்தாலும் பசிலும் சகோதரர்களுக்கு இணையான அதிகாரத்துடன் ஆட்சிபீடம் ஏறுவது உறுதி. அதற்கான அதிகாரமும் ஜனாதிபதியிடம் உண்டு. இதற்கும் இவர் நியாயமான காரணங்கள் சொல்லவேண்டியதில்லை. இப்போது பசிலுக்குத் தடையாக இருப்பது இரட்டைப்பிரஜா உரிமை ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் நினைத்தால் சட்டத்தினை தங்கள் பக்கம் வளைத்துக் கொள்ளவும் முடியும். இதனைத்தான் இத்தனைகால ஆட்சிப் போக்கும் வெளிப்படுத்துகிறது.

இந்த நிலையில் எதிர்ப்புக் குரல்கள் கொடுப்பவர்கள் வெறும் எதிர்ப்புக் குரல்களோடு நின்றுவிடப்போகின்றார்களா? அல்லது அரசுக்கெதிரான செயற்பாட்டில் இறங்கப்போகின்றார்களா? என்பதே இப்போதுள்ள கேள்வி? செயற்பாட்டில் இறங்குவதானால் அதற்கு பெருந்திரளின் ஆதரவு தேவை அதற்காகவேதான் அவர்கள் தமிழர் தரப்பினையும் கூட்டுச் சேர்க்க முனைகிறார்கள். இத்தகைய சந்தர்ப்பத் தினை தமிழர் தரப்பு எவ்வாறு பயன்படுத்தும் என்பது கவனத்துக்குரியது. கடந்த காலங்களில் கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தமிழ் அரசியல் தரப்பு தவறவிட்டிருக்கிறது. அதற்காகக் கூட்டுச் சேர்ப்பவர்கள் தமிழர்களுக்கு முழு அதிகாரத்தினையும் தாரை வார்ப்பார்கள் என்றில்லை. ஆனால் குறைந்தபட்சம் பேரம் பேசும் அதிகாரத்தி னையாவது முன்னெடுத்துச் செயற்படவேண்டும். மக்களின் நலன் சார்ந்த இலாபங்களை நோக்கிய நகர்வினை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை சிங்கள அரசியல் வாதிகளின் மனநிலை தமிழர் விடயங்களில் ஒத்த தன்மையுடையவை என்பதனையும் மனதில் வைத்துக் கொள்ளவும் வேண்டும். எது எப்படியோ தென்னிலங்கையில் ஆட்சியாளர்களுக்கு எதிரான கொதிநிலை அதிகரித் துக் கொண்டே வருகின்றது. அந்தச் சூட்டில் குளிர் காயமுடியுமா எனபதனை சரியாகக் கணக்கிட்டுச் செயற்படுவது தமிழ் தலைமைகளின் பொறுப்பாகும்.

இங்கு பார்வையாளர்களாய் இருப்பது பொருத்தமெனில் அவ்வாறும் இருக்கலாம். ■

# அதிகாரத்துக்கு வரவிருக்கும் இன்னொரு ராஜபக்ஷ

தந்திரன்

இலங்கை முற்று முழுதாக ராஜபக்ஸக்களின் குடும்ப ஆளுகைக்குள் உட்பட்டு வருகிறது என்பதனை பஸிலின் நாடாளுமன்ற வருகை இன்னும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது. கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி. மகிந்த ராஜபக்ஷ பிரதமத மந்திரி. அடுத்து ஏதோ ஒரு வகையில் பாராளுமன்றம் நுழைத்து அனைத்து அமைச்சுக்களிலும் தலையிடக் கூடிய அதிகாரத்தினை கொண்ட தலைமை அமைச்சராக்கப் பஸில் ராஜபக்ஷவினை ஆக்குவதற்கு முஸ்தீபுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பதவி கிட்டத்தட்ட ஒரு பிரதம மந்திரியின் அதிகாரங்களுக்கு ஒப்பானதாகும். இதனை விட நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு பொறுப்பாக உள்ளார்.



சரி இப்பொழுது விடயத்திற்கு வரலாம். பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக இருக்கின்ற பஸில் ராஜபக்ஷ சட்ட விதிகளுக்கு உட்பட்டோ உட்படாமலோ பாராளுமன்றத்துள் நுழைவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக அக்கட்சியின் 113 உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். ஜனாதிபதியும் அதற்குப் பச்சை கொடி காட்டலாம் என்றே உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது ஜனாதிபதியால் எல்லா அமைச்சுக்களையும் கண்காணிக்க முடியாது என்பதாலும், ஜனாதிபதி நாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் அனைத்து அமைச்சுக்களிலும் தலையிடக் கோரியே பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வந்து அமைச்சர் பதவியை பெற வேண்டும் என்று அந்த கட்சியினுடைய உறுப்பினர்கள் விரும்புகின்றனர். வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்காக பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வர வேண்டும் என அக்கட்சியின் தரப்பினர் விரும்புகின்றனர். சரி, அவ்வாறாயின் பஸில் ராஜபக்ஷவால் எவ்வாறு வீழ்ந்து போன பொருளாதாரத்தினை தனித்த ஒருவரின் வருகையால் கட்டி எழுப்ப முடியும்? அதற்கு தற்போதைய பொருளாதாரம் இடம் கொடுக்குமா? இவ்வளவு காலமும் பஸில் ராஜபக்ஷவின் தலையீடு அரசாங்கத்தில் இடம்பெறவில்லையா? என்ற பல கேள்விகளும் எழாமல் இல்லை.

தற்போது நாடு இருக்கும் நெருக்கடி நிலைமைகளில் இருந்து பஸில் ராஜபக்ஷவால் மட்டுமல்ல இந்த அரசில் உள்ள எவராலுமே நாட்டை மீட்டெடுக்க முடியாது எனவும் ராஜபக்ஷக்களின் குடும்பத்தில் தற்போது பிறந்திருக்கும் குழந்தைகள் அரசியலுக்கு வந்தாலும் நாட்டை நாசமாக்குவதைத் தவிர அவர்களால் வேறு எதனையும் செய்ய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம கூறுகின்றார்.

அதேவேளை இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கக் கூடிய பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றம் கொண்டுவருவதற்காக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும். அதற்கு சக்தி வாய்ந்த பிரமுகரான பஸில் ராஜபக்ஷவே பொருத்தமானவர் என்றும் பரப்புரை செய்கின்றனர் என எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சனத்தினை முன்வைக்கின்றது. அதாவது பஸில் ராஜபக்ஷ வந்தாலும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தினை நிமிர்த்த முடியாது என்பதே அவர்களின் கருத்தாகவும் அமைகின்றது.

மேலும் பஸில் ராஜபக்ஷ பொருளாதார அமைச்சராக வந்தால் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு நேர்ந்த கதியே பொருளாதாரத்திற்கு நிகழும் என எச்சரிக்கின்றனர். அதாவது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்து மூழ்குகின்ற கட்டத்திலேயே அதனை இழுக்க முற்பட்டனர். அப்பொழுது கப்பல் உடைந்து கடலுக்குள் மூழ்கியது. அது போலத்தான் அரசியலில் பஸில் ராஜபக்ஷவின் வரவும். இலங்கை எனும் கப்பலும் பொருளாதாரமும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது. இவற்றை இழுப்பதற்கான பொறுப்பினை பஸில் ராஜபக்ஷவிடம் கொடுத்தால் அவையும் மூழ்கிவிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.

எனவே இத்தகைய பல விமர்சனங்களுக்கு மத்தியிலேதான் பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற பிரவேசம் நிகழ இருக்கின்றது. இது அவரது தன்மானத்திற்கும் தனித்துவத்திற்கும் விழுந்த பேரடியாகவே காணப்படுகிறது. இவ் விமர்சனங்களை எதிர்கொண்டு தன்னை நிரூபிக்க வேண்டிய தேவை பஸில் ராஜபக்ஷவிற்கு எழுந்துள்ளது. நிரூபிப்பாரா பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

# கட்டவிழும் சுகாதாரப் பேரிடர்: பொருளாதாரக் கையறு நிலை போல சுகாதாரத்துறையிலும் ஏற்படுமா?



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாயிரத்துக்குட்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை பதிவாகிறது. இதற்குக் காரணம் நாளொன்றுக்கு 20 ஆயிரம் என்ற அளவில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர் பரிசோதனைகள் 14 ஆயிரமாகக் குறைக்கப்பட்டு விட்டமையே என்கிறது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம். இப்போது வரை சுகாதாரத் தரப்புக்கள் முழுமையான முடக்கத்தை வலியுறுத்துகின்றன. ஆகக் குறைந்தது 90 வீதமான முடக்கத்தை அமுல்படுத்துமாறு அவை வலியுறுத்துகின்றன. அவை ஆரூடம் கூறியது போல மரணங்களும் கிலி கொள்ளும் விதத்தில் அதிகரித்துச் செல்கின்றன.

மறுபுறத்தில் ஒரு சுகாதாரப் பேரிடர் கட்டவிழ்ந்து வருகின்றது. சமூகத்தில் குறிப்பிட்ட அளவான தொற்றாளர்கள் இருப்பதாகவே சுகாதாரத் தரப்பினர் கருதுகிறார்கள். பல இடங்களிலும் எடுக்கப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனைகளில் இனங் காணப்படுவோர் வீதம் இதனை உறுதிப்படுத்துகிறது. எனினும் சமூகம் முழுமைக்கும் பரிசோதனை செய்வதற்கான வசதிகளும், ஆளணியும் பற்றாக்குறையாக உள்ளன. மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோர் பரிசோதனைக்கு உட்படும் நிலை உள்ளது. அதற்கப்பால் வழக்கமான சளித் தொல்லைகளுடன் இருப்போர் பரிசோதனை செய்வதில்லை. அறிகுறியற்றோர், இலேசான அறிகுறிகளுடன் இருப்போரும் தம்மைப் பரிசோதிப்பதில்லை. எனவே, சமூகத்தில் தொற்றுடன் உள்ள பலரும் காவிகளாகத் திரியும் நிலை உள்ளது.

தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ள போதும் உடனடியான பரிசோதனைகள் இடம்பெறுவதில்லை. ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவமாதுக்கள், வைத்தியர்கள் தினசரி வேலைச் சுமைகளுடன் ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருக்கின்றனர். கிட்டத்தட்ட அவர்கள் சலிப்பு நிலைமைக்கு வருமளவுக்கு அழுத்தங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். முன்களப் பணியாளர்களான அவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள போதும், அவர்கள் தினமும் புழங்கும் தமது குடும்பத்தவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படாமையால் நாளாந்தம் தமது குடும்பத்துக்குத் தாமே தொற்றைப் பரப்பி விடுவோமா என்ற அச்சத்தில் உள்ளனர். இதனால் சில இடங்களில் மருத்துவர்கள் தமது குடும்பத்தினருக்கு தடுப்பூசிகளைப் போட்டுக் கொண்ட சம்பவங்கள் நடந்துள்ளன. காலியிலும், கிளிநொச்சியிலும் இத்தகைய சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்து ஊடகங்களில் பேசப்பட்டன.

மறுபுறத்தில் முன்களப் பணியாற்றும் கிராமசேவகர்கள், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி ஊழியர்கள் தமக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளப் போராட வேண்டியுள்ளது. பல அரச நிறுவனங்கள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மாகாண திணைக்களங்களும் இதற்குள் அடக்கம். வங்கிகள், நிதி நிறுவனங்களும் இயங்குகின்றன. தினசரி பல ஆயிரக் கணக்கான ஊழியர்கள் வீதிகளில் பயணிக்கவும், அலுவலகங்களில் சக ஊழியர்களுடன் ஊடாடவும், பொதுமக்களுடன் தொடர்பாடலில் ஈடுபடவும் செய்கின்றனர்.

பயணத் தடை அமுலில் இருந்த வேளை சந்தைகள் இயங்கவில்லை. சந்தைச் செயற்பாடுகள் ஆங்காங்கு நடைபெற்றன. ஆனால் அதன் பலாபலன்கள் உரியவாறு இல்லை. உற்பத்தியாளருக்கு உரிய வருமானமோ, இலாபமோ இல்லை. வியாபாரிகளுக்கும் அவ்வாறே. அனுமதி பெற்று வர்த்தக நிலையங்கள் சில திறக்கப்பட்டன. அனுமதி பெறாமல் ஒற்றைக் கதவில் வியாபார நடவடிக்கைகளை பல வர்த்தக நிலையங்கள் மேற்கொண்டன. பார்சல் சேவைகளுடன் உணவகங்கள் தமது வியாபாரத்தை மேற்கொண்டன. ஆக, கூட்டங்கூடி நடைபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. சிறு கூட்டமாக அல்லது தொடர் ஊடாட்டங்களுடன் வியாபாரமும் இதர சேவைகளும் நடைபெற்றன. மாவட்டங்கள், மாகாணங்கள் கடந்த வியாபாரமும், ஏனைய சேவைகளும் கூட நடைபெற்றன. இவையெல்லாம் தொற்றுப் பரவலுக்கான புறநிலைகள். வடமராட்சியில் ஒரு வெதுப்பகத்தில் சங்கிலித் தொடராக தொற்றுப் பரவலாமெனில் ஏனைய இடங்களில் பரவாதா? ஒரு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து அதிகளவான தொற்றாளர் இனங் காணப்படின் ஒரு அலுவலகத்தில் இருந்து ஏற்படாதா? ஆக,இவை கேள்விகளாகவே தொடர்கின்றன.

இப்போது பயணத்தடையும் தளர்த்தப்பட்டு, ஏனைய எல்லாச் செயற்பாடுகளும் இடம்பெற ஆரம்பித்து விட்டன. பயணத்தடைக்கு முன்னான நிலைமையும், பின்னான நிலைமையும் ஏறக்குறைய ஒன்றுதான்.

இந்த நிலைமையில் தொற்றாளர்களை எங்கு இனங் காண்பது என்பது தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் பெரிதும் அழுத்தங்களையே எதிர்கொள்கின்றனர். அதற்கப்பால் பி. சி. ஆர் பரிசோதனை செய்யப்பட்டாலும், பிசிஆர் முடிவுகள் வருவதற்கு சில தினங்கள், குறிப்பாக மூன்று தினங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. அதற்குள் தொற்றாளர் பல இடங்களுக்கு செல்லவும், பலருடன் ஊடாடவும் நேர்கிறது. இது தொற்றாளர்களின் சமூகப் பொறுப்பான போதும் பலரும் அதில் அக்கறை காட்டுவதில்லை. பிசிஆர் பரிசோதனையில் சரியான முடிவுகள் கிடைக்காமல் மீளவும் எடுக்கப்பட்ட நிலைமைகளும் உள்ளன.

தொற்றாளர் இனங் காணப்பட்டாலும் உடனடியாகத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதில் தாமதம் காணப்படுகிறது. தனிமைப்படுத்தல் நிலையங்களில் காணப்படும் இடப்பற்றாக்குறையே இதற்குக் காரணமாகும். அழைத்துச் செல்லப்படும் வரை தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தலில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தொற்றாளர் வெளியே திரியாவிடினும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வெளியில் சென்று வரும் நிலை பல இடங்களிலும் நடைபெறுகிறது. இவையெல்லாம் தொற்றுப் பரவல் அடைவதற்கான வலுவான காரணங்களாக உள்ளன.

தனிமைப்படுத்தல் நிலையங்கள் என்பவை தொடர்பில், ஏற்கனவே அங்கு சென்றவர்கள் கூறும் அனுபவங்களால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதற்குப் பலரும் தயங்குகின்றனர். குறிப்பாக, அங்கு வழங்கப்படும் உணவு தொடர்பில் பலரிடமும் அதிருப்தி உள்ளது. தனிமைப்படுத்தல் என்பது தவிர அங்கு பெரிதாகச் சிகிச்சைகள் இடம்பெறுவதில்லை என்ற அபிப்பிராயங்களும் மக்கள் மனதில் உள்ளது. இதனால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதனைத் தவிர்த்து, தமது நோய் நிலைமையை வெளிக்காட்டாது இருப்பவர்களும் உளர். அவர்கள் தமது வீட்டில் இருந்து சுடுநீர் ஆவி எடுத்தல், சுடுநீரை அடிக்கடி குடித்தல், நோயெதிர்ப்பு விற்றமின்களை எடுத்தல் முதலானவை போதுமானது என நினைக்கின்றனர். இந்த நினைப்பு சமூகத்தில் இனங்காணப்படாத பல தொற்றாளர்களை உருவாக்கவும், வீட்டில் மரணங்கள் நிகழவும் வாய்ப்பளிக்கின்றன.

இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்திய புதிய திரிபடைந்த டெல்டா வைரஸ் பரவல் இலங்கையிலும் ஏற்பட்டுள்ளமை மேலுமொரு தலையிடியாக வந்துள்ளது. இவ் எல்லாப் பிரதேசங்களிலும் தொற்றியிருக்க வாய்ப்புள்ளது என்றே மருத்துவ வட்டாரங்கள் கருதுகின்றன. இதன் தாக்கத்தை இலங்கை அடுத்த ஒன்பது வாரங்களில் அறியும் என்று இராஜாங்க அமைச்சரே கூறுமளவுக்கு நிலைமை மோசமானது. இந்திய இலங்கை மீனவர்களுக்கு இடையிலான சட்ட ரீதியற்ற தொடர்பாடலின் விளைவாக இந்தப் பரவல் மேலும் இடம்பெறலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.


ஆக, ஒரு புயற்சூழற்சியை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டில் நாடு உள்ளது. எந்த வேளையிலும் நாடு முடக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பொருளாதாரம் அதல பாதாளத்தில் உள்ள நிலையில் நாட்டை முடக்குவது அரசாங்கத்துக்குப் பெருஞ் சவாலாகவே உள்ளது. மக்கள் பொருளாதார ரீதியான பிரச்சினைகளை முன்வைத்து வீதிக்கு இறங்கி விட்டனர். விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், சாதாரண பொதுமக்கள் எனப் பலரும் வீதிக்கு இறங்கி விட்டனர். பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு தர முடியாத கையறு நிலையில் அரசாங்கம் உள்ளது.

மறுபுறம் ஒரு சுகாதாரப் பேரிடர் கட்டவிழ்ந்து வருகிறது. இது சுகாதாரத் தரப்பினரின் செயற்திறனைப் பாதித்து, சுகாதார ரீதியிலான கையறு நிலையை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம் உள்ளது. ஜனாதிபதி தனது பிந்தைய உரையில் கூறியது போல விரைந்து தடுப்பூசிகளைப் போட்டாலன்றி கட்டவிழும் பேரிடரை யாராலும் தடுக்க முடியாமல் போகும். ■



# எரிபொருள் விலையேற்றமும் எதிரணியின் ஆர்ப்பாட்டமும்?!

● அவதானி



கோவணத்துடன் வந்திறங்கிய தகநாயக்கா

தமிழ்நாட்டில் ஒரு முதலமைச்சர் இருந்தார். அவரது பெயர் காமராஜர்.

இலங்கையில் ஒரு பிரதமர் இருந்தார். அவரது பெயர் தகநாயக்கா.

இவர்கள் இருவரையும் பற்றி இன்றைய தலைமுறையினருக்குத் தெரியுமா..? சமகால அரசின் அமைச்சர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிரணியிலிருப்பவர்களுக்காவது தெரியுமா..? இந்த இரண்டு பெயர்களுக்குப் பின்னாலிருந்த எளிமையுமாவது தெரியுமா..?

எப்பொழுதும் மக்களுக்கு நினைவு மறதி இருக்கவேண்டும் என நினைப்பவர்கள்தான் அரசியல்வாதிகள். தேர்தல் காலங்களில் மேடைகளில் தாம் வழங்கும் வாக்குறுதிகளை மக்கள் மறந்துவிடல் வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள்.

காமராஜர் தமிழக முதல்வராகப் பதவியில் இருந்த போது அவர் பயணித்த அரசாங்க வாகனத்திற்கு முன்னாலும் பின்னாலும் வாகனங்கள் பாதுகாப்பு சமிக்ஞை ஒலி எழுப்பிக்கொண்டு வந்திருக்கின்றன.

அந்தத் தொடர் ஒலியினால் எரிச்சலடைந்த காமராஜர் தான் வந்த காரை நிறுத்தச்சொல்லி வெளியே இறங்கி, "அது என்ன சத்தம்..? நீங்கள் எல்லாம் யார்?" எனக்கேட்டுள்ளார்.

முன்னும் பின்னும் வந்த வகனங்களிலிருந்த பொலிஸ் பாதுகாப்பு அதிகாரிகள் " அய்யா உங்கள் பாதுகாப்புக்காக இவ்வாறு வருகின்றோம்" என்றனர்.

"எனக்கு எதற்குப் பாதுகாப்பு. உடனே திரும்பிச் செல்லுங்கள். உங்களுக்கு வேறு ஏதும் உருப்படியான வேலை இருந்தால் செய்யுங்கள் " என்று சொல்லிக் கலைத்துவிட்டார்.

இலங்கையில் ஒரே நாளில் பொதுத் தேர்தலை நடத்தி அரசின் நிதிவளத்தை சேமித்த கலாநிதி தகநாயக்காவும் மிகவும் எளிமையான மனிதர்தான். இவர் கல்வி அமைச்சராக விருந்த போது பாடசாலை மாணவர்களுக்கு மதிய வேளையில் பசியாற்ற பணிஸும் பாலும் வழங்கியவர்.

அதனால் மாணவச்செல்வங்களினால் பணிஸ் மாமா எனவும் அழைக்கப்பட்டவர்.

அவர் பிரதமராகத் தெரிவானதும், அதிகாரிகள் அவரை பிரதமர் தங்கும் அலரிமாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

" எனக்கேன் இந்தப் பெரிய மாளிகை. நான் குடும்பஸ்தனும் இல்லை. எனக்கு உறங்குவதற்கு சிறிய படுக்கையும் உணவுண்ண பாத்திரமும் தண்ணீர் அருந்த தம்ளரும் போதும். என்னிடமிருக்கும் மாற்றுடைகளும் தாராளம். எனக்கு இந்த மாளிகையெல்லாம் வேண்டாம். தேவைப்படின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் சிராவஸ்தி விடுதி அறையையே பயன்படுத்திக் கொள்கின்றேன் " என்றார்.

" அய்யா நீங்கள் இப்போது நாட்டின் பிரதமர். உங்களைச் சந்தித்துப்பேசுவதற்கு வெளிநாட்டுத் தலைவர்கள், பிரதிநிதிகள், தூதுவர்கள் வருவார்கள். அதற்காகவாவது நீங்கள் இந்த அலரிமாளிகையில் தங்கவேண்டும் என்றார்கள். பின்னர் அவர் வேண்டா வெறுப்பாக அங்கே தங்கினார்.




அவரது எளிமையை பார்த்த அவரது அணியைச் சேர்ந்தவர்கள், இந்த மனுஷனைப் பதவியில் வைத்திருந்தால், எம்மால் சுருட்ட முடியாது எனக்கண்டு, அடுத்த தேர்தலில் தோற்கடித்துவிட்டனர்.

தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டுக் கொண்டிருந்த பிரதமர் தகநாயக்கா, மறுநாள் காலையில் சபாநாயகருக்கு அறிவித்துவிட்டு, தனது சின்னஞ் சிறிய பெட்டியில் மாற்றுடைகளையும் எடுத்துக் கொண்டு, அங்கிருந்த ஊழியர்களிடம் , "தேர் தலில் தோற்றுவிட்டேன். இனிமேல் நான் இங்கிருப்பது முறையல்ல. ஊருக்குப்புறப்படுகிறேன் " என்று விடை கொடுத்துவிட்டு இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்ஸில் ஏறி தமது சொந்த ஊரான காலிக்குப்புறப்பட்டார்.

பின்னாளிலும் அவர் அதே தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவானபோதிலும் தொடர்ந்தும் பஸ்ஸிலேயே பயணஞ்செய்து கொண்டிருந்தார்.

ஒரு தடவை அவர் இலங்கை அரசு, ஆடைகளின் விலையை உயர்த்தியதையடுத்து, கவனஈர்ப்புப் போராட்டமாக கோவணம் அணிந்து நாடாளுமன்றம் வந்தார்.

ஆனால், சபாநாயகர் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை.

இவ்வாறு அரசின் மீதான கண்டனத்தை ஆட்களைத் திரட்டிக்கொண்டு தெரிவித்துக்கொண்டிராமல், தனி மனிதனாகப் பேராடினார். அதனால் அவரது போராட்டத்திற்கு மக்கள் மத்தியில் மரியாதையும் இருந்தது.

தான் எவ்வாறு எளிமையாக வாழ்கின்றேனோ, அவ்வாறே ஆட்சியாளர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்று முன்மாதிரியாக வாழ்ந்து காண்பித்த தகநாயக்கா ஒரு உதாரண புருஷர்.

அவர் அன்று தொடக்கிவைத்த கவனஈர்ப்பு போராட்டத்தையே சமகாலத்தில் எதிரணியினர் வேறு விதமாக வீதிகளில் இறங்கி நடத்துகின்றனர்.

எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து ஒரு பிரதேச சபையின் எதிரணியினர் துவிச்சக்கர வண்டியில் சபைக்கூட்டங்களுக்கு வந்துள்ளனர்.

இதுவெல்லாம் வெறும் ஊடகப்பிரசாரம்தான். முன்பு ஒரு தடவை 1970 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பதவிக்காலத்தில் எரிபொருள் விலையேற்றம் வந்தபோது, எதிரணியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாட்டுவண்டியில் வந்தனர்.

மற்றும் ஒரு தடவை நாடாளுமன்றில் மக்கள் விரோதச் சட்டம் ஒன்று பரிந்துரைக்கப்பட்டபோது, மலர் வளையமும் பிரேதப்பெட்டியும் எடுத்துவந்தனர்.

இக்காட்சிகள் யாவும் அந்தந்த வேளைகளில் ஊடகங்களில் பரபரப்பாக பேசப்படும். காலப்போக்கில் அரசும் எதிரணியும் மக்களும் மறந்துவிடுவார்கள்.

உண்மையிலேயே எரிபொருள் விலை உயர்வைக் கண்டிக்கும் இவர்கள் தங்கள் சொந்தப்பாவனைக்காக எத்தனை வாகனங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாகச் சொல்வார்களா..?

மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் தருணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வெளிநாடுகளிலிருந்து சொகுசு வாகனங்கள் தருவிக்கப்படுகிறது என்ற செய்தியும் கசிந்துள்ளது.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பவனி வரும் சொகுசு வாகனங்களின் பின்னாலும் முன்னாலும் எத்தனை வாகனங்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் பயணித்து எரிபொருளை வீணாக்குகின்றன.? கரியமில வாயுவினால் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துகின்றன..?

இது பற்றி என்றைக்காவது, ஆட்சியாளர்களோ, எரிபொருள் விலையேற்றம் குறித்து உரத்துப்பேசும் எதிரணியினரோ சிந்திக்கின்றார்களா..?

இன்றைய எதிரணியினர் நாளை மற்றும் ஒரு நாள் ஆட்சிபீடத்திற்கு வரும்போது எரிபொருளின் விலையை ஏற்றமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?!

ஒரு காலத்தில் இலங்கையில் அரிசிக்குத் தட்டுப்பாடு வந்தபோது, சந்திரனிலிருந்தாவது அரிசி இறக்குமதி செய்வோம் என்று சொன்னவரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பிக்குகளையும் இணைத்துக்கொண்டு அரசைக் கைப்பற்றுவேன் என்று சொல்லி பதவிக்கு வந்து, பிக்குகளாலே கொல்லப்பட்டவருமான பண்டாரநாயக்காவுக்கும் பிறந்து, பின்னாளில் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்கா விஜயகுமாரணதுங்காவும் பதவிக்காலத்தில் முன்னும் பின்னும் வாகன அணி தொடர பவனிவந்தவர்தான்.

> **"தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டுக்கொண்டிருந்த பிரதமர் தகநாயக்கா, மறுநாள் காலையில் சபாநாயகருக்கு அறிவித்துவிட்டு, தனது சின்னஞ்சிறிய பெட்டியில் மாற்றுடைகளையும் எடுத்துக்கொண்டு, அங்கிருந்த ஊழியர்களிடம், "தேர்தலில் தோற்றுவிட்டேன். இனிமேல் நான் இங்கிருப்பது முறையல்ல. ஊருக்குப்புறப்படுகிறேன்" என்று விடைகொடுத்துவிட்டு இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் ஏறி தமது சொந்த ஊர் காலிக்குப்புறப்பட்டார்."**

இன்று அவர் லண்டன் மாநகரில் வீதியில் நடைப் பயிற்சி செய்கிறார்.

எத்தனையோ வாகனங்களை தன்வசம் வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்திற்கு ஒரு தடவை கெலிகொப்டரில் வந்திறங்கினார் மகிந்த ராஜபக்ஷ.

இவ்வாறு பதவியிலிருக்கும்போது எரிபொருளை இவர்கள் வீண் விரயம் செய்ததை கண்டிக்காதவர்கள், இன்று திடீரென விலையேறிய எரிபொருளுக்காக அதற்குப்பொறுப்பான அமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவந்தார்கள்.

வெளிநாடுகளில் அமைச்சர் பிரதானிகள் தங்கள் வாகனத்தை தாங்களே செலுத்தி வருவதையும் அவர்களே எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதையும் காணமுடியும்.

அவர்களுக்கு முன்னும் பின்னும் வாகனங்கள் அணிவகுப்பதில்லை.

ஆட்சியாளர்களும் எதிரணியினரும் எரிபொருளை முடிந்தவரையில் சிக்கனமாகப் பயன்படுத்தினால், தேசத் திற்கு நன்மை விளையும்.

■

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

**“அ.செ. மு தெரிந்தவர்களிலும் பலர் இன்று மறந்து விட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கு அ.செ.முவின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரியும். இப்போது கூட அவர்களிடம் அ.செ.மு என்ற பேரைச் சொன்னால் போதும். எழுந்து உட்கார்ந்து கொண்டு அவரைப் பற்றிப் பேசத் தொடங்கி விடுமளவுக்கு அ.செ.முவின் எழுத்துகளின் மீது ஈர்ப்புண்டு. அந்தளவுக்கு சிறுகதைகளில் தன்னை அடையாளப்படுத்தியவர் அ.செ.மு. இன்றும் கூட அவருடைய பல கதைகள் நினைவு கொள்ளப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. அதில் ஒன்று “காளிமுத்துவின் பிரஜா உரிமை” என்ற கதை.”**




# அ.செ.மு 100

அ.செ.மு வின் நூற்றாண்டு இது. ஈழத்தின் முக்கியமான சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர் அ.செ.மு. அதைப் போல மூத்த முன்னோடி ஊடகவியலாளர்களில் முக்கியமானவர். 1940களிலேயே ஊடகத்துறையில் இயங்கி, தனி அடையாளங்களை உருவாக்கியவர். ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு, எரிமலை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களில் பணியாற்றிய அ.செ.மு, “எரிமலை” என்று தனியாக தன் சொந்தச் செலவிலும் ஒரு பத்திரிகையை நடத்தியிருக்கிறார். திருகோணமலையிலிருந்து அது வெளிவந்தது. திருகோணமலையின் முதற்பத்திரிகையும் அதுதான் என்று கூறப்படுகிறது. ஆனால் அது நீடிக்கவில்லை.

காரணம், இன்றைய பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளர்களைப்போல அ.செ.மு பெரும் தனவந்தராக அந்தப் பத்திரிகையை ஆரம்பிக்கவில்லை. அதற்கான பொருளாதார வசதி அவரிடம் கிடையாது. குறைந்தது அன்று செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த அரசியல் தரப்புகளின் ஆதரவைக் கூட அவர் பெற்றிருக்கவில்லை. அவரிடமிருந்த ஒரே மூலதனம் ஆர்வம் மட்டுமே. அதை வைத்தே ஒரு சுயாதீனப் பத்திரிகையாக எரிமலையை ஆரம்பித்தார். அவ்வாறான சுயாதீனப் பத்திரிகைகளுக்கு நம்முடைய தமிழ்ப் பெரும் சமூகத்தில் கிடைக்கும் ஆதரவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா. அந்த விதியின்படி அது ஆறு இதழ்களோடு நின்று தன்னுடைய வரலாற்றுப் பெருமையைப் பெற்றது.

ஆனால், அ.செ. முவுக்கு வாசல்கள் ஆயிரம். அதன்படி அவர் ஒரு கதவு மூடப்படும்போது இன்னொரு கதவு என்ற மாதிரி அல்லது ஒரு கதவு மூடப்பட்டாலும் இன்னொரு கதவு திறக்கப்பட வேண்டும் என்று சிந்திப்பவர் என்பதால், சிற்றிலக்கிய இதழாளராகவும் இருந்திருக்கிறார். ஈழத்தின் முன்னோடி இலக்கிய இதழான “மறுமலர்ச்சி”க்கும் அ.செ.முவே மையம். இதற்கெல்லாம் முக்கிய காரணம், அவர் அடிப்படையில் எழுத்தாளர். இலக்கியத்தில் பேரார்வம் கொண்டவர் என்பதே.

இப்படியெல்லாம் இருந்த அ.செ.முவை இன்று பலருக்கும் தெரியாது. அதாவது நூற்றாண்டு நாயகனாக நினைவு கூரக்கூடிய ஒரு சிறந்த எழுத்தாளரை - ஒரு முன்னோடி ஊடகவியலாளரை பெருந்தமிழ்ச் சமூகத்துக்கு நினைவில் வைத்திருக்க முடியாமலிருக்கிறது. இது எவ்வளவு துயரம்? எவ்வளவு அவலம்?

அ.செ. மு தெரிந்தவர்களிலும் பலர் இன்று மறந்து விட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கு அ.செ.முவின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரியும். இப்போது கூட அவர்களிடம் அ.செ.மு என்ற பேரைச் சொன்னால் போதும். எழுந்து உட்கார்ந்து கொண்டு அவரைப் பற்றிப் பேசத் தொடங்கி விடுமளவுக்கு அ.செ.மு வின் எழுத்துகளின் மீது ஈர்ப்புண்டு. அந்தளவுக்கு சிறுகதைகளில் தன்னை அடையாளப்படுத்தியவர் அ.செ.மு. இன்றும் கூட அவருடைய பல கதைகள் நினைவு கொள்ளப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. அதில் ஒன்று “காளிமுத்துவின் பிரஜா உரிமை” என்ற கதை.

இது மலையக மக்களை நாடற்றவர்களாக்கும் பிரஜா உரிமைச் சட்டத்தைப்பற்றிப் பேசுகிறது. இதற்குப் பிறகுதான் மலையகத்திலேயே இந்தப் பிரச்சினையைப் பற்றிய எழுத்துகள் மேலெழுந்தன. அந்த வகையிலும் அ.செ.முவே இதற்கும் முன்னோடி. இதை விட “மாடு சிரித்தது”, “மனித மாடு” “பழையதும் புதியதும்” என இன்றும் புதுமை குன்றாத பல கதைகளை எழுதியிருக்கிறார் அ.செ.மு. சிறுகதைகள் மட்டுமல்ல, நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைகள் என ஒரு காலத்தில் ஏராளமாக எழுதித் தள்ளியவர். அவற்றில் கவனத்தைக் குவிக்கக் கூடிய அழகியலையும் மொழிச் சிறப்பையும் வெளிப்படுத்தியவர். ஆனால் அவற்றையெல்லாம் நூலாக்கும் வாய்ப்பு அ.செ.முவுக்குக் கிடைக்கவில்லை. இதற்குச் சில காரணங்கள் உண்டு. ஒன்று அவர் வசதியான வாழ்க்கையில் ஒரு போதுமே இருந்தவரில்லை. வறுமையும் ஏழ்மையும் தனிமையுமே அவருடைய வாழ்க்கையாக இருந்தது. இரண்டாவது, எந்த அரசியல் நிலைப்பாட்டையும் அ.செ.மு ஆதரித்தவரில்லை. அவருடைய கொள்கை எப்படியானது என்றால், “அரசியல் சமூக விசயங்களை குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை மறுமலர்ச்சி சிருஷ்டிக்கப் போவதில்லை. ஆனால், இலக்கியத்தின் வளர்ச்சியிலே சமூகத்தின் வளர்ச்சி பின்னி வரும் என்பதை மறுமலர்ச்சி நிரூபிக்கும்” என்பதாகும். இதை அவரே மறுமலர்ச்சி இதழில் குறிப்பிட்டிருக்கிறார். என்பதால் அவர் எந்த அரசியல் கட்சிகளின் உள்ளுமில்லை. பின்னுமில்லை என்பது தெளிவு. மூன்றாவது தன்னுடைய காரியங்களைத் தந்திரமாகவோ நியாயமாகவோ பார்த்துக் கொள்ளும் ஆர்வமும் கரிசனையும் அவரிடமிருந்ததில்லை. இவ்வளவு ஊடகத் தொடர்புகளோடும் எழுத்துச் சிறப்போடும் இருந்தவர் தொடர்ந்தும் ஏழ்மையிலும் தனிமையிலும் வாழ்ந்திருக்கிறார் என்பதைச் சரியாக உணர்ந்து கொண்டால், அவருடைய இயல்பையும் மனநிலையையும் விளங்கிக்கொள்ள முடியும். இதனால்தான் அவரால் ஒரேயொரு நாவலைத் தவிர வேறெந்த நூலையும் வெளிக் கொணர முடியவில்லை. பின்னாளில் யாழ்ப்பாணக் கலாசாரப் பேரவை அவருடைய சிறுகதைகளில் ஒரு பகுதியை தொகுத்து “மனித மாடு” என்று வெளியிட்டது. ஏனையவை எல்லாம் அந்தந்த இதழ்கள், பத்திரிகைகளில் வெளிவந்த அளவிலேயே உள்ளன.

1921 இல் தெல்லிப்பளையில் பிறந்த அ.செ.மு படித்தது மகாஜனாக் கல்லூரியில். வாழ்ந்தது அளவெட்டியில். செயற்பட்டது யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களில். இறந்தது திருகோணமலையில். அவர் ஒரு பரந்த தளத்தில், விரிந்த மனதோடு பன்முக ஆளுமையாகச் செயற்படுவதற்கு இந்த இடவிரிவுகளும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

இப்பொழுது அ.செ.மு வுக்கு நூற்றாண்டு என்பதால் இதுவரையுமான குறையை நாம் நிவர்த்தி செய்தே ஆக வேண்டும். அவருடைய எழுத்துகளை - சிறுகதைகளையும் நாவல்களையும் - தேடித் தொகுத்து நூலாக்க வேண்டும். தொடர்ந்து அவர் எழுதிய கட்டுரைகளை நூலாக்கம் செய்வது அவசியம். அ.செ.முவைப்பற்றி இதுவரையிலும் எழுதிய கட்டுரைகளையும் மதிப்பீடுகளையும் இனி யாராவது எழுதக் கூடியதாக இருந்தால் அவற்றையும் சேர்த்துத் தனி நூலாக்கலாம். இதை விட அவருடைய ஊடகத் துறைப்பங்களிப்பைப் பற்றிய ஆய்வும் பதிவும் முக்கியமானது. அதையும் செய்ய வேண்டும். இதில் கதைகளையும் நாவல்களையும் செம்பதிப்பாகக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வருவது சிறப்பு. அது அ.செ.மு என்ற முன்னோடிக்கும் பங்களிப்பாளருக்கும் நாம் செய்கின்ற மரியாதையுமாக இருக்கும்.

இந்தியாவில் - தமிழகத்தில் முன்னோடிப்படைப்பாளர்களின் நூல்கள் இந்த மாதிரிச் செம்பதிப்புகளாக வெளியிடப்படுகின்றன. மட்டுமல்ல, அவர்கள் மறுவாசிப்புக்குட்படுத்தப்படுகிறார்கள். தொடர் மதிப்பீடு செய்யப்படுகிறார்கள். அவர்களுடைய ஏனைய எழுத்துகள் தேடி எடுக்கப்பட்டு அவை வரலாற்றுத் தரவுகளோடு நூலாக்கப்படுகின்றன. புதுமைப்பித்தனின் கதைகள், கட்டுரைகள், கடிதங்கள், கவிதைகள், வாழ்க்கை விவரம் எனப் பலவும் இவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளமையை இங்கே குறிப்பிடலாம். இதில் இரா. வேங்கடாசலபதி முக்கியமான ஒரு முன்னுதாரணம். இப்படிப் பலருடைய எழுத்துகளும் பங்களிப்புகளும் தொகுக்கப்பட்டு நூலாக்கி அளிக்கும் பணிகள் நடக்கின்றன. இப்பொழுது தி.ஜானதிராமன் நூற் றாண்டையொட்டி “ஜானகி ராம்” என்ற நூலொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆகவே அ.செ.முவின் நூற்றாண்டையொட்டி அவருடைய எழுத்துகளைத் தேடித் தொகுக்கும் வேலைகள் நடக்க வேண்டும். கடந்த 27.06.2021 அன்று லண்டன் - தமிழ்மொழிச் செயற்பாட்டகம் அ.செ.முவைப்பற்றிய, அவருடைய எழுத்துகளைக் குறித்த கலந்துரையாடல் ஒன்றைச் செய்திருந்தது. இதன்போது அ.செ.முவின் நூற்றாண்டையொட்டி அவருடைய எழுத்துகளைத் தொகுப்பது நல்லது. அது அவசியமான ஒன்று என கருணாகரன் வலியுறுத்தினார். இதை அந்த zoom உரையாட லில் பங்கேற்றிருந்த நாகலிங்கம் கெங்காதரன் என்பவர் ஏற்றுக்கொண்டு அ.செ.மு வின் ஒரு நாவலை வெளியிடுவதற்கு முன் வந்தார். இதைத் தொடர்ந்து கெங்காதரனின் சகோதரர் நாகலிங்கம் சபேசனும் அ.செ.முவின் ஏனைய எழுத்துகளைத் தொகுப்பதற்கான பங்களிப்புகளைச் செய்வதற்கு தானும் பிற நண்பர்களும் உதவ முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் ஏனையவர்களும் இணைவது அவசியம். அப்பொழுதுதான் சிரமங்கள் குறையும். வேலைகளை பலரும் பொறுப்போடு பங்கிட்டுக் கொள்வதன் மூலம் சுமைக்குறைவோடு பணிச் சிறப்புகளும் ஏற்படும். விரைவாகக் காரியங்களும் நிறைவேறும்.

இதெல்லாம் அ.செ.முவின் நூற்றாண்டுக்கான அடையாளங்களாக இருக்கும். அதாவது அவருடைய எழுத்துகளின் வழியாக அவரை அறிவதும் அவரைச் சென்றடைவதுமாக இருக்கும். ஒரு முன்னோடிக்கு, ஒரு நல்ல எழுத்தாளருக்கு, தன்னமைதியோடு வாழ்ந்த ஒருவருக்கு நாம் செய்ய வேண்டிய வேலையும் செலுத்த வேண்டிய மதிப்பும் இதுதானே. ■

# தமிழ்த்தேசியக் கட்சிகளும் அவை முன்னெடுக்கும் எதிர்ப்பரசியலும்

தாமிரன்









எதிர்ப்பரசியல் என்ற சொல்லாடல் இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் வழக்கொழிந்து போன ஒன்றாகவே அவதானிக்க முடிகின்றது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளான தமிழ்த்தேசிய கூட்டமைப்போ தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியோ எதிர்ப்பரசியலைச் செய்யவில்லை என்பதே உண்மை. எதிர்ப்பரசியல் என்பது வேறு, எதிர்க்கட்சி அரசியல் என்பது வேறு. எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தி செய்கின்ற அரசியலைத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் செய்து வருகின்றது. பாராளுமன்ற பொறிமுறைக்குள் இருந்து கொண்டே அரசுக்கெதிராகப் பேசுவதும் நடைமுறையில் இருக்கின்ற அரசை எதிர்ப்பதற்காக எதிர்க்கட்சி எடுக்கின்ற தீர்மானங்களுக்கு ஒத்தோடுவதும் எதிர்ப்பரசியலாக அமையாது.

தமிழ்த்தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரையில் அவை காட்டுகின்ற அரசுக்கெதிரான எதிர்ப்பு என்பது, அரசின் நலன்களை இயன்றவரையில் பெற்றுக் கொண்டு, அரசை விமர்சிப்பது போன்றதான பாசாங்குத் தனத்தினையே வெளிப்படுத்துகிறது. யுத்த முடிவுக்குப் பின்னரான ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை எதிர்ப்பதற்காக பொன்சேகாவை ஆதரித்த செயற்பாடானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மேற்கொள்ளும் எதிர்ப்பரசியலின் மீது கேள்விளை முன்வைக்கிறது? எதிர்க்கட்சி அரசியலே என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத வடுவை ஏற்படுத்தியிருக்கின்ற யுத்தத்தை முன்னெடுத்துச் செயற்பட்டவர்களான மகிந்தவோ, கோத்தவோ, பொன்சேகாவோ விகிதாசார ரீதியில் வேறுபாடான துயரை விளைவித்தவர்களல்ல. மூவருமே துன்பங்களுக்கும் தொடரும் அவலங்களுக்கும் காரணமானவர்கள். எனவே மகிந்தவுக்கும் பொன்சேகாவுக்குமான முரண்பாட்டை சாதகமாக்கிக் கொண்டு தங்கள் நலன்சார்ந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. ஆனால் விளைவு இவர்கள் எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் எதிர்மாறாகவே நடந்தது. இவர்களிடம் எந்த நியாயத் தராசும் இல்லை தங்கள் நலன் சார்ந்த எல்லாவற்றையுமே இவர்கள் நியாயமாகக் கொள்வார்கள் என்பதே உண்மை. கடந்த மைத்திரி அரசாங்கத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகவே இருந்தார் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் பெறத்தக்க எல்லாச் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் சார்ந்த நலன்களில் எந்தளவுக்கு அழுத்தத்தை பிரயோகித்தார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்னும் தொடராக நீண்டுகொண்டிருக்கின்ற காணாமல் போனோர் பற்றியோ, விடுவிக்கப்படாத தமிழர்களின் நிலங்கள் குறித்தோ, தொல்பொருள் இடங்கள் என்ற அடையாளப்படுத்தலோடு தொடரப்படுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள் குறித்தோ, அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தோ எவ்வகையான தீர்மானங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சுயாதீனமாக மக்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களில் பங்கேற்று பதாதை உயர்த்துவதும் குரல்கொடுப்பதும், தாம் மக்களோடு இருக்கின்றோம் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியே தவிர வேறு ஒன்றுமில்லை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்திலும் கடைசியில் நடந்த இழுபறிகள் தனிநபர் போராட்டமாக அதை மாற்றுவதற்கான எத்தனமாக அமைந்தது.

மக்கள் நலன் குறித்து சிந்திக்காத எந்த கட்சியாலும் எதிர்ப்பரசியலைச் செய்யமுடியாது என்பதே வெளிப்படை. தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் எந்தக் கட்சியிடமும் உண்மை இல்லை. நேர்மையில்லை. செயற்றிறன் இல்லா அரசியல் கட்சிகளாக இருப்பதென்பதும் இல்லாமல் இருத்தலைப் போன்றதுதான். கடந்த தேர்தலில் தமிழ்த்தேசியக் கட்சிகளின் கோட்டையாக இருந்த இடங்கள் பலவும் சிங்களக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டவர்களின் வசமாகியிருந்தமை தமிழ்த்தேசியக் கட்சி அரசியலின் பெருந்தோல்வியையே வெளிப்படுத்துகிறது. இழப்புக்களையும் வலிகளையும் தமிழ்த்தேசிய உணர்வையும் வைத்துக் கொண்டு அரசியலை நடத்தலாம் என்ற எண்ணத்தின் மீது விழுந்த அடியாகவே இதைப் பார்க்க வேண்டும். இதனைப் புரிந்து கொள்வதற்கு குறைந்தபட்சமான அடிப்படை அறிவாவது தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருக்க வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் மக்கள் அரசியல்வாதிகளிடம் எதிர்பார்ப்பது நேர்மையை. பேசியவற்றுக்கு நேர்மையாக இருக்கிறார்களா? என மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். இதன் அர்த்தம் அரசை பிரதிநிதித்துவப்படுத்தி வென்றவர்கள் நேர்மையானவர்கள் என்பதல்ல. மக்கள் அவர்களுக்கான வாய்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். மக்கள் படிப்பினைகளிலிருந்து பாடத்தை பெற்றுக்கொள்வார்கள் என்பதே யதார்த்தம்.

இந்த யதார்த்தத்திலிருந்தே இனி வரப்போகின்ற தேர்தல்களைக் கையாளவேண்டும். தீவிரமாகத் தமிழ்த் தேசியம் பேசினாலும் பாராளுமன்ற தேர்தல் பொறிமுறைக்கும் விதிமுறைக்கும் உட்பட்டுக்கொள்வதென்பது தமிழ்த்தேசியக் கட்சிகளின் விதியாகிவிட்டது. அரசியல் அங்கம் வகிக்கமாட்டோம் என்பது வெறும் எதிர்ப்பரசியலாக அமையாது என்பதைப் புரிந்துகொள்வேண்டும். எதிர்நிலையில் இருந்தாலும் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சலுகைகள் கிடைத்தே தீரும். ஆகவே எல்லா தமிழ்க்கட்சிகளும் இணக்க அரசியலையே செய்கின்றன. இங்கு ஒண்டியிருப்பவர்கள், விலகி இருப்பவர்கள் என்ற வேறுபாடு மட்டுமே இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு “தீக் காய்வார்” போன்ற நிலைப்பாடே தவிர விலகி இருக்கும் நிலைப்பாடல்ல.

செயற்பாட்டுத் தளத்தில் இயங்காத எந்தக் கட்சியும் மக்கள் நலன் சார்ந்து சிந்திப்பதாகக் எடுத்துக் கொள்ள முடியாது. அவை தேர்தல் அரசியலையே செய்கின்றன. தேர்தல் அரசியல் என்பது தனிநபர்களை வளர்த்துவிடுமே அன்றி மக்களை வளர்த்துவிடாது. தனி நபர் வளர்ச்சி என்பது இங்கு மக்களிடம் அவர்கள் பெறுகின்ற செல்வாக்கு என்று பொருள்படாது. அவர்களின் பொருளாதார ரீதியிலான வளர்ச்சி என்பதாகவே அமைந்துவிடுகிறது. குடை பிடிப்பவர்களையும் கோசமிடுபவர்களையும் முகநூலில் கட்சி ஆதரவாளர்கள் என்ற பெயரில் விளம்பரம் செய்பவர்களையும் அரசியல் தலைவர்கள் என நம்புவது முழு முட்டாள்தனமே. தேர்தல் நோக்கிற்கு அப்பாலும் மக்கள் நலன் சார்ந்து தொடர்ச்சியாகச் செயற்படுவது அவசியமானதாகும். இங்கு தமிழ்த்தேசியம் பேசுகின்ற கட்சிகள் தேர்தல் காலத்தில் மட்டுமே மக்களின் இருப்பிடம் நோக்கி வருகின்றன. இந்த நிலைமை வடக்கு கிழக்கில் மட்டுமல்லாமல் மலையகத்திலும் இருக்கின்றது. இந்த விடயத்தில் தமிழ் ஊடகங்களும் தொடர்ச்சியாகத் தவறிழைத்தே வருகின்றன. அரசியல்வாதிகளின் நேர்காணல்களை வெளியிடும் போது குறித்த அரசியல்வாதிகள் அதனை தமக்கான விளம்பரமாக மாற்றிக் கொள்கின்றார்கள். உண்மையில் ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் விதமான கேள்விகளை மக்கள் நலன் சார்ந்து தொடர்ச்சியாக முன்வைக்க வேண்டும். அரசியல்வாதிகள் குறித்து மக்கள் கொண்டிருக்கும் திருப்திகளையும் அதிருப்திகளையும் வெளிக்கொண்டு வருதல் முக்கியமானதாகும்.

> **பாராளுமன்றப் பொறிமுறைக்குள் அகப்பட்ட அரசியல் செயற்பாடென்பது ஒடுக்கப்படுகின்ற இனம் ஒன்று எதிர்பார்க்கும் விடுதலைக்கான முழுதான வழிமுறையாக ஒரு போதும் அமைந்துவிடாது. அதுவும் இலங்கை போன்ற ஜனநாயகப் பண்புகளையும் இனவாத நோக்கில் கையாளும் அரச அதிகாரத்திடம் எதிர்பார்ப்பதென்பது பொருத்தமற்றது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் கட்சிகள் முற்போக்கு தன்மை மிகுந்த சிங்களக் கட்சிகளை இணைத்துக் கொண்டு செயற்படுவதுதான் அவசியமானது.**

பாராளுமன்ற பொறிமுறைக்குள் அகப்பட்ட அரசியல் செயற்பாடென்பது ஒடுக்கப்படுகின்ற இனம் எதிர்பார்க்கும் விடுதலைக்கான முழுதான வழிமுறையாக ஒரு போதும் அமைந்துவிடாது. அதுவும் ஜனநாயகப் பண்புகளையும் இனவாத நோக்கில் கையாளும் இலங்கை அரசிடம் எதிர்பார்ப்பதென்பது பொருத்தமற்றது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இந்தக் கட்சிகள் முற்போக்கு தன்மை மிகுந்த சிங்களக் கட்சிகளை இணைத்துக் கொண்டு செயற்படுவது அவசியமானது. ஆனால் இவை மாறி மாறி வருகின்ற ஆளும் கட்சிகளுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் ஆதரவையே காட்டி வருகின்றன. இவர்களது எந்த வேண்டுதல்களையும் முன்வைப்புக்களையும் செவிசாய்க்காது தொடர்கின்ற அரசுகள் இருப்பதற்கு இந்தக் கட்சிகளின் உறுதிப்பாடற்ற தன்மையே காரணம். மறுபுறத்தில் அரசைச் சார்ந்து அமைச்சுப் பதவியைப் பெற்று செயற்படுகின்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அரசு சொல்கின்றவற்றை நடைமுறைப்படுத்துவதாயும் அரசின் குரலாகவும் ஒலிக்கின்றதே தவிர தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கவில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஆரோக்கியம் தேடும் மானிடம்

வேதநாயகம் தபேந்திரன்

இயந்திரத் தனமான வசதிகள் நிறைந்த வாழ்க்கை முறையினுள் விரும்பியோ விரும்பாமலோ பிரவேசித்து விட்டோம். இதனால் உடற் பயிற்சிக்கென நேரம் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது.

தொற்றா நோய்களிலிருந்து தப்பி சுகதேகியாக வாழ வேண்டுமென ஆசைப்படாத மனிதர்களே



இல்லையெனலாம்.

நடைப் பயிற்சி, சைக்கிளோட்டப் பயிற்சி செய்து உடற் பருமனைக் குறைத்து ஆரோக்கியமாக வாழ்வதற்கான மனிதத் தேடல்களை ஆங்காங்கே காணுகிறோம்.

இதனை விட உடற்பயிற்சி உபகரணங்களை வீட்டில் வாங்கி வைத்து அதன் மூலமாகப் பயிற்சி களைச் செய்வோரும் பலர் உள்ளனர். பெருநகரங்களில் உடற்பயிற்சி வழங்கி பணம் உழைக்கும் நிறுவனங்களும் வந்து விட்டன.தேவைகள் தான் கண்டுபிடிப்புகளின் தாயல்லவா? தேவைகள் வளர

**அதிகாலை வேளையில் நடைப்பயிற்சி அல்லது மாலை வேளையில் நடைப் பயிற்சி மேற்கொண்டு ஆரோக்கியம் தேடும் மனிதர்கள் குழாத்தை ஆங் காங்கே காண முடிகின்றது.**

**நடைப்பயிற்சியின் போதும் கைகளைக் கால்களை வேகமாக அசைத்துச் செயற் படுவதன் மூலமாகவே வியர்வை வெளி யேற்றம் அடையும். வியர்வை அதிகமாக வெளியேறுவதே உடல் ஆரோக்கியமுள்ள நடைப் பயிற்சி எனலாம்.**

வளர மனிதர்களது சேவைத் துறை வணிகங்களும் புதிய புதிய பிறப்புகளை எடுப்பது வழமையானதே. மனித உடலில் இருந்து வியர்வை, சலம், மலம் ஆகிய கழிவுகள் நாளாந்தம் ஒழுங்காக வெளியேறும் மனநலமும் கூடிய யாவருமே சுகதேகிகளாக இருப்பார்கள். மனநலத்தைப் பாதுகாத் தோமானால் உடல்நலம் நிச்சயமாக நன்றாகவே இருக்கும்.

அதிகாலை வேளையில் நடைப்பயிற்சி அல்லது மாலை வேளையில் நடைப் பயிற்சி மேற்கொண்டு ஆரோக்கியம் தேடும் மனிதர்கள் குழாத்தை ஆங் காங்கே காண முடிகின்றது.

நடைப்பயிற்சியின் போதும் கைகளைக் கால்களை வேகமாக அசைத்துச் செயற்படுவதன் மூலமாகவே வியர்வை வெளியேற்றம் அடையும். வியர்வை அதிகமாக வெளி யேறுவதே உடல் ஆரோக்கியமுள்ள நடைப் பயிற்சி எனலாம்.

இது தொடர்பாகத் துறைசார் அனு பவமுள்ளவர்களிடம் கேட்டறிந்து நடைப் பயிற்சியைச் செய்வது நல்லது. பயிற்சி தொடர்பான விபரங்களைச் சரியாகத் தெரியாமல் செய்யும் போது தசைப்பிடிப்பு, முள்ளந்தண்டு நாண் பாதிப்பு போன்ற பின்விளைவுகள் ஏற்பட வாய்ப்பும் உண்டாகலாம்.

சைக்கிளோட்டம் உண்மையில் ஒரு மிகச் சிறந்த உடற்பயிற்சி. கால்களை வேகமாக வலித்து வலித்துச் சைக்கிள் ஓடுவதன் மூலமாக வியர்வையை வெளியேற்றலாம். ஒரு நாளைக்கு எவ்வளவு தூரம், எத்தனை மணி நேரம் சைக்கிள் ஓட வேண்டும் போன்றவற்றை துறைசார் அனுபவஞானம் மிக்கவர் களிடம் கேட்டறிதல் வேண்டும்.



எமது பிரதேசத்தில் 30 வருடங்களுக்கு முன்பதாக மோட்டார் சைக்கிள் மிகவும் குறைவாகவே புழக்கத்தில் இருந்தது. போர்க் காலத்தில் நடைமுறைப் படுத்தப் பட்ட பொருளாதாரத் தடை பிரதான காரணம் எனலாம்.

அப்போது சைக்கிள் பயணங்கள் அதிகமாக இருந் தன. இதனால் தொற்றா நோய்கள் மிகவும் குறைவா கவே இருந்தன.

தற்போது தொற்றா நோய்களும் பதட்டமும் உள்ள வாழ்க்கைமுறைகள் உருவாகியவுடன் சைக்கிள் ஓட்டம் குறித்துச் சிந்திக்கிறார்கள்.

வளர்ந்த நாடுகளைப் போலச் சைக்கிள் ஓட்டத்திற் கென பெருந்தெருக்களின் ஒரு பகுதியை ஒதுக்கிடும்



முறையும் மெல்ல மெல்ல உருவாகின்றது. அங்கு போலச் சைக்கிளோட்டக் கழகங்களும் இங்கு உருவா குதல் வேண்டும்.

பாரம்பரியம் வழிவந்த வாழ்க்கை முறைகளை நாம் கடைப்பிடித்த போது நடைப்பயிற்சி,சைக்கிள் ஓட்டப் பயிற்சி ஏனைய உடற்பயிற்சிகள் தேவைப் பட்டிருக்க வில்லை.

மண் திண்ணை, ஓலை வீடுகள், வளவு நிறைந்த மரங்கள், நாலுபுறமும் சோலையான வேலிகள் யாவுமே எமக்குச் சிறந்த உடல் ஆரோக்கியத்தைத் தந்தன.

தண்ணீரில் ஊறிய பச்சை அரிசி இடித்து மாவாக்குதல், சமையலுக்கு விறகு கொத்துதல், வளவு இலை குழை சருகுகளை வெட்டிப் புதைத்தல், மண் வெட்டி பிடித்துத் தோட்டம் செய் தல்,வேலியடைத்தல், கதிகால்கள் வெட் டுதல், பாடசாலைக்கும் பலவித தேவை களுக்கும் நடந்துபோகுதல்,அலவாங்கு பிக்கான் மூலமாக வளவைப் பரா மரித்தல் போன்ற நாளாந்த வேலைகள் மூலமாக நிறைய உடற்பயிற்சிகள் கிடைத்தன.உடல் ஆரோக்கியம் பேணப் பட்டது.



ஆனால் இப்போது பெரிய காணிகள் சொந்தமாக உள்ளவர்கள் கூட வேகமான ஒரு வாழ்க்கை முறையினுள் அகப்பட்டு வேலை செய்ய நேரம் இல்லாதவர்களாக இருக் கின்றனர். அல்லது வேலைகளைச் செய்ய நேரங்கள் இருந்தும் பணவசதி அல்லது சோம்பேறித்தனம் காரணமாக கூலிக்கு ஆள்களைப் பிடித்து வேலைகளைச் செய்விக்கின்றனர். நாலு பக்கமும் மதிலைக் கட்டிவிட்டு வளவு முழுக்கக் கொங்கிறீற் போட்டு விட்டுத் தொடர் நாடகங்களும் படங்களும் பார்க்கின்றனர். இதனால் உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கைமுறையினுள் அகப்பட்டு தொற்றா நோய் களுக்கு ஆட்பட்டு விடுகின்றனர். உடற்பயிற்சி மட்டும் தான் ஆரோக்கிய வாழ்க்கையைத் தருமென எண்ணுவ தும் தவறான ஒன்றாகும். ஆரோக்கியம் பேணும் உணவுப் பழக்க வழக்கத்தை நாம் சிறுவயது முதலே கடைப்பிடித்தல் வேண்டும்.

பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், அனுபவம் மிக்க மூத்தோர் சொற்கள் ஆகியவற்றைக் கேட்டு நடப்பதன் மூலமாக இதனைச் சாத்தியமாக்கலாம்.

உணவே மருந்து என்பது எமது மூத்தோர் வாக்கு. நாம் பெரும்பாலும் இதனைக் கடைப்பிடிப்பதில் கவனக் குறைவாகவே இருக்கின்றோம்.

பேதி குடித்தல் எனும் ஒரு முறை முன்னைய காலத் தில் வருடத்தில் இருமுறை செய்தோம். பேதி குடிப்பதன் மூலமாக வயிற்றிலுள்ள கழிவுகள் யாவும் முற்றாக அகன்று வயிறு சுத்தமாகி விடும். காலையில் பேதி குடித்தால் மாலையில் வயிற்றில் ஒன்றுமே இருக்காது. பெரியதொரு களைப்பு வரும். அதற்குப் பின்னர் அம்மி யில் அரைத்த சரக்குக் கறியுடன் நன்றாகக் கரைந்து அவிந்த சோற்றை உண்ணத் தருவார்கள். அதனை உண்ணும் போது அது தேவாமிர்தமாக இருக்கும்.

வருடம் முழுவதும் வேகமாக ஓடும் வாழ்க்கை முறையை எமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். இதனால் பேதி குடிப்பது, அம்மியில் அரைத்துக் கறி சமைப்பது போன்ற பாரம்பரியங்கள் கிட்டத்தட்ட அற்றுப் போனது.

அம்மி வகித்த இடத்தைக் கிரைண்டர் பிடித்தது. முழுத் தேங்காய்ப் பூவையுமே மூன்று தரத்தினுள் வெளுத்து வாங்கிப் பாலாகத் தருகிறது. அவை யாவும் சமையலின் ஊடாக எமது உடம்பினுள் சேர்கிறது. அதுக்குப் பிறகு கொலஸ்ட்ரோல் கிளினிக், மருந்து என வாழ்க்கை அலைகிறதில் முடிகிறது காலம்.

நாற்பது வயது வந்த பின்பு தான் சாப்பாட்டில் கட்டுப்பாடு தேவை. ஆரோக்கியம் குறித்து உடற் பயிற்சிகள் செய்ய வேண்டும் என்றதொரு மாயை பலரிடம் உள்ளது. இது முழுத் தவறு.


எமது சிறு வயது முதலே உடல்நலம் குறித்துச் சிந்தித் தல் ,செயற்படுதல் வேண்டும். அதுவும் வயது இருபது களில் இளமைத் திமிரில் கல்லைத் திண்டாலும் செமிக்கு மெனக் கண்டதையும் உண்ணும் பழக்கத்தின் எதி ரொலி வயது நாற்பதுகளில் உடலில் பலமாகக் கேட்கும்.

ஒரு நேரம் உணவு உண்ணும் போது அரைப் பங்கு உணவு, கால் பங்கு தண்ணீர் குடித்துக் காற்பங்கு வயிற்றை வெறும் வயிறாக விடல் வேண்டும். இதன் மூலமாகவே உணவு வயிற்றில் நன்கு அரைபட்டுச் சமிபாடு அடையும் என்கிறார்கள் மூத்தோர்கள்.

ஆனால் எம்மில் பலரோ மூன்று வேளையும் மூக்கு முட்டச் சாப்பிட்டு இடைவேளைகளிலும் கண்ட தையும் கொறித்து நோயாளியாகி விடுகின்றோம்.

உடற்பயிற்சி செய்வதுடன் சிறுவயது முதலே மனக் கட்டுப்பாடுடன் வயதுப் பருவத்திற்கேற்ப இயற்கையில் விளைந்த மரபணு மாறாத உணவுகளை உண்பதன் மூல மாகவே ஆரோக்கியத்தை முழுமையாக அடைய முடியும்.

■



10

# என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி

மனிசற்ற தேவையள்தான் புதுக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு வந்திட்டுதாம். என்று புத்திஜீவியள் சொல்லுகினம். அதென்னடாப்பா புத்திஜீவி எனக்குந்த அர்த்தம் விளங்கேல்ல. பின்ன என்னப்பா புத்தி இல்லாதைவையும் இருக்கினமோ? புத்தி எல்லாருக்கும் உள்ளதுதான். அதென்ன சிலரிட்ட மட்டும் அது சீவிக்குது எண்டு சொல்லுகினம். .

விடியக்காத்தால இந்தக் கறுமம் என்ர புத்திக்குள்ள பூந்து என்னை உலைக்குது. "ணேய் என்னெணை மோட்டுவளைக்க ஓணான் ஏறிட்டுதே" பக்கத்து வீட்டு விசாகன் கிண்டல் பண்ணிப்போட்டுப்போறான். ஹ..ஹ அவனைப்பொறுத்தமட்டில அவன் ஒரு புத்திஜீவி. அவன்ர அறிவு என்னைப்போல கிழடுகட்டையள விட மேலானது எண்டு அவன் நினைக்கிறான். இதுதான்ராப்பா காலம். முந்தநாள் முளைச்சுதுகள் உலகம் முழுக்க தங்கட கையுக்க வைச்சு உருட்டி விளையாடுதுகள் அந்தத் திமிர். எடுத்தெறிஞ்சு பேசிறது. பின்ன எங்கட தகப்பன் தாய் பேரன் பேத்தி தங்கட சொந்த கைகால்களை ஆதாரமா வைச்சு உழைச்சு தேடின தேட்டங்கள் எவ்வளவு. இவையால ஏலுமோ. எண்டு சவால் விட்டா அவன் பாவி பங்காற்றா நெளிச்சுப்போட்டுப் போறான்.

" ணேய் நீங்கள் ஒரு வரியம் முழுக்க கிணறு வெட்டி, மறுவரியம் முழுக்க அதைக்கட்டி அதுக்குப்பிறகு வாய்க்கால் வரம்பு கட்டி, வெள்ளாமை செய்த காலம் போச்செணை. நாங்கள் ஒரே நாளில கிணறு கிண்டி வாய்க்கால் போடாமயே தண்ணிய பயிருக்குக்கொண்டே சேர்க்கிறம்."

"நீங்க? அட போடா போக்கத்தவனே நாங்கள் குனிஞ்சு வீடுவாசல் கூட்டி, குந்தியிருந்து அடுப்பூதி, மண்சட்டியில சோறுகறி காச்சி மருந்தடிக்காத காய் கறியளென்ன? மீனென்ன? இறைச்சியென்ன, நெய் யென்ன, பாலென்ன எல்லாம் சொந்தமா உருவாக்கி, வாழ்ந்த வாழ்க்கைய உங்களால கற்பனையிலும் பாக்கேலாதடா.

உனக்கொரு கதை தெரியுமோ.. ஆதிவாசிகள் குழுக்களில ஒருவருக்குக் கூட கொரோனா இல்லையாம். பின்ன நீங்கள் கையுக்க போனை வச்சு கட்டைவிரலால நெட்டிதள்ளி உல கத்தை பாருங்கவன். ஆனால் வந்து கொண்டிருக்கிற கொரோனா டெங்கு

> "விடியக்காத்தால இந்தக் கறுமம் என்ர புத்திக்குள்ள பூந்து என்னை உலைக்குது. "ணேய் என்னெணை மோட்டுவளைக்க ஓணான் ஏறிட்டுதே"? பக்கத்து வீட்டு விசாகன் கிண்டல் பண்ணிப்போட்டுப்போறான். ஹ..ஹ அவனைப்பொறுத்தமட்டில அவன் ஒரு புத்திஜீவி. அவன்ர அறிவு என்னைப்போல கிழடுகட்டையள விட மேலானது எண்டு அவன் நினைக்கிறான்."

இதுகளுக்கெல்லாம், உந்தக் கதையள சொல்ல ஏலாமத்தானே லொக்டவுண் போட்டு வாழுறம். தம்பீ காடு வெட்டி காணியாக்கி வீடுகட்டி வாழ்ந்த தலை முறையாகவும் தெரியும். அதை தோட்டம் துரவாக்கி இப்ப உங்களட்ட கையளிச்ச தலைமுறையையும் தெரியும். ஒட்டுமொத்ததில காடுகள் கட்டடக் காடுகள் ஆனது வரை பார்த்து வளந்தாக்கள் நாங்கள்.

நித்தம் சாவாருக்கு நித்தம் அழுவாருண்டோ ஒரு கணக்கில விட்டுப்போட்டு தன்ர வேலையள பாக்கிறேல்லயே. சனமும் மாவட்டம் மாவட்டமா வெளிக்கிட்டுத் திரிய ஆரம்பிச்சிட்டுதுகள். ஊருக்குள்ள தொழில் துறையள விட்டுப்போட்டு நிக்கிறவை புதிசா தொழில் ஆரம்பிச்சிட்டாங்கள். பெரிசா ஒண்டுமில்ல பக்கத்து ஒழுங்கயில ஒருதன் கோழி யாவாரமாம் புதிசாத்தான் துவங்கியிருக்கிறான். பஞ்சத்தில அடிபட்டவன் பின்ன ஏதோ செய்யட்டன் எண்டு பாத்தா எட அவன் பாவி வாங்கிவிட்ட கோழியள காணேல்ல முசுப்பாத்தியாத்தான் திரியிறான். 'எங்கடா கோழி வளக்கவெண்டு வாங்கினாய் ஒண்டையும் காணன்.' எண்டா? அவன் தலையக் குனிஞ்சிட்டான். பிறகு என்ன நெச்சானோ ' அதக்கா வித்துப்போட்டன." எண்டான். நா..நல்ல லாவங்கிடைச்சிருக்கும்போல. எண்டு நினைச்சு " மெய்யேடா நல்ல விலைக்கு போச்சோ" எண்டன். அவன் நிமிராமயே" 'அ..அ.. வாங்கின விலைக்கு குடுத்திட்டன்' எண்டான். சரி ஏதோ கயிற்றமாக்கும். அப்பானெல்லோ அவன்ர பெண்டில் அழாக்குறையா சொன்னாள். அதக்கா களவெடுத்து கொண்டுவந்த கோழி இப்ப வேற ஆரோ அதைக் களவெடுத்து கொண்டு போட்டாங்கள்." நான் அதோட விட்டிட்டு ரோட்டுக்குப் போனன். எங்கட ஆட்டோக்காரப் பெடியன் வந்தான்.

கோயில்ல கொடியேறிட்டுதாம். திருவிழா செய்யாட்டியும் பூசை பண்ணத்தானே வேணும். உங்கட நன்கொடைய போடுங்கோவாம். ஹ..இதைத்தான் சொல்லுறது 'கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் கிழவனத்துக்கி மடியில வை' எண்டு. சாமி கேட்டதேடா எனக்கு தேரிழு திருவிழா செய் எண்டு ங ஊர்கூடாம என்ன தேரிழுப்பு அதுக்க .. அன்ன தானமு-மாம். உது உந்த அட்டாதுட்டிக்கு என்ன சொல்லுறது. எடேய் கொரோனா உந்தப்போடு போடுது இந்த நிருவா-கஞ் செய்யிறவைக்கு பீக்கர் போட்டு நாலு வார்த்தை கதைக்கவும், ஊருக்கே விளங்காத மொழியில ஐயர் ஊரெல்லாங் கேக்க பேசிறதையும் இந்தச் சாம்பிராணியளுக்கு கைவிட முடியேல்ல. ம் என்ன செய்யிறது. "ஊரோடினா ஒத்தோடு, ஒருவன் ஓடினா கேட்டோடு" வெத்தில வல்லுவத்தை கிழறி ஒரு நூறு ரூவாக்குடுத்தன். பிறகும் பாத்தன் ஒரு சோத்துப்பார்சலுக்கும் காணாது சரியில்ல எண்டிட்டு தம்பி பொறடா எண்டு இன்னுமொரு நூறு ரூவாக்குடுத்தன். இனி நானும் போனாக் கொண்டா அன்னதானப்பந்தியில சாப்பிடுவன். ஆனா போறேல்ல கொரோனாப்பயம்.

அந்தப்பக்கம் போனாலும் சாமியிட்ட சொல்லிப்போட்டு போறதும் சரியில்ல எண்டு பின்வளத்தாலதான் கோயிலக் கடந்து போறன். இல்ல சாமி கண்டிட்டா எண்ட பயமில்ல ஆரும் அறிஞ்சாக்கள் கண்டிட்டா.. 'ஊருக்குச் சொல்லுதாம் பல்லி களனிப்பானையில விழுதாம் துள்ளி' எண்டு. 'ஊரெல்லாம் ஞாயங்கதைக்கிறா அவா கொயிலுக்க நிக்கிறா' எண்டு சொல்ல மாட்டினமே? நீ என்னத்தை சொல்லு தம்பீ.. நாலு பேருக்கு நல்லத சொன்னா நாங்களுயும் அப்பிடித்தான் இருப்பமெண்டு சனம் நெச்சா அதுக்கு நான் என்ன செய்யிற. பாம்புக்கு தலையக்காட்டி மீனுக்கு வாலைக்காட்டித்தான் சீவிக்க வேண்டியிருக்கு இதுக்க புத்திய எங்க சீவிக்க விடுறது எங்கட நிலைமைக்கேத்த மாதிரி வாழ வேண்டியதுதான். ■

---


ஆபூர்வன்

# மலையாள சினிமாவின் மகத்தான சாதனை "ஜல்லிக்கட்டு"

திரைப்படத்தினைக் காட்சி ஊடகமாகக் கருதிப் படிமப்படுத்தல், இசை, படத் தொகுப்பு என்பற்றை முன்னிறுத்தித் தற்புதுமையான நுட்பங்களோடும் சமூகம் சார்ந்த மேம்பட்ட தரிசனத்தோடும் சிறந்த சினிமா உருவாக்கப்பட வேண்டும் என்பதே தரமான திரைச்சுவைஞர்களின் வேணவா! திரைச்சுவைஞர்களைத் திருப்திப்படுத்தும் வகையிலே மலையாளத் திரையுலகம் தரமான நகர்படிமங்கள் பலவற்றை உருவாக்கி வருகின்றது. அந்த வகையிலே நிகழ்ந்த வியத்தகு முயற்சியாக "ஜல்லிக்கட்டு" அமைந்துள்ளது.

மாட்டு இறைச்சிக் கடையில் வெட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்ட எருமை ஒன்று தப்பித்துக் கிராமத்தினுள் நுழைந்து விடுகின்றது. எருமை பல்வேறு சேதங்களை நிகழ்த்த, கிராமத்தினர் ஒன்றிணைந்து அதனைப் பிடிக்க எடுக்கும் முயற்சியினை முதன்மைப்படுத்தியதாகத் திரைப்படம் அமைகின்றது. முதன்மைக் கதையோடு உப கதைகள் பலவும் பின்னப்பட்டுள்ளன. S.ஹறிஸ் எழுதிய "மாவோயிஸ்ட்" என்ற சிறுகதையின் திரை வடிவமாகவே "ஜல்லிக்கட்டு" காணப்படுகின்றது. Lijo Jose Pellisssery இத்திரைப்படத்தினை இயக்கியுள்ளார். ஒளிப்பதிவும், ஒலிக்கலவையும் இசையும் திரைப்படத்தினை இன்னொரு தளத்திற்கு நகர்த்தியுள்ளன. பேரமைதியான சூழலில் பூச்சிகள், புள்ளினங்கள், மிருகங்களின் இயல்பொலிகள் காதுகளை உரசும் போது மாறுபட்ட அனுபவம் முகிழ்க்கிறது. இசைக் கருவிகள் இல்லாமல் பல குரல்கள் இணைந்து இசைக் கருவிகளுக்கு நிகரான ஒலிகளை எழுப்புவதை அகபெல்லா எழுநயம் (Acapella Style) என்பர். இத்தகைய இசை நுட்பத்தையும் படம் வெளிப்படுத்துகின்றது.

மனிதன் விலங்காக மீள் கூர்ப்படைகின்ற தருணங்களை மிகச் சிறப்பாகக் காட்சிப்படுத்தியுள்ளது. கெட்ட வார்த்தையாடல் குறித்து அறம் வலியுறுத்தும் கதாபாத்திரமே அதனை மீறுகின்ற இடம் சிறு சான்றாகும். மனித காலடிகளின் நடுவண் எருமையின் காலடியைக் காட்டுகின்ற சட்டகம் பார்வையாளனிடம் அற்புதமான அதிர்வினை ஏற்படுத்துமென நம்புகிறேன். இத்தகைய காட்சிப்படுத்தல் நுட்பங்களையே திரைநயமனம் அவாவுகின்றது மலையாள சினிமாவின் மகத்தான சாதனை என "ஜல்லிக்கட்டு" திரைப்படத்தினை நிச்சயம் போற்றலாம். ■



# சொந்தப் பிள்ளைகளால் தாரை வார்க்கப்படும் இலங்கை

கருணாகரன்

“கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி - கௌதாரிமுனைக் கடலில் சீனர்கள் வந்து தொழில் செய்கிறார்கள். உங்களுக்கு இதைப்பற்றி ஏதாவது தெரியுமா?” என்று கேட்டார் கொழும்பிலிருந்து ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர்.

“ஐயா நான் நான்கு, ஐந்து வயதிலேயே எங்கள் வீட்டில் வைத்தே சீனர்களிடம் உடுபுடவைகளை வாங்கியவன். (அப்பொழுது - 1960 - 1975 வரையில் - சீனத்துத் துணி வியாபாரிகளும் பீங்கான் விற்பனையாளர்களும் ஊர்களில் சர்வசாதாரணமாகத் திரிவார்கள்) அப்படியிருக்க ஏதோ இப்பதான் சீனர்கள் வந்திருப்பதைப்போலக் கதைக்கிறியள்! அதுபோக கௌதாரி-முனையில் சீனர்கள் தூண்டில் போடுற செய்தியைச் சொல்லும் நீங்கள்தான் அதனுடைய மேலதிக விளக்கத்தையும் சொல்ல வேணும்” என்றேன்.

“அந்தக் காலம் வேறு. அப்போது சீனாவின் தன்மையும் வேறு. இலங்கை இருந்த நிலையும் வேறு. இது வேறு. இப்ப நடக்கிறது அத்தனையும் அரசியல் விவகாரங்கள். பொருளாதார விஸ்தரிப்புவாதத்திற்கான சுரண்டல். இதுதான் பிரச்சினை. இதை நாங்கள் சும்மா விடேலாது. லேசில கடந்து போகேலாது” என்று பெரியதொரு விளக்கத்தை அளிக்கத் தொடங்கினார் நண்பர். வரவர அவருடைய குரலில் சூடேறியது.

“ஐயா, சற்று அமைதியடையுங்கள். முதலில் பொறுமையாக சில விசயங்களை நோக்க வேணும். சீனா 1950, 60 களிலேயே உலகம் முழுவதிலும் ஊசியை விற்கத் தொடங்கிவிட்டது. அப்பவே அது நீண்ட கால நோக்கிலான பொருளாதார விஸ்தரிப்பு நடவடிக்கையிலேயே ஈடுபட்டது. தலையில் துணி மூடையைச் சுமந்து கொண்டு ஊர் ஊராகத் திரிந்த ஒவ்வொரு சீனரும் சீனாவின் வளர்ச்சிக்காகவே - விஸ்தரிப்புக்காகவே உழைத்தார்கள். அவர்கள் ஏறிய ஏணிகள் ஏராளம். எட்டிய தூரமும் அதிகம். சரி, நீங்கள் சொல்வதைப் போல அரசியல் ரீதியாக நேரடியாக சீனா அப்போது இந்தளவுக்குச் செயற்பட்டதா என்றால் கூட, ஓம். அப்படிச் செயற்பட்டது என்றே சொல்ல வேண்டும். இப்போதிருக்க பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் அதற்கொரு அடையாளம். 1970 களின் சு.க ஆட்சியில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, பண்பாட்டு உறவுகள் வலுவாகவே காணப்பட்டன. பிறகு யுத்தத்தின்போது சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் சீனாவுடன் நெருக்கம் கூடியது. யுத்தத்திற்குச் சீன உதவிகள் பெருமளவில் பெறப்பட்டன. ராங்கிகள், துப்பாக்கிகள், குண்டு வீச்சு விமானங்கள், மோட்டர்ப்பீரங்கிகள் என வகை தொகையில்லாமல் சீனா அள்ளி அள்ளிக் கொடுத்தது. அல்லது சீனாவிடம் வாங்கித் தள்ளினார்கள். அப்போதெல்லாம் இது ஒரு அரசியற் சிக்கலாக முடியும் என்று ஏன் யாரும் யோசிக்கவில்லை? -” என்று அவருக்குச் சில விளக்கங்களைச் சொல்ல முற்பட்டேன்.

இடையில் வழிமறித்த நண்பர், “அப்படியென்றால் சீனாவின் இன்றைய இந்த ஆதிக்கத்தையும் அடாவடித் தனத்தையும் நீங்கள் ஆதரிக்கிறியளா? அரசாங்கம் இதையெல்லாம் அனுமதிப்பதை ஏற்றுக் கொள்கிறீங்களா?” என்று குறுக்கு வழியால் வந்து மறித்தார்.

எனக்கு சிரிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. பிரச்சினையை அதன் அனைத்துப் பரிமாணங்களோடும் புரிந்து கொள்ள முற்படாமல் தங்கள் மையத்திலிருந்து சிந்திப்பவர்களுடன் தொடர்ந்து பேச முடியாது. அவர்கள் எதையும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். புரிந்து கொள்ளப் போவதுமில்லை. பதிலாக தீவிரமடைந்து வெறுப்பையே உமிழ்வார்கள். ஒரு கட்டத்தில் எதுவும் செய்ய முடியாமல் ஆற்றாமையை வெளிப்படுத்திப் புலம்புவார்கள். அதனால் எந்தப் பயனும் ஏற்படாது என்பதைக் கூட இறுதி வரையில் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

நான் எந்தப் பதிலும் சொல்லாமல் அமைதியாக இருந்ததைக் கவனித்தவர், “பார்த்தீர்களா! உங்களாலேயே இதற்குப் பதிலளிக்க முடியவில்லை. இது பச்சைச் சுரண்டல். ஒரு கொம்யூனிஸ நாடு இப்படி ஒரு வறிய நாட்டில் கை வைக்கிறது என்றால் அது எவ்வளவு கேவலமானது?” என்று ஏதொவெல்லாம் சொல்லிக் கொண்டே போனார்.

சரிதான். ஒரு தமிழ் மூத்த ஊடகவியலாளர் இப்படித்தானே சிந்திப்பார்? இதை விட வேறு எப்படி அவரால் மாற்றாகச் சிந்திக்க முடியும்? அப்படி மாறுதலாகச் சிந்திக்கக் கூடியவராக இருந்தால் அவர் எப்போதே தமிழ் ஊடகப் பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பார். அல்லது தானாகவே வெளியேறியிருப்பார்.

எனவே அவரிடம் எதையும் விவாதிப்பதில் அர்த்தமில்லை. என்றாலும் பழகிய நண்பர் என்பதால், ஒரு சேதியை மட்டும் அவருக்கு நினைவூட்டிக் கொள்ள விரும்பி, “ஏன், இந்தக் கடல் அட்டை விசயத்தையே பாருங்கள்”. இதைப்பற்றி -

“60வருடங்களுக்கு முன்பும் சீனர்கள் வந்தார்கள். உங்கள் வளங்களில் தேடுவாரற்றுப் பெருகிக் கிடக்கும் கடலட்டைகளை எடுத்து எமக்குப் பதனிட்டு அனுப்புங்கள் என்றார்கள்”. அவற்றைப் பதனிடும் அரிய முறைகளை சில தினங்களில் சொல்லியும் தந்தார்கள், போய்விட்டார்கள்.

நாங்கள் எங்கள் வளங்களிலிருந்து அறுவடைகளைப் பாதகமற்ற முறையில் செய்து கப்பலேற்றி அனுப்பினோம். பங்கமில்லை. நல்ல வருவாய் கிடைத்தது. ஒவ்வொரு தொழிலாளரும் தமது கடலின் வளங்களை சகல உரிமைகளுடனும் பயன்படுத்தினார்கள், எல்லாவற்றுக்கும் மேலாக கடலைப் பாதுகாத்தார்கள்.

இப்போதும் சீனர்கள் வந்திருக்கிறார்கள். அல்லது அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ”கடல் உங்களது. வளங்களும் உங்களதுதான். ஆனால் அறுவடையை நாங்களே செய்கிறோம், பயன் பாடுகளை நாங்களே கொண்டு செல்கிறோம், நீங்கள் சற்றுத் தள்ளியே நில்லுங்கள்” என்கிறார்கள்.

“அது எப்படி?” என்று கேட்டால்....,

வேண்டுமானால், தூக்க சுமக்க சிலர் வாருங்கள் கைக்கூலி தருகிறோம்” என்கிறார்கள்” - என நல்லதொரு கடலோடியான தமயந்தி (விமலராஜன்) எழுதியிருக்கிறதைப் பார்த்தீங்களா?” என்று கேட்டு விட்டு அமைதியானேன்.

“இதைத்தானே நானும் சொல்கிறேன்” என்றார் நண்பர் விடாப்பிடியாக.

**“1960 களிலேயே சீனர்கள் தங்கள் நோக்கில் தெளிவாகவே வந்தார்கள். அந்தத் தெளிவோடுதான் வேலையைச் செய்தார்கள். அதன் வளர்ச்சி இன்று இப்படியாகி உள்ளது. இதுதான் வல்லாதிக்க சக்திகளின் பொதுவான பண்பு. இதில் சீனா வேறு. அமெரிக்கா வேறு. இந்தியா வேறு. இங்கிலாந்து வேறு என்று பார்த்தால் அதைப்போல ஏமாளித்தனம் வேறில்லை. 1960 களிலேயே நீண்டகாலக் கண்ணோட்டத்துடனும் திட்டத்துடனும் சீனா தன்னை விரித்துச் செயற்பட்டது. நாமோ நிகழ்காலத்துக்கே திட்டமேதும் இல்லாமல் வானத்து நட்சத்திரங்களெல்லாம் எங்கள் வாசலுக்கு வந்து ஒளியூட்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.”**

நான் அவருக்கு முடிவாகச் சொன்னேன், 1960 களிலேயே சீனர்கள் தங்கள் நோக்கில் தெளிவாகவே வந்தார்கள். அந்தத் தெளிவோடுதான் வேலையைச் செய்தார்கள். அதன் வளர்ச்சி இன்று இப்படியாகி உள்ளது. இதுதான் வல்லாதிக்க சக்திகளின் பொதுவான பண்பு. இதில் சீனா வேறு. அமெரிக்கா வேறு. இந்தியா வேறு. இங்கிலாந்து வேறு என்று பார்த்தால் அதைப்போல ஏமாளித்தனம் வேறில்லை. 1960 களிலேயே நீண்டகாலக் கண்ணோட்டத்துடனும் திட்டத்துடனும் சீனா தன்னை விரித்துச் செயற்பட்டது. நாமோ நிகழ்காலத்துக்கே திட்டமேதும் இல்லாமல் வானத்து நட்சத்திரங்களெல்லாம் எங்கள் வாசலுக்கு வந்து ஒளியூட்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். இதுக்கு மேல நான் எதையும் பேச விரும்பவில்லை. ஆனால் நானும் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.



ஆனாலும் எதையும் உடனடியாகச் செய்ய முடியாத நிலையிலேயே இருக்கிறோம். இதை முறியடிப்பதாக இருந்தால் நாம் எல்லோரும் இலங்கையர்களாக உணர்ந்து செயற்பட வேண்டும். அதற்கு வாய்ப்புக் குறைவு. ஆளாளுக்கு தமிழரென்றும் சிங்களவரென்றும் முஸ்லிம்கள், மலையக மக்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் சீனர்களுக்கு மட்டுமல்ல அத்தனை வெளியாட்களுக்கும் வாய்ப்பாகியிருக்கு. நாங்கள் எங்களுக்குள் உடன்பாடு காண மாட்டோம். எங்களுக்குள் அதிகாரங்களையும் வளங்களையும் பகிர்ந்து கொள்ள மாட்டோம். ஆனால், வெளியாருக்குத் தாராளமாக எல்லாவற்றையும் தாரை வார்ப்போம்-” என்று சொல்லி விட்டு என்னுடைய வேலையைப் பார்க்கத் தொடங்கினேன்.

நண்பர் எதுவும் பேசவில்லை. “பின்னர் இதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டும்” என்று சொல்லிக் கொண்டு தொடர்பைத் துண்டித்தார்.

நண்பருடைய கவலைகளையும் நியாயத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இது இன்றொரு பெரிய சிக்கலான அரசியற் பொறியாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதை விரிவஞ்சிச் சுருக்கமாகப் பார்ப்பதாக இருந்தால் -

1. சீன ஆதிக்கம் எப்படியெல்லாம் விரைவாக நிகழ்கிறது. எந்தெந்த வகையில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது.

2. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான போட்டியில் யார் முன்னிலை வகிக்கிறார்கள் என்பது.

3. சீனா தன்னுடைய விரிவாக்க நோக்கில் எவ்வளவு நுட்பமாக - நீண்டகால வேலைத்திட்டத்தில் பன்முக நோக்கில் செயற்படுகிறது என்பது.

4.கடல் அட்டை வளர்ப்பில் இதுவரையில் ஈடுபட்டு வந்த கடற்றொழிலாளர்கள், அவர்களுடைய தொழில் முறைகள், நம்முடைய கடல் வளப்பாதுகாப்பு போன்றவற்றுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி என்பது.

5.உள்ளூர் தொழிலையும் வளத்தையும் வெளியார் வந்து நேரடியாகச் சுரண்டவும் ஆதிக்கம் செலுத்துவும் முற்படுவது என்பது.

6. இலங்கையின் இறைமை - தமிழீழத் தனியரசுக் கனவு போன்றவற்றின் நிலை எப்படி என்பது.

7. கடற்பிராந்திய நடமாட்டத்தில் எதிர்காலத்தில் சீனர்களும் இந்தியர்களும் மோதிக்கொள்ளக் கூடிய நிலைமைகள் கனிந்து கொண்டிருக்கின்றன என்பது.

8. இலங்கை அரசாங்கமும் தமிழர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்தமும் உண்மையும் என்ன என்பது?

9. நிலைமை ஆபத்தானதாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இன்னும் புரிந்துகொள்ளத் தவறுகிறோம் என்ற முட்டாள் தனம் பற்றியது.

இப்படி ஒரு பெரிய கவனப் புள்ளிகள் உண்டு. இதையெல்லாம் யார்தான் புரிந்து கொள்வார்கள். ஏதோ எல்லோரும் புத்திசாலிகளைப்போலவும் ஒவ்வொருவரும் தாமே புத்திசாலிகள் எனவும் நடந்து கொள்ள முற்படுகின்றனர். ஆனால், இலங்கை மணித்தீவோ சொந்தப் பிள்ளைகளால் பிறத்தியாருக்குத் தாரை வார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. யார் வருவார் மீட்பராக. அல்லது நாமே மீட்பர்களாக மாறுவோமோ? ■



# சீன முதலீட்டாளர்களும் தமிழர் தரப்பு எதிர்கொள்ளும் சவால்களும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்க வேண்டும் என நினைத்தால் அவர்கள் படகு மூலமோ, மோட்டார் சைக்கிள் மூலமோ அல்லது விளம்பரத்துக்காகவாவது துவிச்சக்கர வண்டியில் போயிருக்கலாம். இதை அவர்கள் செய்யவில்லை. ஆனால் தமிழ் மக்கள் முன்னணி படகில் சென்று குறித்த பண்ணையைப் பார்வையிட்டு தமது கருத்தினையும் முன்வைத்திருக்கிறார்கள். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடலில் நீந்தியென்றாலும் இப் பிரச்சினையை நோக்கிப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் ஒரு பக்கம் இருக்க இந்தப் பிரச்சினையை எப்படிப் பார்க்க வேண்டும், இதனை முழுமையாக பரிசீலிப்பதற்கு எந்த வகையான அளவு கோல்கள் தேவை என்ற வகையில் சிந்திக்கவேண்டியிருக்கிறது. இங்கு இரண்டு அளவு கோல் முக்கியமானவை.

ஒன்று, தமிழ் மக்களுக்கான வெளிநாட்டுக் கொள்கை. இரண்டாவது, தமிழ் மக்களுக்குரிய பொருளாதார கொள்கை. இவ் இரண்டு அளவு கோல்களையும் வைத்து இந்த விடயத்தைப் பரிசீலிக்கலாம். வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் உறவுகளைப் பேணுவதற்கு அடிப்படையாக இருக்கின்ற கொள்கை ஆகும். எப்படி ஒரு தனி மனிதன் ஏனையவர்களுடைய உதவி இன்றி தனித்து வாழ முடியாதோ அது போலவே ஒரு நாடும் ஏனைய நாடுகளுடன் உறவுகளோ தொடர்புகளோ இன்றி தனித்து வாழ முடியாது. வர்த்தகம், கலாசாரம், பொருளாதாரம், பண்பாடு எல்லாவற்றிற்குமே அது தேவையாக இருக்கிறது. இவற்றைக் கருத்திற்கொண்டே உலக நாடுகள் எல்லாமே தங்களுக்கான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கிக் கொண்டுள்ளன.

வெளிநாட்டுக் கொள்கையில் அடிப்படையாக இருப் பது அந் நாட்டினுடைய தேசிய நலம். தேசிய நலம் என்பது இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஒன்று, அந் நாட்டினுடைய பாதுகாப்பு

இரண்டாவது, அந் நாட்டினுடைய பொருளாதாரம்

பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் பிரதானமாகக் கொண்டுதான் நாடுகள் வெளிநாட்டு கொள்கையை உருவாக்கி கொள்கின்றன. ஆனால் ஒரு நாட்டுக்கு மட்டும் தான் வெளிநாட்டுக் கொள்கை அவசியம் என்பது இல்லை. விடுதலைக்காக போராடுகின்ற தேசிய இனத்திற்கும் அது தேவை. இதனால் தமிழ் மக்களுக்கு வெளிநாட்டுக் கொள்கை அவசியமாக இருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களுடைய தேசிய நலனைக் கருதிற் கொண்டு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

ஆனால் துரதிஸ்டம் என்னவெனில் இது தொடர்பில் இன்னும் உரையாடலே தொடங்கவில்லை. வெளிநாட்டுக் கொள்கையை செயற்படுத்தக் கூடிய இராஜ தந்திரக் குழுவையும் நாங்கள் உருவாக்கவில்லை. சர்வதேச மட்டத்தில் இடம் பெறுகின்ற மாற்றங்களும் பூகோள அரசியலினுடைய ஏற்ற இறக்கங்களும் தமிழ் மக்களுடைய அரசியல் நிலவரங்களில் செல்வாக்கு செலுத்துவதாக அமைகிறது. இத்தகைய செல்வாக்கினைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தரப்பு ஒரு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குகின்ற போது சீனா தொடர்பில் என்ன வகையான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது மிக முக்கியமான விவகாரமாக உள்ளது. சீன அரசாங்கத்தின் நலன்களுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற காரணத்தினால் தமிழ் மக்களுடைய நலன்களில் துளியளவு கூட கவனம் செலுத்துவது இல்லை என்பது வெளிப்படை. இதனால் தமிழ்த் தரப்பினர் சீனாவின் எதிர்த் தரப்பினராகக் கருதப்படும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம், இந்தியக் கூட்டோடு சேர்ந்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை விடவும் தமிழ் நாட்டினுடைய முக்கியத்துவம் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கு என்பனவையும் பிரதான காரணமாக அமைகிறது.

அதற்காக சீனாவை எதிரியாக்க வேண்டுமா? என்று கேட்டால் நிச்சயமாக சீனாவை எதிரியாக்க வேண்டிய தேவை இல்லை. ஆனாலும் இந்திய தலைமை ஈழத் தமிழரோடு உறுதியாக நின்றால், தேவை ஏற்படும் பட்சத்தில் சீனாவை எதிரியாக்கலாம். இந்த இடத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்தித்த இந்தியத் தூதுவர் சீனாவை எவ்வாறு கையாள்வது என்று குறிப்பிட்டு இருந்தமை கவனத்திற் கொள்ளப்பட தக்கது. இதன் அர்த்தம் நீங்கள் அமைதியாகவே இருங்கள் என்பதே. இது தமிழ்த் தலைவர்கள் சுயமரியாதை இழந்த நிலைமை ஒன்று உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. சுயமரியாதை என்பது நபர்களுக்கு மட்டும் அல்ல தேசிய இனத்துக்கும் உள்ளது. தேசிய இனத்தின் பிரதிநிதியாக இருப்பவர்கள் இவ்வாறு விமர்சனங்களுக்கு உள்ளாகும் போது அது தேசிய இனத்தின் சுய மரியாதையினையே பாதிக்கும். இதனால்தான் சீனாவுடன் நட்புக் கொள்ளா விட்டாலும் அதை எதிரியாக்காமல் இருப்பதற்கான உத்தியை கையாள வேண்டியிருக்கிறது.

இரண்டாவது, இதுவரை தமிழ் மக்களுக்கான ஒரு பொருளாதாரக் கொள்கையும் உருவாகவில்லை. இதனால்தான் தமிழ்த் தேசிய இனம் தங்களுக்கென்று பொருளாதாரத்தைத் திட்டமிட முடியாமல் இருப்பதோடு சிங்கள ஆக்கிரமிப்புக்கும் இடம் கொடுக்கின்ற சூழலுக்கும் உள்ளாகியிருக்கிறது. இதுவே தமிழர்களுக்கான பொருளாதார கொள்கையை தெளிவாக வரையறுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு உருவாக்கப்படுகின்ற பொருளாதார கொள்கை, அரசியற் பொருளாதாரக் கொள்கையை அமைக்க வேண்டும். அரசியல் பொருளாதாரம் என்பது தேசத்தினுடைய அரசியலுக்கு உதவக் கூடிய பொருளாதாரம். அரசியலைப் பாதிக்கின்ற பொருளாதாரத்தை முன்னெடுக்க முடியாது என்பதில் முக்கியத்துவம் செலுத்த வேண்டும். தமிழ்த் தரப்பினுடைய பொருளாதார செயற்பாட்டைப் பொறுத்த வரை சிறுஉற்பத்திக்கான முதலீடு எங்களுக்கு தேவையாக உள்ளது. பாரிய தொழிற்சாலையை உருவாக்குவது என்றால் குடா நாட்டுக்கு வெளியில் தான் உருவாக்க வேண்டும்.

கடலட்டைப் பண்ணை உண்மையில் சிறுதொழில் முயற்சிக்கு பயன் தரக்கூடிய ஒன்று. இதில் தமிழர் தரப்புகளையே முதலீட்டை மேற்கொள்ள வைப்பது தான் ஆரோக்கியமானதாக இருக்கும். ஆனாலும் வெளிநாட்டு முதலீடுகளையும் உள்ளெடுப்பதில் பொருளாதாரப் பயனும் உண்டு. இதனால் சீன முதலீட்டையும் உள்வாங்கலாம். ஆனால் தமிழ் மக்கள் பங்கேற்கக் கூடிய பொருளாதாரமாக அதனை வளர்த்தெடுக்க வேண்டும். சீன நிறுவனமும் தமிழ் நிறுவனமும் பங்காளராக இணைந்து ஒரு முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவது தொடர்பில் யோசிக்கலாம். அல்லது ஒரு அரசு சார்பில் முதலீட்டுத் திட்டத்தை செயற்படுத்தலாம். இது மக்களுடைய பங்கேற்பை வலுப்படுத்துவதற்கு உறுதியாக இருக்கும்.

தற்போதும் இந்தியாவும் கூட இலங்கையில் மேற்கொள்ளுகின்ற முதலீட்டுத் திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான விடயங்களை இலங்கை அரசுடன் மட்டுமே கலந்து ஆலோசித்து செயற்படுத்த முனைகிறது. இதில் தமிழ் மக்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எந்த வகையிலும் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான முதலீட்டுத் திட்டங்களில் கிடைக்கின்ற இலாபங்களில் கூட தமிழ் மக்களுக்குப் பங்கு இருப்பதில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு நிச்சயமாக பங்கு இருக்க வேண்டும். இதனை முதலீடு செய்கின்ற நாடுகள் கவனத்தில் எடுத்துச் செயற்படவும் வேண்டும். அதே நேரம் அரசியல் ரீதியாக பாதிப்பு ஏற்படாத வகையிலும் கையாளும் திறனிருக்க வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற விளைபயன் என்ன? இலாபத்தின் ஒரு பகுதி தமிழ் மக்களுக்கு சென்றடைகிறதா? தமிழர் தரப்பினர் எத்தனை பேருக்கு அது வேலை வாய்ப்புக்கள் வழங்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான கேள்விகளையும் முதலீட்டாளர்கள் கவனத்தில் எடுக்கும போதே தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பட்ட செல்வாக்கு இலங்கையில் விரிவடைய வாய்ப்பு உண்டு. இந் நிலையிலே தான் சீனாவி-னுடைய முதலீடுகளை அல்லது முதலீட்டுத் திட்டங்களை நிராகரிக்காது அதில் பங்காளிகளாக மாறுகின்ற உபாயத்தைக் கண்டடைய வேண்டும். இது தொடர்பில் குறித்த தரப்பினருடன் உரையாடல்களை மேற் கொண்டு பார்க்கலாம். அரசினுடைய முதலீடுகளாக இருந்தால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் இணைத்து செயற்படக் கூடிய திட்ட வரைபுகளை உருவாக்க முனையலாம். இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை ஒன்று உள்ளது. சரியான வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்ற போது எந்த முதலீட்டாளர்களையும் எதிரியாக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. இதில் சீனாவும் விதிவிலக்கல்ல. எனவே தான் தமிழர் தரப்பு சிறந்த வெளிநாட்டுக் கொள்கையினையும் பொருளாதாரக் கொள்கையினையும் உருவாக்க வேண்டிய தேவை உணரப்பட வேண்டியது என்பதையே இக் கட்டுரை வலியுறுத்துகிறது.



# திருமந்திரம்

## தன்னை அறிய ஒரு வழிகாட்டி



திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக அமைந்தது திருமந்திரமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளும் திருமந்திரத்தில் விளக்கப்பட்டிருந்தாலும், யோக நெறிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இன்றைய யோக எழுத்தாளர்களால் திருமந்திரப் பாடல் ஒன்றின் துணை இன்றி கட்டுரை வரைவதென்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகவே உள்ளது.

திருமுலர் வரலாறு் 18 சித்தர்களில் ஒருவராகவும், தில்லையில் திருமூலர் என்றும் போற்றப் படுகிறார். கைலாய மலையில் நந்திதேவரின் மாணாக்கரில் ஒருவரான யோகி சுந்தரர். இவர் அட்டமா சித்திப் பேறு பெற்றவர். நட்பின் காரணமாக அகத்திய முனிவரைச் சந்திக்க தென்திசை நோக்கி பயணமானார். திருவாவடுதுறை பதியில் இறைவனை வணங்கிவிட்டு காவிரிக் கரையோரமாக செல்லும் போது, பசுக்களை மேய்க்கும் இடையன் இறந்து கிடக்க, பசுக்கள் வருந்தி நிற்பதையும் கண்டார். அவற்றின் துன்பம் போக்க தன் உடலை மறைத்து வைத்து விட்டு மூலன் என்ற அந்த இடையன் உடலில் கூடு விட்டு கூடு பாயும் சித்தி மூலம் உட்புகுந்து மூலனை எழுப்பினார். பசுக்கள் மகிழ்ச்சியுடன் வீடு நோக்கிப் அவரை அழைத்துச் சென்றன. பின்னர் அவர் யோக நிட்டையில் அமர்ந்தார். பின்னர் மூலனின் மனைவி அவர் தன் கணவனல்ல, மூலனின் உடலில் வந்து தங்கியுள்ள யோகி என்பதை ஊர்ப் பெரியவர்களின் மூலம் அறிந்து வருந்தினாள். மீண்டும் தன் உடலில் புகுந்து கொள்ள சென்ற யோகி தம் உடலைக் காணாது திகைத்தார். இதுவும் இறைவன் செயலே என்பதை உணர்ந்தார். அன்றிலிருந்து திருமூலர் என்றே அழைக்கப்பட்டார். சிவாகமங்களின் பொருளை உலகத்தவருக்கு தம்மூலம் உணர்த்த இறைவன் செய்த திருவிளையாடலே இது என்று உணர்ந்தார். இக்கதையில் ஒரு உட்கதை மறைந்திருப்பதையும் அவதானிக்கலாம். பசுக்களாகிய உயிர்கள், பாசம் என்ற மும்மலம் அறுத்து அன்பினால் பதியாகிய இறையை நாடினால் வீடு(பேறு) சென்று அடையலாம் என்பதே அது.

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம்மூன் றுண்டு
பசுத்தன்மை நீங்கி அப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

என்ற திருமந்திரப் பாடல் இதனை தெளிவு படுத்துகிறது.

திருமூலர் யோக நிட்டையில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்கள் பாடியதாக் கூறுவர். திருமந்திரப் பாடல் ஒன்றில் இவ்வாறு பாடுகிறார்.

“இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணைஅடிக் கீழே”

எண்ணற்ற கோடி ஆண்டுகள் யோக சமாதியில் இருந்த பரவச நிலையை இங்கு குறிப்பிடுகிறார். இதிலிருந்து தெரிவது என்னவெனில் சித்தர்கள் தம் யோக சித்தியினால் காலத்தை கடந்தும் சென்று தம் வினையறுத்து பிறவித் தளையை வென்றவர்கள் என்பதே. குவாண்டம் இயக்கவியலின் படி ஒரு அணுத் துணிக்கையானது தனிப்பட்ட ஒரு துணிக்கை போலவும் அலையாகவும் ஒரே நேரத்தில் இயங்கவல்லது. (particle-wave duality) துணிக்கையானது ஒரு நேரத்தில் ஓரிடத்தில் மட்டுமே தோன்றும். ஆனால் அலை வடிவம் ஒரே நேரத்தில் எங்கும் தோன்றவல்லது. இதன்படி துணிக்கை (particle) வடிவம் ஒளியின் வேகத்தை விட குறைவாக பயணித்து எதிர்காலத்தை நோக்கியும், ஒளியின் வேகத்தை விட வேகமாக பயணிக்கும் அலை வடிவம்(Wave) இறந்த காலத்தை நோக்கியும் பயணிக்கும். விழிப்புணர்வும், சித்திகளும் கிடைக்கப்பெற்ற சித்தர்களை இந்த அலை வடிவமாகக் கருதலாம் என்பதே விஞ்ஞான ரீதியான விளக்கமாகவுள்ளது. இது பற்றிய நிபுணர்களின் மேலதிக ஆராய்ச்சியினால் மட்டுமே மேலதிக தெளிவைப் பெற முடியும். ஒரே நேரத்தில் இரு இடங்களில் காட்சியளித்த யோகிகளின் பல கதைகள் இங்கு நோக்கத்தக்கன. திருமூலரின் நீண்ட தவயோகத்தையும் இந்த வகையிலேயே நோக்க வேண்டும்.

தமிழ் மூவாயிரம் என்றும் திருமந்திர மாலை என்றும் அழைக்கப்படும் திருமந்திரம் 9 தந்திரங்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 232 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. பாடல்கள் நாற்சீர் அடிகொண்ட கலிவகை யாப்பினால் ஆக்கப் பட்டுள்ளது. சைவ சித்தாந்த தத்துவங்களான பதி, பசு, பாசம் விளக்கப்படுகிறது. அன்பு, அருள், கொல்லாமை, புலால் மறுத்தல் எனப் பலவிதமான தலைப்புகளில் பாடியுள்ளார். முதல் நான்கு தந்திரங்களும் சிவஞானம் பெறும் தகுதியை வளர்த்துக் கொள்ள உதவுகிறது. முக்கியமாக மூன்றாம் தந்திரம் அட்டாங்க யோகம் பற்றி விரிவாக விளக்குகிறது. ஐந்தாவது சைவ சித்தாந்த உண்மைகளை விபரிக்கிறது. இறுதி நான்கு தந்திரங்கள் ஞானம் பெறும் நிலையில் பயன்களை விளக்குகின்றன.

திருமந்திரப் பாடல்களில் எளிமையும் இனிமையும் உண்டு, அதே நேரம் பரிபாசையில் உள்ள பல பாடல்களை விளக்கவுரை மூலமே விளங்கிக் கொள்ள முடியும். யோக வழி நிற்போர் பல ஆண்டுகள் பயிற்சியின் பின்னர், திருமந்திர பாடல்களை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் என்பது அனுபவ உண்மையாகும்.

திருமந்திர மகாவாக்கியங்கள், சிந்தனைகள் பிரபலமானவை. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், அன்பே சிவம், உள்ளம் பெருங்கோவில் ஊன் உடம்பு ஆலயம், ஆசை அறுமின்கள், தன்னை அறிய தனக்கொரு கேடில்லை என திருமந்திர கடலில் சில துளிகள் இவை.

தன்னை உணரத் தலைப்படுபவர்களுக்கு வழிகாட்டி நூலாகத் திகழும் திருமந்திரம் இன்று என்றுமில்லாதவாறு உலகெங்கும் பலராலும் படிக்கப்பட்டு வருகிறது. ஆங்கில மொழியிலும் படிக்கக் கிடைக்கிறது. உடம்பை முன்னம் இழுக்கு என்றிருந்த மனிதகுலம் திருமந்திர வழியில் நிலைபெற்றதால் உறுபொருளொன்றைத் தன்னுள் கண்டு, தான் அவனாகும் பேறு பெற்றுள்ளது.

‘ஓம் திருமந்திரம் சித்தர் திருமூலர் நாமம் போற்றி’ ■

**முரளீதரன் நவரத்தினம்**
MSc in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

# விரிவடையும் பிரபஞ்சம் சுருங்குமா?

சபா.விஜயகுமார்

அண்டவெளியில் உள்ள பொருட்கள் அனைத்தும் ஏறத்ததாழ 1400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு மிக அதிகமான அடர்த்தியுடையதான, சிறிய அளவினதாக தீப்பிழம்பாக இருந்திருக்கின்றது. இன்று எம்மால் அறியப்படுகின்ற அண்டத்திலுள்ள பொருட்கள் அனைத்தும் சில மில்லிமீற்றர் அளவுக்குள் அடங்கி இருந்திருக்கும் என நம்பப்படுகின்றது.
இத்தீப்பிழம்பானதுஅறியப்படாத ஏதோ ஒரு காரணத்தால் மிக வேகமாக வெடித்து விரிவடையத் தொடங்கிற்று. இதுவே பெரு வெடிப்பு(BiG-Bang) எனப்படுகின்றது. ஒவ்வொரு நொடியும் பல மடங்காக இவ்விரிவாக்கம் நிகழ்ந்தும், நிகழ்ந்து கொண்டும் இருப்பதாக இப்போது அறிவியலாக்கம் கண்டறிந்துள்ளது. இன்றும் அண்டவெளி முழுவதும் ஒரே சீராகப் பரவியிருக்கும் நுண்ணலைக் கதிர் வீச்சானது மேற்குறிக்கப்பட்ட பெரு வெடிப்பின் போது வெளியான கதிர் வீச்சின் எச்சங்களே எனக் கருதப்படுகிறது. இப்படியாக விரிவடைந்து வரும் அண்டம் எப்போதாவது சுருங்கிப் பழைய நிலையை அடையுமா? அதற்கு ஆம் என்பதே விடையாக இருக்கும். எந்தவொரு வெடிப்பு நிகழ்ந்தாலும் வெடித்துச் சிதறும் பொருட்கள் வேகமாக எல்லாப் புறமும் பரவலாகச் சென்று விழுவதை நாம் காணலாம். அவ்வாறு விழுவதற்குக் காரணம் புவியின் ஈர்ப்பு விசையாகும். ஈர்ப்பு விசை இல்லா இடத்தில் இவ்வெடிப்பு நிகழுமானால் என்னவாகும்? வெடித்துச் சிதறும் பொருட்கள் வெடிப்பின் வேகத்தில் தொடர்ந்து கீழே விழாது சென்று கொண்டே இருக்கும்.

வேறு ஒரு சக்தி தடுக்காவிட்டால் வேகமாகச் செல்லும் பொருட்கள் தொடர்ந்து அதே வேகத்தில் தொடராகச் சென்று கொண்டே இருக்கும். அவ்வெளியில் ஒரு பந்தை மட்டையால் அடித்தோமானால் அது சென்று கொண்டே இருக்கும். வேறு யாராவது அடித்த பந்தை நாம் அடித்த பந்தின் அருகே வரின் இரண்டு பந்தும் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டு இணைந்து விடும். ஏனெனில் அண்டத்திலிருக்கும் எல்லாப் பொருட்களும் அதனைத் தன் நிறைப்படி ஈர்ப்பு விசையைக் கொண்டிருக்கின்றன.


அதாவது சூரியன் உருவாகியவுடன் ஏற்பட்ட அதி



பயங்கர வெடிப்புடன் உருவான புகையும், தூசும் இப்படித் தூக்கி எறியப்பட்டும் சூரியனைச் சுற்றி அவை ஈர்ப்பு விசையில் இணைந்துதான் இந்தப் பூமியும் மற்றைய கோள்களும் உருவாகின. பெரு வெடிப்புக்குப் பின்னர் விரிவடைந்த பிரபஞ்சம் அதன் வெடிப்பு வேகம் குறையும்போது பிரபஞ்சத்தில் இருக்கும் உடுக்கள், பால்வெளிமண்டலம் போல உள்ள எண்ணற்ற மண்டலங்களின் ஈர்ப்பு விசையால் மீண்டும் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டு சுருங்கி தொடக்க நிலைக்கே வந்து விடும் என அறிவியலாளர்கள் எதிர்பார்த்தனர்.
அதனைப் பெரு ஒடுக்கம் (Big Crunch) என அழைத்தனர். பெரு வெடிப்பு ஏற்பட்டு 1400 கோடி ஆண்டுகள் ஏறத்தாழ ஆனதால் விரிவாக்க வேகம் குறைந்து ஈர்ப்பு விசையினால் இந்த சுருக்கம் ஆரம்பித்திருக்கும் என அவர்கள் கணித்தார்கள். ஆனால் ஹபிள் போன்ற தொலைநோக்கியினால் அவதானிக்கும் போது அவ் வேகம் குறையவில்லை என்றும் மாறாக பிரபஞ்சம் வேகமாக விரிவடைந்து கொண்டு இருப்பதைக் கண்டறிந்த போது விஞ்ஞானிகள் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விட்டனர். இவ் வேகத்தில் விலகிச் சென்று கொண்டிருப்பின் ஈர்ப்பு விசை வலுவிழந்து விடும் இதனால் தம்மைச் சுற்றியுள்ள பொருட்கள் எல்லாம் பூமியிலிருந்து மேலெழுந்து மிதக்க ஆரம்பித்துவிடும். எல்லாப் பொருட்களும் அணுஅணுவாக பிரிந்து வெளியில் விலகிச் சென்று விடும். மனிதர்களும் தாவரங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் ஈர்ப்பு விசை தான் இவை அனைத்தையும் இழுத்து இணைத்து வைத்திருக்கின்றன. இதன் விளைவால் சூரிய குடும்பத்தில் உள்ள எல்லாக் கிரகங்களும் சூரியனை விட்டுப் பிரிந்து சென்று விட மேலும் விரிவாக்க வேகம் கூடக் கூட பிரபஞ்சம் அழியும் என்ற கோட்பாட்டை விஞ்ஞானிகள் முன் வைத்துள்ளனர்.

இப்படியாக விரிவடைதலும் சுருங்குதலும் திரும்பத் திரும்ப நடை பெற்றால் தான் நாம் வாழும் இப் பிரபஞ்சம் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பெரு வெடிப்பின் மூலம் பிரபஞ்சம் முதன் முதன் முதலாகத் தோன்றவில்லை என்றும் முன்னரே இருந்த பிரபஞ்சம் சுருங்கி விரிவடைந்தமையால்தான் அது பௌதீக விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றது என்றும் ஒன்றுமே இல்லாத நிலையில் இருந்து பிரபஞ்சம் உருவாகவில்லை எனவும் இயற்பியல் வல்லுநர் பரம்சிங் கூறுகின்றார். ஆனால் எப்போது பிரபஞ்சம் முதன் முதலாகத் தோன்றியதென ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார். இறுதியாக அணு வெடித்துச் சிதறியதால் உருவான பிரபஞ்சம் விரிவடைகிறது. பலகோடிப் பொருட்களும் உண்டாகின என்பதும் சரிதான் ஆனால் அணு ஏன் வெடித்துச் சிதறியது? இந்தக் கேள்விக்குப் பதிலாக அறிவியலாளர்கள் கோட்பாடொன்றை முன்வைக்கின்றனர். அதுதான் பெரும் சுருக்கக் கொள்கை. பரந்து விரிந்து கொண்டிருக்கும் இப்பிரபஞ்சம் ஒரு கட்டத்தில் மீண்டும் சுருங்கத் தொடங்கும். அப்படிச் சுருங்கிச் சுருங்கி அணு அளவிலான பொருளாக மாறும். கோடானகோடிப்பொருட்கள் அணு அளவில் சுருங்குவதால் ஏற்படும் அழுத்தம் காரணமாக மீண்டும் அதிபயங்கரமாக அது வெடிக்கும். இப்படி வெடிப்பதால் பிரபஞ்சம் மீண்டும் விரிவடையும். வெடித்து விரிந்த பிரபஞ்சம் மீண்டும் சுருங்கும். இப்படி பிரபஞ்சம் வேகமாக விரிந்து சுருங்கிய கொண்டு இருப்பதாலேயே அவ் உயிர் வாழ்வது உட்பட அனைத்து இயக்கங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ■

இராகன்



# ஊருக்கை ஒரு கதை! – 10

## கோழிக் கள்ளன் கோவிந்த சாமி

**“பகலிலை ஊர் மேயிற கோழியள் பொழுதுபடுற நேரத்திலை மரங்களிலை பறந்து ஏறியிருக்கிறது ஊரிலை வழக்கம். ஊர்க் கோழியளை கூடு அடைச்சு வளர்க் கிறதில்லை. மரத்திலைதான் இரவு முழுக்க இருக்கும். விடியப் பறந்து இறங்கி இரைதேட போகும். முட்டை இடுறதுக்கும், அடை கிடக் கிறதுக்கும்தான் பேடுகளை அடைக்கிறது. சேவலை பிடிச்சு அடைக்கிறது சட்டியிலை போடுறதுக்குத்தான்.”**

மதில் சுவருகளிலை ஏறிக்குதிக்கிறது, வேலி விராயளிலை கிடக்கிற கதியால் கட்டைய ளிலை தொங்கிறது. பூட்டிக்கிடக்கிற படலையள், இரும்புக் கேற்றுகளிலை ஏறி வீட்டுக்குள்ளை நிக்கிற மரங்களிலை பூ பிடுங்கிறது எண்டு அவர் செய்யிற “சேர்க்கஸ்” விளையாட்டுகள் வீட்டுக்காரருக்கு தெரி யும்.

கோவிந்தசாமியைத் தெரியாதவை ஊருக்கை இல்லை. “கோவிந்தி” எண்டு சொன்னால்தான் எல்லாருக்கும் விளங்கும். கோவிந்தசாமி எண்ட அவரின்ரை பேரிலை சாமி ஒட்டிக்கொண்டு நிக்கிறதுக்கு காரணம் இருக் கெண்டுதான் எல்லாரும் சொல்லுவினம். சாமியை விட்டால் கோவிந்தி இல்லை எண்டு சொல்லுற அள வுக்கு இருந்தாராம். அவ்வளவு பக்தியாம். கடவுள் பக்தி. முருகனிலை கொள்ளை பக்தியாம். வெள்ளிக்கிழமை வந்திட்டுதேயெண்டால் கோவிந்தி சைக்கிள் வலிச்சுக் கொண்டு செல்வச்சந்திதிக்கு போவாராம். கிழமைக் கொருக்கால் செல்வச்சந்நிதியானின்ரை திருநீறு, சந்தணத்தை உடம்பெல்லாம் தடவாவிட்டால் மனிச னுக்குப் பத்தியப்படுறதில்லை. வெள்ளி, ஞாயிறு நாளு களிலை மனிசன் மச்சமாமிசத்தை வாயிலும் வைக்கா தாம். வெள்ளியிலை கந்தசாமி! ஞாயிறிலை கோவிந்த சாமி!

ஊரிலை திருவெம்பாவைக் காலத்திலை அவரின்ரை பக்தியின்ரை உச்சத்தைப் காணலாம். மார்கழிக் குளிருக் குள்ளை வெள்ளணை எழும்பிக் குளிச்சிட்டு, கோயி லுக்கு போய், தெருத் தெருவாய் சங்கு சேமக்கலத தோடை திரிஞ்சு, திருப்பள்ளியெழுச்சி பாடிவிட்டு கோயிலுக்காலை வெளியிலை வர எப்பிடியும் எட்டு ஒன்பது மணியாகிவிடும். அது வரைக்கும் மனிசன் வாயிலை ஒரு சொட்டுத் தண்ணி விடமாட்டார். கோயில் அலுவலுகள் எல்லாம் முடிச்சு வீட்டுக்கு வந்துதான் தேத்தண்ணிகூடக் குடிப்பார். திருப்பள்ளி எழுச்சியை ராகத்தோடை பாடுவாரெண்டால் சீர்காழி கோவிந்தராசன் பிச்சை வாங்கவேணும். வெண்கலக் குரல் அவருக்கு. ஒவ்வொரு நாளும் காலையிலை அவர் பாடுற திருப்பள்ளியெழுச்சி குளிர் காத்திலை கரைஞ்சு “கூல் றிங்சா” காதிலை பாய்ஞ்சு இனிக்குமாம்!

கோயிலிலை தொண்டு செய்யிறதெண்டால் கோவிந் திக்கு நல்ல விருப்பமாம். விழுந்து விழுந்து செய்வா ராம். உரிலை இருக்கிற பிள்ளையார் கோயிலைக் கூட்டிக் கழுவிற வேலையளுக்கு சம்பளம் குடுத்து ஒராளை வைச்சிருக்கினமாம். அவர் தன்ரை வேலையைச் செய்யத் தொடங்கிறதுக்கு காலையிலை வரமுன்னமே கோவிந்தி கோயில் வளவின்ரை அரைவாசிக்கு மேலை கூட்டி துப்பரவாக்கி விடுவாராம். கோயில் வளவுக்குள்ளை விழுந்திருக்கிற ஆலமிலை, அரசமிலை எல்லாத்தையும் ஒவ்வொண்டாக குத்தூசியாலை குத்திச் சேர்ப்பாராம். சேர்த்த இலைகளை, குத்தூசியோடை கிடாய் ஆடு வளர்க்கிற தன்ரை சினேகிதனுக்கு குடுப்பாராம். வேலையாளுக்கு கோவிந்தி ஒரு “சுப்பர்வைசர்” ஆகி யிருந்தார்!

கோயிலுக்கு ஐயர் வரும்வரைக்கும் காத்துக்கொண்டு நிண்டு, ஐயருக்கு செய்யவேண்டிய ஒத்தாசையைச் செய்வார். கிணத்திலை தண்ணியள்ளி குடங்களிலை நிரப்பிவிடுறது, மடப்பள்ளியிலை கிடக்கிற ஏதனங் களை பழப்புளியும் சாம்பலும் சேர்த்து மினுக்கிறது, அவிசு வைக்க பச்சை அரிசி கழுவிக் குடுக்கிறது, கோயில் வளவுக்குள்ளை நிக்கிற பூ மரங்களிலை பூசைக்கு பூ ஆய்ஞ்சு குடுக்கிறது, பூசைக்கு பால் வாங்க கோயில் மனேச்சர் வீட்டை போவிட்டுவாறது, பூசை முடிஞ்ச பிறகு ஐயருக்கு ஊர்ப்புதினங்கள் சொல்லிறது எண்டு கோவிந்தி செய்யிற ஒத்தாசையளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பொழுது விடிய முன்னமே கோவிந்தி ஒரு முறை ஊரைச் சுத்தி வந்திடுவாராம். வெள்ளாப்பிலை சேவல் கூவேக்கை ஆள் பூக்கூடையோடையும், கொக்கி கம்பியோடையும், பூத்தபடி நிக்கிற பூமரங்கள் நிக்கிற வீடுகளின்ரை மதில் சுவருகள், வேலியளோடை தொங்கிக்கொண்டு நிற்பாராம். அவரின்ரை அந்தப் வழக்கம் எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். ஆள் அசு மாத்தம் கண்டு நாயள்கூட குலைக்கிறதில்லையாம். நாயளுக்குக்கூட அவர் பழகிப்போனவர்!

காவிக்கொண்டு போற பூக்கூடையை நிரப்பிறதுக்கு கோவிந்தி பெரும் பாடுபடுவார். மதில் சுவருகளிலை ஏறிக்குதிக்கிறது, வேலி விராயளிலை கிடக்கிற கதியால் கட்டையளிலை தொங்கிறது. பூட்டிக்கிடக்கிற படலை யள், இரும்புக் கேற்றுகளிலை ஏறி வீட்டுக்குள்ளை நிக்கிற மரங்களிலை பூ பிடுங்கிறது எண்டு அவர் செய்யிற “சேர்க்கஸ்” விளையாட்டுகள் வீட்டுக்காரருக்கு தெரியும். கோயிலுக்குத்தானே எண்டு ஆரும் எதுவும் பேசுறதில்லை. பொழுது விடியேக்கை வீட்டுக்காரர் கொள்ளுற நித்திரையை குழப்பாமல் கோவிந்தி தன்ரை விளையாட்டுகளை காட்டுவார். தேமா மரங்களின்ரை கொப்புகளிலை குரங்குபோலை தாவுவார்! எல்லாத் துக்கும் காரணம் அவரின்ரை அளவில்லாத கடவுள் பக்திதான்!

அப்பிடிப்பட்ட பக்திமான் கோவிந்தசாமியின்ரை பேரிலை ஒட்டியிருக்கிற “சாமி” உதிர்ந்து போறதுக்கு காரணமான ஒரு கதையிருக்கு. அந்தக் கதை பூவுக்காக மரங்களிலை குரங்குபோலை தாவேக்கைதான் நடந் ததாம்.

பகலிலை ஊர் மேயிற கோழியள் பொழுதுபடுற நேரத்திலை மரங்களிலை பறந்து ஏறியிருக்கிறது ஊரிலை வழக்கம். ஊர்க் கோழியளை கூடு அடைச்சு வளர்க்கிறதில்லை. மரத்திலைதான் இரவு முழுக்க இருக்கும். விடிய பறந்து இறங்கி இரைதேட போகும். முட்டை இடுறதுக்கும், அடை கிடக்கிறதுக்கும்தான் பேடுகளை அடைக்கிறது. சேவலை பிடிச்சு அடைக்கிறது சட்டியிலை போடுறதுக்குத்தான்.

முதல்நாள் ஒரு வீட்டிலை தேமாவிலை பூ ஆஞ்சுகொண்டு கோவிந்தி போனாப்பிறகு, வேலியிலை நிண்ட பெரிய பூவரசு மரத்திலை இருந்த சேவல் கூவேல்லையாம். வீட்டுக்காரர் கோழியை தேடி அலைஞ்சிருக்குதுகள். கிடைக்கயில்லை. கோவிந்தி யையும் கேட்டிருக்கினம். தான் பூ ஆயேக்கை மரத் திலை சேவல் இருந்ததை தான் கண்டதெண்டு சத்தியம் பண்ணினாராம். “நான் கும்பிடிற சந்நிதியானாணை என்ரை முருகனின்ரை கொடியிலை நிக்கிறதைப் போலை சேவல் இருந்ததை என்ரை ரண்டு கண்ணாலையும் கண்டனான்” எண்டு அடிச்சு சத்தியம் பண்ணினாராம்.

அண்டு கோவிந்தி கோயிலுக்கு கொண்டு போன பூக்கூடையுக்குள்ளை பூவோடை சேர்ந்து ஒரு கோழி இறகு கிடந்ததை கோயிலிலை பூசை வைக்கிற ஐயாவும், வேலைக்கு நிண்ட ஆளும் கண்டவையாம்.

“மயிரைக் கட்டி மலையை இழுத்தால், வந்தால் மலை. போனால் மயிர்” எண்டு கோவிந்தி அடிக்கடி வாயோரியாச் சொல்லுவாராம். திருவெம்பா விரதம் முடிஞ்ச காலத்திலை நல்ல ஒரு மழை நாளிலை சேவல் ஒண்டு மழைக்கு கோவிந்தி வீட்டு தாழ்வாரத்திலை ஒதுங்கியிருக்குது. கோவிந்திக்கு சந்நிதியானின்ரை சேவல் கொடி ஞாபகம் வந்திட்டுதாம். நீளமான ஒரு “நைலோன்” நூலை எடுத்து ஒரு நுனியிலை தேங்காய்ச் சொட்டு ஒண்டை கட்டினாராம். அதை சேவலுக்கு முன்னாலை அது பார்க்க போட்டாராம். சேவல் தேங்காய் சொட்டை சொண்டாலை கொத்தி விழுங்கிவிட்டுதாம். தேங்காய் சொட்டு நூலோடை சேவலின்ரை தொண்டையுக்கை சிக்கிச்சுதாம். நூலை மெதுமெதுவா இழுத்து ஒருபடியா சேவலை வீட்டுக்குள்ளை இழுத்துப் போட்டாராம். ஆயித்தமா வச்சிருந்த ஈரச்சாக்கை சேவலுக்கு போர்த்தி மடக்கிப் போட்டாராம். மயிரைக் கட்டி மலையை இழுக்கிற தந்திரம் கோவிந்திக்கு தெரிஞ்சிருந்துது! இந்தக் கதை ஊருக்கை எப்பிடித் தெரிஞ்சுதெண்டு கடைசிவரையும் கோவிந்திக்கு தெரியாதாம். மலையை இழுத்த அண்டு கோயில் வேலை செய்ய சம்பளத்துக்கு வைச்சிருந்த அந்த ஆள் கோவிந்தி வரச்சொல்லி வீட்டுக்கு வந்து போனது ஐயருக்கும் தெரியுமாம்! ■

# மீட்சிக்கான குரல்

ந. குகபரன்



அதிகாரம் காலங்காலமாக ஒவ்வொரு வடிவத்தில் தனது இருப்பைப் பேணிக் கொள்கிறது. பதவி, சலுகை, பணம் என ஆயிரம் போதைகளை விசிறுகிறது. தனது வல்லமையால் எதிர்வினையாற்றும் எத்தனிப்புகளை அடைத்து கேள்விகேட்க முடியாதபடி மௌனத்தைப் பரிசளிக்கிறது. இது எல்லாக்காலங்களிலும் நீள்கின்றமை வரலாறு.

அதிகார வலையில் சிக்காது சமூகத்தின் மீட்சிக்காக, மற்றவர்களின் துயர்களை ஒலித்த குரல்களையும் வரலாறு பதிவுசெய்து வைத்துள்ளது. அத்தகையவர்கள் உண்மைக்காகக் கொடுத்த விலை அதிகம். ஆனால் அவர்கள் எதற்காகவும் அஞ்சவில்லை. சமரசம் செய்யவுமில்லை. அவர்களின் சிந்தனை மனசாட்சியின் குரலாக, மனித மாண்பின் குரலாக ஒலித்தது. இப்பொழுதும் உலகின் ஏதோ ஒரு மூலையில் அத்தகைய குரல்கள் ஒலித்தபடிதானுள்ளன.

உண்மைக்காகத் துணிவோடு செயற்பட்ட அத்தகைய மனிதர்களை இலக்கியங்களில் காண முடியும். வகைமாதிரியாக சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் ஒருகாட்சி. நெடுங்கிள்ளிக்கும் நலன்கிள்ளிக்கும் இடையே போர் மூண்டுவிட்டது. போரின் அவலத்தை நன்குணர்ந்தவர் கோவூர்க்கிழார். நலன்கிள்ளியின் படைகள் நெடுங்கிள்ளியின் ஆவூர்க் கோட்டைப் பகுதியை முற்றுகையிட்டன. மக்கள் சுற்றிவளைப்பினுள் அகப்பட்டு திகைத்து நின்றனர். இந்த வேளையில் மீட்சிக்கான குரலாக ஒலிக்கிறார் கோவூர்க்கிழார்.

“இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மித் பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கைய வெய்துஉயிர்த்து
அலமரல்யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனை கூஉக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்குஇனிது இருத்தல்
துன்னரும் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயின் நினதுஎனத் திறத்தல்
மறவையாயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யகத்து
இறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்துஇது காணுங் காலே” என்கிறார்.

எத்தகைய துணிச்சலும் திடமும் நிறைந்த கருத்துகள். யுத்த வளையத்துள் அடைபட்டு வருந்தும் உயிர்களின் கையறுநிலையை கண்முன் விரிக்கிறார் புலவர். கூட்டத்தோடு சேர்ந்து நீருண்ணாது பசிமிகுந்த யானைகள் உணவுமின்றி கட்டிய கம்பத்தைச் சாய்ந்து நிலத்தில் புரண்டு இடியொலி போல பிளிறுகின்றன. குழந்தைகள் பாலில்லாது அழுதுதுடிக்கின்றனர். பூவிலா மகளிர் வெறுந்தலையை முடிக்கின்றனர். வீடுகளில் உள்ளவர் வருந்திக் கூப்பிடும் கூவல் எதிரொலிக்கின்றன. இவையெல்லாவற்றையும் கேட்டும் நாணம் கொள்ளாது இனிதாக இருக்கிறாயே என மன்னனின் அறமற்ற செயலைக் கடிந்துரைக்கிறார் புலவர்.

அத்தோடு அவர் நிறுத்திவிடவில்லை. நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான தெரிவுகளையும் மன்னனுக்கு முன்வைக்கிறார். மன்னனே! உன்னிடத்தில் அறம் இருக்குமானால் உன்கோட்டையை திறந்து நாடு உனது என்பதை அமைதிவழி உணர்த்து. இல்லையேல் உன் வீரம் மீது நம்பிக்கை இருக்குமாயின் கதவைத் திறந்து போர் செய். இவை இரண்டும் செய்யாது மதிற் கதவுகளை அடைத்துக்கொண்டு உள்ளே ஒளிந்திருப்பது வெட்கக்கேடான செயல் என்பதை எவ்வித அச்சமுமின்றி இடித்துரைத்துள்ளார்.

போர் நிகழும்போது முதலில் வதைபடுவது போரில் எவ்வகையிலும் தொடர்புபடாதவர்களே. இங்கு யானைகளின் அவலமும் குழந்தைகளின் அழுகை யும் மக்களின் கூப்பாடும் பேரவலத்தின் சாட்சிகளாகியுள்ளன.

நாட்டை ஆளும் அரசன் வாழும் உயிர்களின் நலனைக் கருத்திற்கொள்ளவேண்டியது முதற் கடன். இங்கே அரசன் பெருந்தவறிழைக்கிறான். தனது மக்களோ துன்பப்படுகிறார்கள். அதைக் குறித்து கிஞ்சித்தும் கவலைகொள்ளாது அரசன் செயற்படுகிறான். இந்த நெருக்கடியில் நமக்கேன் என்று ஒதுங்கிக் கொள்ளாது உண்மையின் குரலாக ஒலிப்பது, துன்பத்தைப் போக்கத்துணிவது அறிவுடையோர் கடன். கோவூர்க்கிழார் அந்தப்பணியை செவ்வனே செய்துள்ளார்.

அதிகாரம் படைபலம், என்பவற்றைக் கண்டு அஞ்சாது உண்மையின் பொருட்டு செயற்படும் பாங்கு இங்கே வெளிப்பட்டுநிற்கிறது. எதிர்நிற்பர் பேரரசரே ஆயினும் அவர் மாண்பற்றவராயின் போற்றுதற்குரியவரல்லர் என்பதை அறைந்து சொல்லும் தெளிவு மனஉரத்தின் அடையாளம்.

☆☆☆

சங்ககாலத்தில் வாழ்ந்த திருமாவளவன் என்ற மன்னன் தன்னை நாடிவந்தவர்களையும் மதிக்காது நடந்துள்ளான். இவன் செயல் புலவர் குமரனாரை சினமுறவைத்தது. திருமாவளவன் பெரும்படையுடைய தலைவன். ஆனால் புலவர் அவனை நோக்கி இவ்வாறு உரைக்கிறார். அதில்வரும் ஒரு பகுதி,

“வளிநடந்தன்ன வாஅய்ச் செலல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனாஅக்
கடல்கண் டன்ன ஒண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ
.............................................................
.............................................................
.............................................................
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே”

நாற்படைகளும் செல்வ வளமும் மிகுந்து விளங்கும் பேரரசர்களாக இருந்தாலும் எம்மை மதிக்காதவரை நாம் மதிக்கமாட்டோம். மாறாக வரகரிசிச் சோறுதந்து எம்மை வரவேற்று உபசரிக்கும் சீறூர்த் தலைவரானாலும் அவரை நாம் போற்றுவோம். அறிவில்லார் செல்வம் எவருக்கும் பயன்படாது என்ற புலவர், நல்லறிவுடையவர் வறுமையுற்றாலும் அவரை நாம் வாழ்த்துவோம் என்று உரைப்பதில் அதிகாரத்திற்கு தலைவணங்காது உண்மைக்காக ஒலிக்கும் குரலைக் கேட்க முடிகிறது.

“தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே” இன்னும் இந்த உலகம் இருக்கிறது என்ற புறப்பாடலும் இத்தகைய மாண்புடைய மனிதர்களின் இருப்பை வியந்து போற்றுகிறது.

# தமிழ்த்தேசியக் கட்சிகளும் அவை முன்னெடுக்கும் எதிர்ப்பரசியலும்

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கட்சியும் கொள்கையளவில் தோற்றுப் போன கட்சியாகவே இருக்கிறது. இது ‘மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி’ என்ற கொள்கையை இழந்துபோய் நீண்டகாலமாயிற்று. இந்த இடத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ முன்னணியோ விதிவிலக்கல்ல அவர்களும் கொள்கை இழந்தவர்களே.

தமிழ்த்தேசியக் கட்சிகள் மாவீரர் நாளுக்காகவும் மே 18 க்காகவும் காத்திருக்கின்றன. ஒரு சுடரை ஏற்றி தம்மை விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாகவும் தமிழ்த்தேசியம் சார்ந்து குரல் கொடுக்கின்றவர்களாகவும் காட்டிக் கொள்வதற்காக இந்த நாட்களை பயன்படுத்த முனைகின்றனவே தவிர உணர்வெழுச்சியுடன் இவை செயற்படுவதில்லை. சுயாதீனமாக மக்கள் முன்னெடுக்கின்ற நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களிலும் காணாமல் போனோருக்கான போராட்டங்களிலும் இவர்களின் பங்களிப்பு என்ன?. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்துவரும் மக்கள் தொடர்ச்சியாக இவர்கள் மீது குற்றம் சாட்டிக்கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் மக்கள் மயப்பட்டவர்கள் இல்லை என்பதனையே இது வெளிப்படுத்துகிறது.

எதிர்ப்பரசியல் எப்போது பாராளுமன்றத்துக்குள் சாத்தியமானதாக அமையும் என்றால் இனவாத நோக்கற்று மக்கள் மயப்பட்டு சிந்திக்கின்ற கட்சிகளுடன் சேர்ந்து மக்களுக்காக சிந்திக்கின்ற போதேயாகும். ஆனால் நிலைமை இனவாதமற்று முற்போக்குத் தனத்துடன் செயற்படுகின்ற சிங்களக் கட்சிகள் பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கான சாத்தியம் மிகக் குறைவானதாகும். பௌத்த இனவாதமே பெரும்பான்மை சிங்கள மக்களிடம் வேரூன்றி இருக்கின்றது. இதுவே தேர்தல்களைத் தீர்மானிக்கின்றன. ஜனநாயகப் பண்புமிக்க முற்போக்குத்தனமாக சிறுகட்சிகள் தொடர்ந்தும் தொடக்கநிலைக் கட்சிகள் போலவே இருக்கின்றன. இவை திரண்ட ஒரு பெருங்கட்சியாக மாற்றம் அடைவதென்பது இயலாத காரியமே. எனவே தற்போதைய நிலைமையில் எதிர்ப்பரசியல் என்பது பாராளுமன்றத்துக்கு வெளியே இருந்து அழுத்தத்தைக் கொடுப்பதிலேயே சாத்தியமாகும். இது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை நிராகரிக்க வேண்டும் என முன்மொழிவதாகக் கருதிக்கொள்ளக் கூடாது. தமிழ் தேசியக் கட்சிகள் தம்மை பேரம் பேசும் கட்சியாக நிலைநிறுத்திக்கொள்வதற்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான வழிகளைத் தேடுவதற்கும் தம்மை மக்களிடம் நிலைநிறுத்திக்கொள்ளுதல் வேண்டும். அதற்கு மக்களுக்கான போராட்டங்களை இவையே முன்னெடுத்துச்செல்ல வேண்டும். முக்கியமாக மக்களோடு இருக்க வேண்டும். அவ்வாறு இருத்தல் என்பது மக்கள் சார்ந்த போராட்டங்களை முன்னெடுப்பதென்பதும் ஆளும் கட்சிகளுக்கு உவப்பானதாக இருக்காது. இவர்கள் பெறுகின்ற சலுகைகளுக்கும் தடையாகவுமே இருக்கும். இந்த விபரீத முடிவுக்கு புத்திசாலித்தனமிக்க இந்தக் கட்சிகள் ஒருபோதும் போகாது.

ஏதிர்ப்பரசியல் என்பது மக்கள் நலன் சார்ந்து சிந்திப்பதாகும். மக்களின் இயல்பான வாழ்க்கைக்கும் சுதந்திரத்திற்கும் உறுதியான வழியைக் கண்டடைவதற்கான வழிமுறைகளை நோக்கிப் பயணிப்பதாகும். இங்கு கட்சி என்பது வெறும் அடையாளப்படுத்தலே தவிர தேசியத்தின் அடையாளமில்லை. மக்களை ஒன்றிணைத்து கொள்வதற்கான ஒரு அமைப்பு என்பதற்கப்பால் வேறு எந்த முக்கியத்துவமும் அதற்கு இருக்காது. ஆனால் இங்கு நிலைமை வேறு தனிநபர்கள் கட்சியின் நலன் சார்ந்து மோதிக்கொள்கின்றார்கள் தேர்தல் காலங்களில் பிரதிநிதிகளுக்கான பங்கீட்டில் பிரச்சினை தொடங்குகின்றது. கூட்டுக் கட்சிகளே தங்களுக்குள் வசைபாடிக்கொண்டும் மோதிக்கொண்டும் முரண்டுபிடிக்கின்றன. இந்தப் பங்கீட்டுப்பிரச்சினையே இவர்களின் சுயரூபத்தைக் காட்டிவிடும். ஒவ்வொருவரும் பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கு படுகின்றபாடு பெரும்பாடு. காட்டிக்கொடுப்புக்கள் குழிபறிப்புக்கள் என எத்தனை செயல்களைச் செய்துகொள்ள வேண்டியிருக்கின்றது. இனி வர இருக்கின்ற மாகாண சபைத் தேர்தலிலும் இந்த கூத்துக்களை மீண்டும் ஒரு முறை காணலாம். இந்தப் பாடுபட்டு பாராளுமன்றத்துக்குள் நுழைபவர்கள் எதிர்ப்பரசியலில் ஈடுபடுவார்களா? ■



# சேதனைப் பயிர்ச்செய்கை காலத்தின் தேவை

மு.தமிழ்ச்செல்வன்

தற்போது நாட்டில் அதிகம் பேசப்படும் விடயமாக காணப்படுவது சேதனை விவசாயம் பற்றியது. ஒருபுறம் எதிர்ப்புக்களும் இன்னொருபுறம் ஆதரவுகளும் காணப்படுகிறன. எதிர்க்கின்றவர்களினதும், அவர்களினது சந்ததியினரதும் ஆரோக்கியத்திற்காகவும்தான் சேதனைப் பயிர்ச் செய்கை முறைகளை ஆதரிக்கின்றோம் என்கின்றனர் இத் திட்டத்திற்கு ஆதரவானர்களும், அரச தரப்பினர்களும்.

ஆனால் எதிர்கின்றவர்களோ அதிகரித்துள்ள சனத் தொகைக்கு சேதனை முறைப் பயிர்ச்செய்கை மூலம் பெறப்படும் உற்பத்தி போதுமானதாக இருக்காது எனவே உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் இதன் போது அரசு பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதி செய்கின்ற பொருட்களில் இராசாயன உரம் கிருமி நாசினி பயன்படுத்தப்பட்டிருக்காது என்பதற்கு என்ன உத்தவரவாதம் எனத் தெரிவிக்கின்றனர். அத்தோடு அரசு சேதனைப் பயிர்ச் செய்கைக்கு படிப்படியாக விவசாயிகளை மாற்றியிருக்க வேண்டுமே தவிர எடுத்த எடுப்பில் முழுதாக அசேதனைப் பயிர்ச் செய்கையை கைவிடும் அளவுக்கு சென்றிருக்கக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறு இரண்டு தரப்பினர்களும் தங்களது நியாயங்களைக் கோபமாகவும், கோரிக்கையாகவும், ஆதங்கமாகவும் வெளிப்படுத்தி வரும் நிலையில் சேதனைப் பயிர்ச் செய்கையை காலத்தின் கட்டாயமாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்பதனையும் நாம் மறுதலிக்க முடியாது. எனவே சேதனப் பயிர்ச் செய்கை பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சேதன விவசாயம் என்பது உயிரியல் தொகுதியை அடிப்படையாகக் கொண்டது. மனிதன், விலங்குகள்,தாவரங்கள், நுண் ணங்கிகள் மற்றும் பறவை இனங்கள் என்பன ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து வாழும். சூழல் தொகுதியொன்றில் உணவு உற்பத்தி என்பது நிலைபேறாக அமையவேண்டும். அத்துடன் போதுமானதாகவும், நஞ்சூட்டமற்றதாகவும் ஆரோக்கியமுள்ள உணவாகவும் இவ் உணவு உற்பத்தி அமைதல் கட்டாயமானதாகும். பண்டையகாலத்தில் பழக்கத்திலிருந்து வந்த இச்சமுதாய சமநிலை அதிகரித்த உணவுத் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு நிர்ப்பந்திக்கப்பட்ட விஞ்ஞான உலகம் அசேதன பசளைகள், கிருமிநாசினிகள் போன்றவற்றையும் அறிமுகமாக்கியது. அத்துடன் அதிகரித்த சனத்தொகையின் தேவைகளை நிவர்த்திசெய்யும் பொருட்டு பசுமைப்புரட்சி நடந்தேறியது. இதனடிப்படையில், கூடிய விளைவைத்தரும் புதிய இனங்களும் வீரிய வர்க்கங்களும் அறிமுகமாகின. விவசாயிகளிற்கும் இவ் அசேதன உரப்பாவனை அதிக இலாபமூட்டியமையால் விவசாயம் வியாபாரமாக உருவெடுத்தது.

ஆனால் அதிகரித்த உரப்பாவனை மற்றும் நஞ்சுள்ள கிருமிகொல்லிகள் சூழலை மாசாக்கியதுடன் மனித சுகாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட அதிகளவிலான உரப்பாவனை மற்றும் வரையறையற்ற பீடைநாசினிப்பாவனை என்பனவே இக்குழப்பத்திற்கு காரணமாயின. உதாரணமாக நீருடன் கலந்துள்ள அதிகளவு நைதரசன், நீலப் பிள்ளைகள் (Blue Babies) பிறப்பதை அதிகரிக்கிறது. விஞ்ஞானரீதியாக உறுதிசெய்யப்படாதவிடத்தும் அதிகளவு களைநாசினி பாவிக்கப்பட்ட இடங்களிலையே சிறுநீரக நோய் அதிகளவில் பதியப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில் விவசாயத்தை உயிருள்ள ஒரு தொகுதியாகக் கருதி சூழலுடன் இசைவாமுறையில் இயற்கையாகக்கிடைக்கும் உள்ளீடுகளை காத்திரமான முறைகளில் பயன்படுத்தி விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பயனளிக்கக் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கான ஒன்றினைந்த பயிர்ச்செய்கை முறையே சேதனப் பயிர்ச்செய்கையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

> சேதனமுறையில் உணவு உற்பத்தியில் ஈடுபடும் எவரும் ஓர் ஒன்றினைந்த பண்ணைமுறையே பேணிப்பாதுகாக்க வேண்டும். இவ்வகையில் பொருத்தமான சேதனத்திற்கு இசைவாக்கமடைந்துள்ள பயிர்வகைகள் மற்றும் விலங்குவே ளாண்மை, கால்நடை வளர்ப்பு என்பன இதிலடங்கும். விலங்குவேளாண்மை, கால்நடைவளர்ப்பு என்பவற்றில் கூட்டெருப்பசளை தயாரிக்கமுடியும். இப் பொறிமுறையில் கால்நடைக்கு தேவையான இலைகுழைகளை உருவாக்ககூடிய மரம் மற்றும் செடி கொடிகளில் இருந்தும் பசுந்தாட்பசளை உருவாக்கலாம்.

சாதாரண விவசாயத்தைப் போன்று உணவைப் பெற்றுக் கொள்வதுதான் இம்முறையிலும் பிரதான நோக்கமாக அமையும். இம்முயற்சியின் போது எம் சுற்றுசூழலையும் நாம் வாழும் சுற்றாடலையும் மாசுறாமல் பாதுகாத்தலிலும் மிகமுக்கியபங்கு வகிக்கின்றது. அத்துடன் எவ்வளவுக்கு எவ்வளவு எம்முடன் இணைந்து செயலாற்ற விரும்பும் நாம் இருக்கும் பூமியின் மண்ணானது நிலைபேறான வளம் ஒன்றைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது சேதனப்பயிர்ச்செய்கையில் மிகமுக்கியமாகக் கருதப்படுகின்றது. சேதன உரங்களின் பாவனை மண்ணின் போசணை வளத்தை மேம்படுத் தும். அத்துடன் மண்ணிலிருந்து கிடைக்கக்கூடிய அவசியமான மூலங்களை இலகுவில் அகத்துறிஞ்சக் கூடிய வடிவில் தொடர்ந்தேச்சையாக வழங்கும். மட்டுமல்லாது நுண்ணங்கிகள், மண்புழு மற்றும் ஏனைய பயன்தரும் உயிரினங்கள் வாழக்கூடிய பொருத்தமான கட்டமைப்பொன்றை இச்சேதனப் பொருட்களின் பாவனை உருவாக்கிவிடுகின்றது. இதனால் மேற்போந்த உயிரினங்களின் தொழிற்பாடு அதிகரிப்பதனால் தாவரங்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழல் ஒன்று உருவாகுகின்றது. மண்ணிற்கு இடப்படும் சேதனப்பசளைகள் பிரிவாக்கமடைந்து மண்ணின் மூலக்கூறுகளை ஒருவகையில் ஒன்றுசேர்ப்பதனால் மண்ணரிப்பு குறைக்கப்படுகின்றது. அநேக உக்கும் பதார்த்தங்கள் உக்கலடைவதனால் இவ்வளமான மண்ணின் நீர்ப்பிடிப்பும் அதிகரிக்கும். ஆக சேதனப் பயிர்ச்செய்கையின் நடவடிக்கைகள் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மண்ணிற்கும் ஒரு பேண்தகு நிலைமையை உருவாக்குகின்றது.

சேதனமுறையில் உணவு உற்பத்தியில் ஈடுபடும் எவரும் ஓர் ஒன்றிணைந்த பண்ணைமுறையே பேணிப் பாதுகாக்க வேண்டும். இவ்வகையில் பொருத்தமான சேதனத்திற்கு இசைவாக்கமடைந்துள்ள பயிர்வகைகள் மற்றும் விலங்குவேளாண்மை, கால்நடை வளர்ப்பு என்பன இதிலடங்கும். விலங்குவேளாண்மை, கால்நடைவளர்ப்பு என்பவற்றில் கூட்டெருப்பசளை தயாரிக்கமுடியும். இப்பொறிமுறையில் கால்நடைக்கு தேவையான இலைகுழைகளை உருவாக்ககூடிய மரம் மற்றும் செடி கொடிகளில் இருந்தும் பசுந்தாட்பசளை உருவாக்கலாம். அத்துடன் அவரை இனப்பயிர் ஒன்றை சுழற்சிமுறையில் பயிரிடுவதனால் வளிமண்டல நைதரசனை மண்ணிற்கு பதிக்கும் பொறிமுறையும் நிறைவேறுகின்றது.

இலைகுழைகள், மாட்டுச்சாணம், மாட்டு சிறுநீர் மற்றும் மண்புழுக்கரைசல் என்பன திரவப்பசளைகளாக வினைத்திறனுடன் பயன்படுத்தமுடியும். கடல் களைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு செறிவாக்கப்பட்ட திரவப்பசளைகளும் தற்போது கிடைக்கப்பெறுகின்றன. மேற்போந்த திரவப்பசளைகளைப் பயன்படுத்தி விளைச்சலை கணிசமான அளவு அதிகரிக்கலாம்.

சேதனப்பயிர்ச்செய்கை என்பது சமகாலத்தின் தேவையாகியுள்ளது. பயனுள்ள தரவுகளைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டங்களையோ அல்லது ஒருங்கிணைந்த பண்ணைமுறைகளையோ மேற்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும். கணிசமான விளைச்சலின் குறைவு, உற்பத்திப்பொருளின் விலை உயர்வு என்பன எதிர்பார்க்கப்பட்டுள்ள சவாலாக இருப்பினும் வளங்கள் உள்ள எமது நாட்டிலும் தற்போது உலகில் 187 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் இம்முறையைப் பயன்படுத்தி நாமும் முனைப்புடன் செயற்பட்டு எம்மவர்க்கு தேவையான நஞ்சற்ற உணவு உற்பத்திகளை செய்து வழங்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அனைவரையுமே சார்ந்தது. முனைப்புடன் செயற்படுவோம் முயற்சியில் வெற்றிபெறுவோம். ■






# வெடிமணியமும் இடியன் துவக்கும்

இ.சு.முரளிதரன்

கோடி கோடியாகக் கொட்டி உருவாக்கப்படுகின்ற பல திரைப்படங்களால் தரமுடியாத உளத் திருப்தியினை, குறைந்த பாதீட்டில் விளைகின்ற குறும்படங்கள் தந்து விடுகின்றன. அந்த வகையில் மதி சுதாவின் இயக்கத்திலே உருவான "வெடிமணியமும் இடியன் துவக்கும்" என்ற குறும்படம் கவனக் குவிப்பிற்கு உரியதாகும். மயூரரூபன் எழுதிய 'வெளிக்கிட்டுட்டன்' என்ற சிறுகதையினை நடுவண் இழையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கே.டானியல் எழுதிய 'தக்காளிப் பழங்கள்' என்ற சிறுகதையிலும் இக் குறும்படத்தின் மைய உணர்ச்சியினைத் தரிசிக்க முடியும். தாத்தாவுக்கும் பேரனுக்குமான உறவின் இறுக்கத்தை வெளிப்படுத்துகின்றது. ஈழத்தின் வடபுலத்திற்கேயான மொழியாடலும் பண்பாட்டுப் பதிவுகளும் ஓரளவு சிறப்புற அமைகின்றன.

மொழிக்கு இலக்கணமுள்ளது. உடல் மொழியோ அனைத்திற்கும் அப்பாற்பட்டது. உடல் மொழியினையும் தொனியினையும் உரிய அளவுத் திட்டத்தோடு கையாள்வது எளிதானதல்ல. "நடிப்பது" தெரியாமல் பாத்திர இயல்பினை உணர்ந்து அளிக்கையினை நிகழ்த்த வேண்டும். "நடிப்பிற்கு ஆழமான அறிவாற்றல் அல்ல, எளிமையான புத்திசாலித்தனமே போதுமானது" என்கிறார் இயக்குநர் மகேந்திரன். அந்த வகையில் நடிக்காமல் வெடி மணியமாகவே வாழ்ந்திருக்கும் முல்லை ஜேசுதாசன் பாராட்டுக்குரியவர். எஸ்த்தரம்மாவான கமலா ராணியிடம் நாடகச் சாயலோடான ஒப்பிக்கும் பண்பு வெளிப்படுகின்றது. ஏனையோர் நெருடலற்ற ஆற்றுகையினை வெளிக்கொணர முயன்றுள்ளனர்.

இயக்குநர் நிர்ணயித்த வரிசையினை இனங்காட்டும் படத் தொகுப்பானது, திரைச்சுவைஞனிடம் அர்த்தமுள்ள விளைவினை நிகழ்த்த வேண்டும். தனிச்சட்டகம் இன்னொரு சட்டகத்தோடு இணையும் போது நிகழும் அதிர்வும், முழுமைப்படத்தோடு இணையும்போது நிகழும் அதிர்வும் வேறுவேறானவை. இத்தகைய நுட்பங்களை உணர்ந்து பயன்படுத்திய இயக்குநர் மதிசுதா பாராட்டுக்குரியவர். 'கடுவன்' மூச்சிழுக்கும் சட்டகம், தாத்தா ஆவி பிடிக்க மூச்சிழுக்கும் சட்டகத்தோடு பொருந்தும் போது கிடைக்கும் அனுபவமும், இறுதி உச்சக் காட்சியில் கிடைக்கும் அனுபவமும் வேறுவேறானவை. பட்ட மரத்தினருகே அமர்ந்திருந்து பயிற்சியினை மேற்கொள்கின்றனர். வீழ்ந்திருக்கும் அம்மரம் "என்றோ ஓர் நாள் உயிர்ப்புடன் இருந்தது" என்ற உணர்வைத் தருவதோடு இனத்தின் குறியீடாகவும் தோற்றங்கொள்கிறது.

வன்மத்தைக் கொண்டாடுவதென்று முடிவெடுத்த பிறகு, தேவையற்ற சமரசங்களைத் தவிர்ப்பதே சிறந்ததெனக் கருதுகிறேன். "பெட்டை மிருகத்தைக் கொல்லாமை" தேவையில்லாத ஆணியாகவே தென்படுகிறது. கைவிளக்கொளியில் பிட்டுக் கொத்தும் காட்சி வெகு சிறப்பு! எங்கள் வாழ்வின் நுணதுண்டினை நகரும் படிமாக்கி பெருமை சேர்த்த மதிசுதா, எதிர்காலத்திலே அற்புதமான படைப்புக்களைத் தருவார் என்று நம்பிக்கை கொள்கிறேன். ■




தரிசனன்

# நிலைக்கண்ணாடி

## விம்பம் - 04



## தோல்விகளும் வாழ்க்கையும்

நாம் ஆற்ற முயலுகின்ற ஒவ்வொரு செயலும் வெற்றி, தோல்வி என்கின்ற இரண்டில் ஒரு முடிவைச் சந்திக்கிறது. ஒன்றினுடைய பிரதிபலன் அல்லது விளைவு வெற்றியில் அல்லது நன்மையில் முடிய வேண்டும் என்றே எமது மனம் எப்போதும் எதிர்பார்க்கிறது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறான வெற்றி அல்லது நன்மை சாத்தியப்படுவதில்லை.

முயற்சி ஒன்றில் நாம் ஈடுபட முடிவு செய்வது நாணயம் ஒன்றைச் சுண்டி விடுவது போன்றது. அந்த நாணயம் கிழே விழும் போது பூவும் விழலாம் தலையும் விழலாம். இது இயற்கை நிகழ்வு இது போலவே ஒரு முயற்சியிலும் வெற்றிக்கும் தோல்விக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு என்ற அறிவார்ந்த புரிதல் அவசியம்.

நம்மில் பலர் தாம் எதிர்பார்த்த விதமாக விளைவு கிடைக்காது போகும் போது பெரிதும் மனமுடைந்து போகிறோம். வாழ்க்கையின் பெரிய சாத்தியங்களின் கதவுகள் அனைத்தும் ஒரு சேர மூடிக் கொண்டுவிட்டது போன்று மனதால் உழலுகிறோம். கவலையில் சோம்பிப் போகிறோம். இனி என்ன செய்யப் போகிறேன்? என்பது பற்றிய பயமும் கவலையும் சில சமயங்களில் பலரை மிகவும் பாதித்து விடுவதைப் பார்க்கிறோம்.

பரீட்சையில் தோல்வி அடைகின்ற ஒரு மாணவன் ஆயினும் காதலில் தோல்வியடைகிற இளைஞனானாலும் யுவதியானாலும் தோல்வியில் துவண்டு போவதைப் பார்க்கிறோம்.

வெற்றி பற்றிய பெரிய எதிர்பார்ப்போடும் அவ்வெற்றியில்லை எனில் வாழ்வதிலும் சாவது மேல் என்ற எண்ணத்தோடும் வாழ்கின்றவர்களை, வாழ்ந்தவர்களை அறிவோம். அவர்கள் எல்லோரும் பிறரது பாராட்டுக்காகவும் - அடுத்தவர் முன்னால் தோற்றுப் போய் நிற்பது அவமானம் என்று கருதுவதா லும் வெற்றியைப் பற்றி பெற்றோரும் மூத்தோரும் பெரிய அளவில் கருத்துக்களைக் கொண்டு இருப்பதாலும் இவர்கள் ஏமாற்றம் அடையும் போது தோல்விக்கு முகங் கொடுக்க மறுத்து சாவினைத் தேடுகிறார்கள்.

இவ்வாறான மனிதர்கள் சில சமயங்களில் உயர்ந்த ஸ்தானங்களில் வாழ்ந்து கொண்டிருப்போர் கூட தோற்றுப்போய் வாழ்வதிலும் இறந்து விடுவது மேல் எனக் கருதுவோராக மாறி விடுகிறார்கள் - இத்தகைய செயல்களுக்கு உளவியல் நிபுணர்கள் பல வகைக் காரணங்களை கண்டறிந்து இருக்கிறார்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் இருக்கின்ற ஒரு பேருண்மையின் சக்தியை, ஒரு அரிய வாய்ப்பின் பெறுமதியை எவருமே அறிந்து கொள்வதில்லை. இந்த உலக வாழ்வு நாம் கேட்டுப் பெற்றுக் கொண்டதில்லை. நாம் பிறந்த இடம், எம்மைப் பெற்றவர்கள், நாம் வாழ நேர்ந்துள்ள நிலைமை இவை எதனையும் நாம் தெரிவு செய்து கொண்டதில்லை - முழுக்க முழுக்க சந்தர்ப்பவசமான நிகழ்வுகளே அவை. பல சந்தர்ப்பங்களில் நாம் பல தெரிவுகளை மேற்கொள்ள முடிகிற போதும் கூட அவற்றின் ஊடான முழு மொத்த விளைவும் எமது விருப்பம் போல் அமைவது இல்லை. எமது அறிவுக்கும் விருப்பத்திற்கும் இணங்க நாம் ஒரு முடிவை எடுத்துக் கொள்ள முடிந்தாலும், எமது மனமார்ந்த எதிர்பார்ப்பில் நிறைவேற்றங்களாக எதுவும் அமைவதில்லை. கண்ணுக்குத் தெரியாத சில போட்டியாளர்களோடு நாம் மேற் கொள்கின்ற பந்தயம் போன்ற எமது வாழ்க்கையை அறிவு பூர்வமான அணுகு முறையோடும் சூழலுக்கு இயைந்த தர்க்க ரீதியான விளக்கத்தோடும் மிகத் தெளிவாக நமது மனதை நாம் வைத்தக் கொள்ளும் போது வெற்றியிலும் தோல்வியிலும் எமது அடிப்படை உளம் சார் உறுதிப்பாட்டை இழக்காதவர்களாக நாம் விளங்க முடியும் ஆச்சரியமான விளைவுகளைப் புன்னகையோடு வாழ்க்கை தருவதாகப் புரிந்து கொள்பவர்கள் இணக்கமாக அதனுடன் கை குலுக்கிக் கொள்வார்கள். ■

# காலடியில் ஒரு பெண்



தொல்புரம் சி.கதிர்காமநாதர்

கண்களில் பொறி தட்டியது. மின்னல் மின்னியது காதில் இடியோசை கேட்டது நண்பருக்கு மாறாக ஏதோ உருவங்கள் தோன்றி மறைந்தன. அவனைப் பயப்படவும் வைத்தன பயங்கரக் கனவுகள் தோன்றிக் குதியாட்டம் போட்டன. இராட்சத விலங்குகள், பாம்புகள் எனப் பெரிதாகப் பயமுறுத்தின. அவனை விரட்டி விரட்டி எழுந்தோடச் செய்தது யாரோ அவனது பேர் சொல்லி அழைத்தார்கள்.

“சத்தியமூர்த்தி சத்தியமூர்த்தி வெளியால வா..” குரல் வரும் திசையில் அழைக்கும் குரலுக்கு சொந்தமான மனிதன் இருந்தானா? இல்லையா? அவனுக்கு தெரியவில்லை. தலை பயங்கரமாக வலியெடுத்தது எழுந்து போக முடியாமல் அவனது கால்களை யாரோ இறுகப் பிடித்திருப்பது போல் இருந்தது.

நிந்திரை கொள்ள முடியாமல் இருந்தது. குழப்பமான நிலையாய் ஏதோ காரணமின்றி பிதற்றித் தள்ளியது. பயந்து கொண்டு கட்டிலில் இருந்து எழ வேண்டியிருந்தது.

மரங்கள், செடிகள் பெரிதாக நின்று தலையை தொங்கப் போட்டபடி அவனைப் பயமுறுத்தின. அவை அசைந்து அசைந்து வா…வா… வா… என அழைப்பது போலிருந்தது. அவருக்கு உடம்பு நடுங்கியது மலமும் சிறுநீரும் அவனது கட்டுப்பாட்டுக்குள் நிக்காது இடையில் வெளியேறியது . பிரகாசமான வெளிச்சம் அவனைச் சுற்றி அடிபட்டது. இந்த வெளிச்சம் அவனுக்கு புதிராக இருந்தது. இந்த உலகத்தை முதன் முதலாக அவன் தரிசிக்கிறான். ஒருபோதும் முன்னர் கண்ணில் தென்படாத உலகம்.

தீமை செய்தவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் எனச் சொல்லுவார்கள் இதுவும் நரகத்திற்கு சமமான உலகமா? அவனை ஏதோ துன்புறுத்தியது. பயப்பட வைத்தது. ஓட ஓட விரட்டியது சுற்றி நின்றவர்கள் மாறு வேடம் போட்டு மிரட்டினார்கள். தொடக்கத்தில் எழுந்து ஓட முடிந்தது இப்போது அவ்வாறு ஓட முடியவில்லை. சரியாக ஒன்றையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. அவன் இருந்த உலகம் அவனை வாட்டியெடுத்தது. பெரிய மாற்றம் நடைபெற்றது. யுத்தத்தை அவனால் வெல்ல முடியவில்லை. யுத்தம் நடைபெறும் அத்தனை அவலங்களையும் அவன் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

இந்த நரகவேதனை முடிந்து எப்போது இயல்பு நிலைக்கு அவன் திரும்புவான். பிரகாசமான வெளிச்சம் குறையத் தொடங்க வெளியில் ஆரவாரங்கள் குறைவதுபோல் இருந்தது. காதில் குரல்கள் கேட்டது உருவங்கள் நடமாடின. அடையாளம் தெரியவில்லை. கை, கால்களை அசைக்க முடியவில்லை.

இந்தக் கொடுமையான உலகத்திற்கு இங்குள்ளவர்கள் ஏன் மோசமாய் அவனுடன் நடந்து கொள்கிறார்கள்?

பயம், பயம் தொடர்ந்து அவரைப் பயப்பட வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

உடல் முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்து நாட்கள் அவனுக்குத் தெரியாமல் ஒடி மறைந்து கொண்டு இருந்தது.

கண்கள் திறந்து விழிப்பு வந்தபோது வெளிச்சம் தெரிந்தது. மனிதர்களின் பேச்சுக் குரல்கள் சுற்றி வரக் கேட்டது. அவனுக்கு தெரிந்த உருவங்கள் அருகில் நடமாடினர். நடப்பது கனவா? நினைவா? அவனால் ஊகிக்க முடியவில்லை.

கால் மாட்டில் யாரோ நிற்பது போல் அவனுக்கு தெரிந்தது. அதனை உற்று நோக்க முயற்சித்தான் நிச்சயமாக அங்கு ஓர் உருவம் நிற்பது தெரிந்தது. பார்வையை கூர்மையாக்கித் தனது சக்தியெல்லாம் திரட்டி, உருவத்தின் மேல் பார்வையைச் செலுத்தினான்.

கால் மாட்டில் நிற்பது உருவம் தான். ஆனால் அது எப்படியான உருவம்? அது எந்த இனத்தைச் சேர்ந்தது? மனித இனமா? மனித இனமெண்டால் அங்கே நிற்பது ஆணா? பெண்ணா? பார்வையால் துழாவினான் அது நிச்சயமாக பெண் உருவம் தான். பெண் உருவமே தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு மனித உருவம் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தது ஆனால் சரியாக அடையாளம் காண முடியவில்லை .

அடையாளம் காணும் அளவிற்கு புலன்கள் சரியான, இயல்பான நிலைக்குத் திரும்பவில்லை. தலை குனிந்தபடி அந்தப்பெண் அவன் காலடியில் நின்றாள். அந்தப் பெண்ணுக்குப் பின்னால் பிரகாசமாய் சுவரில் வெளிச்சம் தெரிந்தது. பாவம் அவள் வாழ்க்கையில் அந்தளவுக்கு வெளிச்சத்தை ஆண்டவர் கொடுக்கவில்லை. அவளது முகம் சோர்வடைந்து இருந்தது. கழுத்தில், காதில் ஒன்றுமே அணிந்திருக்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் இப்படி ஒரு பெண்ணா? நெற்றித் திலகம் கூட அவள் போட்டிருக்கவில்லை.

அவளால் இப்போது அவற்றையெல்லாம் பற்றி யோசிக்க முடியுமா?

அவள் தொடர்ந்து பேசாமல் நிற்பது போல் தோற்றமளித்தாலும், அவள் அப்படி இருக்கவில்லை. கட்டிலில் படுத்திருந்தவனிடம் இடை இடை கதைக்கவும் செய்தாள். அவனுடன் கதைத்துக் கதைத்து அவனை மறுபடியும் இயல்பு நிலைக்குக் கொண்டு வர மனது சொன்னது போலும்.

“என்ன - இப்ப எப்பிடி - இருக்கிறியள்?”

“ சொல்லுங்கோ எப்படி இருக்கிறியள்?”

அவளது கேள்வி காதில் புகுந்து அதற்குரிய தூண்டுதலைச் செய்தது. ஆனால் அது மூளையில் அதற்குரிய பகுதியில் சரிவர எட்டவில்லை போல தெரிந்தது. கேள்விக்கான பதிலை அவனால் உடனே தயார் செய்ய முடயவில்லை.

எப்பிடி இருக்கிறாய்?

உடம்பு இப்ப எப்பிடி உள்ளது? வாய் இறுகப் பூட்டப்பட்டு இராமல் ஏதோ பிதற்றியது. எதை எதையோ வெளியில் கொட்டியது. பெண்ணுக்கு அவனது “மாறாட்ட நிலை விளங்கியது”. அவனைக் கஸ்ரப் படுத்தி என்ன செய்வது? அவனை இந்த நிலையில் இருந்து நீக்க வேறு வகையான கேள்விக்கு மாறினாள்.

என்னை பாருங்கோ. யாரெண்டு தெரியுதா?

இந்தக் குரல் அவனுக்குப் பழகிய குரல் போல் தெரிந்து இடைவிடாது வாழுகின்ற காலத்தில் அவனது சந்தோஷத்திலும் பங்கெடுத்துக்கொண்ட குரல். எப்போதும் அவனது அருகில் இருந்து அவனை அரவணைத்த குரல், அவனை மதிமயங்க வைத்த குரல்.

குரலுக்கு உரியவரை அவனுக்குத் தெரியவில்லை. உருவத்தை உற்றுப் பார்த்தான். பக்கத்து வீட்டு சுந்தரி ரீச்சரா? பேக்கரி வைத்திருந்த நடராஜாவின் மனைவி ஷோபனாவா? மகளின் முன்பள்ளி ஆசிரியை பிருந்தாவா? தெரியவில்லை.

அப்போது சட்டென்று அவனது நினைவுக்கு அந்த உருவம் இது தான் என அடையாளம் கண்டான். அதுவே தான் என நிச்சயித்தான்.

“என்ன யோசிக்கிறியள்? என்னைத் தெரியேல்லையா?”

நீங்கள் மங்களா அக்கா தானே.. கடையை விட்டிட்டு இங்க வந்து நிக்கிறியள்”

“இங்க வந்து உம்மை பாக்க வேண்டிய தேவை வந்திட்டன்.”

அந்தப் பெண் மங்களா பதில் சொன்னாள். தன்னைப் பார்க்க அவ ஏன் இங்கு வர வேண்டும் ?

நான் இப்ப எங்கே இருக்கிறன்? என்ற வினாக்களைத் தொடுக்கும் எண்ணம் அவனுக்கு வரவில்லை. “கால் மாட்டில நிப்பது நீங்க தானே?” “ஓம் .. நான் தான். கன நாளாய் நிக்கிறன். சரி.. இது என்ன இடமெண்டு தெரியுமா?”

அவனால் உடன் பதில் சொல்ல முடியவில்லை. வாய் பிதற்றியது. மங்களா மறுபடியும் கேள்வியைத் தொடுத்தாள்.

“இது என்ன இடமெண்டு சொல்லுமென்?”

“இதுவோ என்ற அண்ணன்ர வீடு புது வீடு கட்டினவர் அதான் வெளிச்சமாய்க் கிடக்குது.”

“அப்ப இது அண்ணற்ற வீடு .”

மங்களா கேட்டாள்

“இது அண்ணற்ற வீடு தான்”

“சரி நெடுக படுத்திருக்கிறியள் - கொஞ்சம் எழும்பி இருக்கலாம் தானே.

அவனது உடல் அசைவு, எதையோ செய்யத் தூண்டுவது போல் இருந்தது.

“ஏன் எழும்பி இருக்கேல்ல?”

என்ர பிள்ளையள் என்னை எழும்ப விடாம கையையும் காலையும் பிடிச்சு வைச்சுக் கொண்டு இருக்கினம்.

மங்களா அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள்.

“உங்கட பிள்ளையள் எழும்ப விடாம, பிடிச்சு வைச்சுக் கொண்டிருக்கினமோ?”

“என்ர பிள்ளையள் என்னில சரியான பாசம் அதான் தங்களை விட்டு போகாம பிடிச்சு வைச்சிருக்கினம்.”

“உங்களுக்கு பிள்ளையளில பாசமே?”

“என்ர பிள்ளையளில எனக்குப் பாசம்.”

“நான் போகப்போறன் உங்கட பிள்ளையள் உங்களை விட மாட்டினம்.”

சுற்றிவர இருந்த வெளிச்சம் குறையத் தொடங்கியது. யுத்தம் இப்போது மெதுவாக நடந்து கொண்டிருந்தது. கால் மாட்டில் மங்களா இல்லை. கை, கால்களைப் பிடித்திருந்த பிள்ளைகளின் பிடியில் தளர்ச்சியைக் காணவில்லை. அவனுக்கு கிழமை நாள்கள் தெரியவில்லை.

வெளிச்சம் சுற்றி வர பரவத் தொடங்க மங்களா கால் மாட்டில் நின்றிருந்தாள். தன்னைப் பார்க்க அவள் ஏன் மீண்டும் மீண்டும் வர வேண்டும்? இப்போதும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“அண்ணை வீட்டுக்கு ஏன் வந்தனீர்?

அவள் அவன் கேட்டதைப் போட்டுக் கொள்ளவில்லை. மங்களா இடது கையினைத் தூக்கி மடித்து வாயருகே கொண்டு போய் சைகையால் குடிக்கிறதோ எனக் கேட்டாள்.

அவனது தலை அசைந்தது.

“நீர் குடிக்கிறது மனுசிக்கு பிடிக்குமோ?”

“ பிடிக்காது”

“என்ன மனுசிக்குப் பிடிக்காதோ?”

“அவ கோபம் வந்தால் பொல்லாத ஆள்”

“உம்மட மனுசி வராததையிட்டு கவலைப்படேல்லையோ?”

“இப்ப தன்னும் யோசியுங்கோ . இனியும் குடிக்கிறதோ நிப்பாட்டுறதாய் முடிவோ?”

அவள் சத்தியமூர்த்தி மௌனமாக இருந்தான்.

“ஏன் இப்பிடி விடாமல் குடிக்கிறியள்? இப்ப என்ன நடந்தது தெரியுமா? உம்மட மனுசியையும், பிள்ளையளையும் யோசித்துப் பாக்கிறேல்லையே. இப்ப அவையளை நினைச்சுக் கவலைப்படுறியள். இனியாவது குடியை நிப்பாட்டி வாழுற வழியைப் பாருங்கோ”

கடைக்கார மங்களாவுக்கு அடக்க முடியவில்லை, வீடு, ஆஸ்பத்திரியெண்டு அகதி மாதிரி அலைஞ்சு கொண்டு இருக்கிறன். நான் கடைக்கார மங்களாவோ?

“நான்.. உங்களுக்கு கழுத்தை நீட்டிய உங்கட மனுசியப்பா” கடைக்கார மங்களா இல்லை. ■

(யாவும் சிந்தனை)

# இவற்றோரன்னவும் அவற்றோரன்னவும்...

# விரித்தலின் அழகியல்: கருணாகரனின் கவிதை மையங்கள்

## இலக்கியத்தின் இயக்கமும் வாசிப்பும்

பேராசிரியர் அ.ராமசாமி

எழுத்தின் இயக்கம் எல்லாவகையான பனுவல்களிலும் ஒன்றுபோல் நிகழ்வதில்லை. நாடகம், புனைகதை, கவிதை என அதனதன் வடிவ வேறுபாடுகளுக்கேற்பவே நிகழ்கிறது. வடிவ வேறுபாட்டிற்குள்ளும் ஒவ்வொரு எழுத்தாளரும் கைக்கொள்ளும் முன்வைப்பு முறைகளுக்கேற்பவும் இயக்கம் நிகழும். பனுவல்களுக்குள் நிகழ்த்தப்படும் இயங்குமுறையை, அதன் வடிவப்புரிதலோடு வாசிக்கும் வாசிப்பே முழுமையான வாசிப்பாக அமையும்.

இலக்கியப்பனுவல்களை எப்படி வாசிக்கவேண்டும் என்பதற்கான அடிப்படைகளைச் சொல்லும் அரிஸ்டோட்டடிலின் கவிதையில் நாடகத்தை வாசிக்கும் முறையை விரிவாகப் பேசியுள்ளது. அதன்படி நாடகப்பனுவல்களுக்குள் உருவாக்கப்படும் முரணைக் கண்டறிந்து வாசிக்க வேண்டும். உச்சநிலைக்குப்பின்னான விடுவிப்பின் விளைவில் அந்த வாசிப்பு நிறைவடையும். காவியங்களை வாசிக்கும் முறையிலிருந்து புனைகதைகளுக்கான வாசிப்பை நவீனத்திறனாய்வு உருவாக்கிக் கொண்டுள்ளது. அதன்படி, பனுவல்களுக்குள் உருவாக்கப்படும் காலம் அல்லது வெளியின் விவரிப்பில் விரிந்து பாத்திரங்கள் அதற்குள் இருக்க நேரும் இருப்பின் பாடுகளை விளங்கிக்கொள்ளுதலில் நிறைவுபெறும். கவிதை வாசிப்புக்கான அடிப்படைகளைத் தொல்காப்பியப்பொருளதிகாரச் செய்யுளியலின் அடிப்படைகளிலிருந்து உருவாக்கிக்கொள்ளமுடியும். அதன்படி, முன்வைக்கப்பட்ட உணர்வில் நின்று, சுற்றிச்சுழலும் மனிதர்கள், சூழலின் காரணிகள், அதனால் விளைந்த விளைவுகள் எனக் காட்சிகளுக்குள் பயணம் செய்வதோடு, முடிவில் கிடைக்கும் உணர்தலிலும் அறிதலிலும் நிறைவுபெறும். இதன் காரணமாகவே கவிதை வாசிப்பென்பது மற்ற இரண்டு வடிவங்களையும் வாசிப்பதைவிடக் கூடுதல் நுட்பம் கொண்டதாக அமைகின்றது.

### கவிதை வாசிப்பின் மாதிரி

ஒரு கவிதையின் முன்வைப்பு கவிதைக்குள், கவியால் உருவாக்கப்படும் சொல்லி (Narrator)அல்லது கூற்றுநிலைப் பாத்திரத்தால் நிகழ்த்தப்படுகிறது. அதன் வழிகாட்டலில் வாசிப்பவர்கள் காட்சிகளையும் உணர்வுகளையும் அடைகிறார்கள். தொடர்ச்சியாக வினாக்களும் விவாதங்களும் வாசிப்பவர்களின் மனதிற்குள் எழுகின்றன. அதற்கான விடைகளும் விளக்கங்களும் கவிதைக்குள்ளேயே கவியால் முன்வைக்கப்படலாம் முன்வைக்கப்படாமலும் போகலாம். முன்வைத்தால், அதன் மீது விவாதங்களைக் கோரும் தொனியை உருவாக்குவது கவியின் வேலையாகிறது. முன்வைக்க வேண்டும் என்று நினைக்காத நிலையில் விடைகளையும் விளக்கங்களையும் கவிதைக்கு வெளியே வாசிப்பவர்களின் அனுபவங்களிலிருந்து தேடிக்கொள்ளும்படி கவி தூண்ட வேண்டியது அதன் எதிர்நிலையாகிறது.

எட்டுப் பத்திகளாகப் பிரித்து அடுக்கப்பட்டுள்ள கவிஞர் கருணாகரனின் இந்தக் கவிதையை படித்துக் கொண்டே வாருங்கள்:

மின்னற் பொழுதில்
உடைந்தது ஒரு எலும்புதான்
வலியோ உடல் முழுவதும்.

உயிரே பாரமாகிக் கனக்க
உபாதையின் மொழி
ஆஸ்பத்திரி வளாகமெங்கும்
பரவித் தொற்றியது எல்லோரிடத்திலும்.

தூக்கமும் பசியும் தொலைந்து
வலியும் வேதனையும் எழுந்த காட்டில்
சுருண்ட புலியாகி
கண்களில் துயரப் பீழை சாற
வழியற்றவன் போலாகிக் கிடந்தேன்
இரவு முழுதும்.

அருகில்
வழித்துணைவராக
மரத்திலிருந்து விழுந்தவர்
மரம் விழுந்தவர்
மாடு மோதியவர்
மாட்டில் மோதியவர்
சறுக்கியும் தடக்கியும் விழுந்தவர்
பாய்ந்து முறிந்தவர்
வண்டி சாய்ந்து வயிறு கிழிந்தவர்
வழுக்கி வீழ்ந்தவர் எல்லோரும்
பாரம் பொறிந்தவராகிச் சிதறிக் கிடந்தனர்.

எல்லோரிலும் எழுந்தாடியது வலி
பெருங் கூத்தொன்று
நிகழ்ந்து கொண்டிருந்தது அங்கே.

இரவையும் பகலையும்
தின்ற வலியின் கீழே
படுத்திருந்தோம் துடித்திருந்தோம் எல்லோரும்

அத்தனை பேரும்
அன்று தொழுத தெய்வம்
வலி நீக்கிய தாதியரே

அன்று கண்ட அற்புதம்
வலி நீக்க ஊசியே.

★★★

உடைந்த எலும்போடு கூடிய ஒருடல் வலியால் துடிப்பதைத் 'தன்னிலை முன்வைப்பாக' தொடங்குகிறது முதல் பத்தி. இரண்டாவது பத்தி அந்த உடல் இப்போது கிடக்கும் இடம் மருத்துவமனை என வெளியை விரிக்கிறது. திரும்பவும் தனது உடலைப் பிற உடல்களோடு சேர்த்துக் காட்டுவதன் மூலம், விபத்தொன்று நடந்தது என்பதை முன் காட்சியாக- நினைக்கப்பட வேண்டிய காட்சியாகப் பரப்பிவிட்டு, நேரடிக் காட்சியாக மருத்துவமனை ஒன்றின் விபத்துச் சிகிச்சைப்பிரிவுக்குள் அழைத்துச்செல்கிறது. அடுத்த மூன்று பத்திகளும் மருத்துவமனையில் கிடக்கும் உடல்களும், குரல்களும் அடையும் வேதனைகளை வாசிப்பவர்களுக்குக் கடத்துகின்றன. கடத்தப்பட்ட உணர்வுகளுக்கு வடிகாலாக அங்கு கிடைத்த மருத்துவச் சேவையையும் கவிதைசொல்லியே -கூற்றுப்பாத்திரமே - முன்வைத்துவிடும் நிலையில் மொத்த நிகழ்வும் முடிந்துவிட்ட மனநிலை உருவாகிறது. இந்த வாசிப்பு வகைமாதிரியை நாம் வாசிக்கும் ஒவ்வொரு கவிதைக்கும் அதன் இயங்குநிலைக்கேற்ப நகர்த்திக்கொள்ளலாம். அதற்கு மாறாக ஒன்றைப் பலவாக விரிக்கும் கவிதையின் அழகியல் செயல்படுகிறது. கூற்றுப்பாத்திரமும் நிகழ்வெளியும் காலமும் மாறாத நிலையில் உருவாக்கப்படும் உணர்வுகளின் வேறுபாட்டால் புதியபுதிய தளங்களுக்குள் விரிவடையும்.

நிதானமாக வாசிக்கப்பட்ட ஒற்றைக்கவிதைக்குள் விவரிக்கப்படும் விபத்தும் வேதனையும் , கவி கருணாகரனுக்கு நேர்ந்த நேரடி அனுபவம். அதனைப் பகிர்வதற்கான முன்மொழிவை அடுக்கிக் காட்டுவது அவர் மேற்கொள்ளும் உத்தி. அவ்வுத்தி மூலம் வாசிப்பவர்களுக்குக் கடத்த நினைப்பது மருத்துவர்களும் தாதியர்களும் செய்யும் சேவையையும் தொண்டையும். ' அத்தனை பேரும்/அன்று தொழுத தெய்வம்/வலி நீக்கிய தாதியரே./அன்று கண்ட அற்புதம்/வலி நீக்க ஊசியே.' என உணர்த்திவிட்டு முடிகிறது.



### ஒன்றைப் பலவாக விரித்தல்

தனக்கு ஏற்பட்ட விபத்தொன்றை அடுத்துக் கவிஞர் கருணாகரன் அனுமதிக்கப்பெற்ற மருத்துவமனை இருப்பைக் குறித்த 20 கவிதைகளில் 14 வது கவிதை இது. விபத்தில் அவருக்கு நேர்ந்த உடல் நோவையும் மருத்துவமனை இருப்பையும் வலியின் தொடர்ச்சியையும் இந்த ஒற்றைக்கவிதையில் வாசித்துவிட முடிகிறது என்றபோதிலும், அதற்கு முன்னும்பின்னுமாகக் கவி எழுதித் தந்துள்ள 19 கவிதைகளும் சேர்ந்து சாதாரண மனிதர்களின் அனுபவத்திலிருந்து, ஒரு கவியின் அனுபவங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விவரிக்கும் தளத்திற்குள் நகர்கின்றன. அந்த நகர்வின் வழியாகவே கவிகள் அல்லது எழுத்தாளர்கள் தங்களை எழுதும் எழுத்திலும் கூட தங்களைக் காணாமல் ஆக்கிக் கொண்டு சுற்றியிருப்பவர்களின் - சமூகத்தின் -உலகத்தின் பாடுகளை எழுதும் படைப்பாளிகளாக மாறுகின்றார்கள்.

ஒன்றைப் பலவாக விரிப்பதற்குத் தமிழ்க் கவிதை மரபில் பல முன்னுதாரணங்களுண்டு. அனைவரும் அறிந்த உதாரணம் பாரதியின் கண்ணன் பாட்டு.பாரதக் கதையோடு தொடர்புடைய கண்ணன் என்னும் தொன்மப் பாத்திரத்தை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் உருவகித்துக்கொண்டு தனது கவிதைக்குள் உலவச் செய்திருப்பார்.

அண்மையில் வெளிவந்த கடவுள் என்பது துரோகியாயிருத்தல் என்ற தொகுப்பில் அம்மரபின் தொடர்ச்சியை முழுமையாக்கியிருந்தார் கருணாகரன். பைபிளின் பாத்திரங்களில் ஒன்றான மத்தேயுவை நிகழ்காலப் புனைவுப் பாத்திரமாக்கி, ஈழத்துப் போர்க்காலத்தையும் போருக்குப் பின்னான மனநிலைகளையும் விரிவாக விசாரணைக்குட்படுத்தியிருந்தார்.



அதிலிருந்து முற்றிலும் விலகிய தன்னனுபவக் கவிதைகளாக 'மருத்துவமனை நாட்கள்' இருக்கின்றன. நோயாளிகளின் மனவோட்டத்தையும், உயிர் வாழ்தலின் மீதான வேட்கையையும் அதற்குத் தடையேற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் அதுவரையிலான மனப்போக்கில் ஏற்படும் மாற்றங்களையும் விரிவாகப் பேசுகின்றன. துயரத்தின் சாயல்களை அதிகம் வெளிப்படுத்தினாலும் மெல்லிதான நகையும் மருட்கையும் வெளிப்படும் இடங்களும் பதிவாகியுள்ளன.

அவரைக் கொண்டு வந்து / விடுதியில் சேர்த்த போது / அறுபத்து மூவரானோம். அந்த நேரத்தில் / அருகிருந்த நாவுக்கரசர் / பதிகமொன்று பாடினார்.

அது வாழ்த்துப் பாவா / வரவேற்புப் பாவா / மீட்புப் பாவா / என்று தெரியவில்லை யாருக்கும்.

ஆஸ்பத்திரித் தோத்திரம் / என்று கண்ணயர்ந்தேன்.

இதனை வாசிக்கும்போது மெல்லிய புன்னகையை உதிர்க்காமல் வாசிப்பவர்கள் நகரமுடியாது.

மத்தேயு என்ற பாத்திரத்தை விரித்தல், மருத்துவமனை நிகழ்வை விரித்தல் என்ற சோதனைக்குப் பின் ஒரு கருத்துநிலை விரிப்பாக ' தூக்கம் வராத இரவுகள்' என்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதித் தந்துள்ளார். மொத்தத்தையும் முடிக்கும்போது,

தூங்காத இரவில் / எல்லாப்பாதையும் அடைக்கப்பட்ட / பொது முடக்கத்தில் /
போக்க முடியாப் பசியோடு கிடந்தெரியும் / மனிதர்களைக் காணும்போதென்
உடலும் ஆன்மாவும் உருகுகின்றன.

இந்தப் பூமியின் / உயிர் முளைகள் / நீரின்றி வாடி மடிகின்றன

உள்ளே பட்டினித் தீ / வெளியே / கொவிட் 19 நாகத்தின் படமெடுப்பு
திசையெட்டும் / ஆயிரமாயிரம் பேர் செத்தும் பிழைத்தும் / பிழைத்தும் செத்தும் போகிறார்.

அரசுண்டு / ஆணைகள் பலவுண்டு / அறம் பற்றிய விளக்கப் போதனைகள் / ஆயிரமுண்டு
நாமும் உண்டு, களித்துப் படம் போட்டு / மிகிழ்ந்திருக்கும் போதுதான் / இந்த மனிதர்கள்
காய்ந்த நிலமாக நீளக் கிடக்கிறார்கள்.

பாலை எங்கிருந்து நீள்கிறது / யாரிலிருந்து / எதனிலிருந்து கொதிக்கிறது.
இந்தப் பூமியின் / ஈரம் இத்தனை கெதியாக வற்றிப் போவதேன்?

உலக மனிதர்கள் அனைவரையும் தூங்கவிடாமல் செய்துகொண்டிருக்கும் கோவிட் 19 பெருந்தொற்றுக் காலத்துக் கவிதைகளாக அவற்றை வாசிக்கலாம் என்றாலும், அதன் ஒவ்வொரு முன்வைப்பும் மனித வாழ்வின் எல்லாக்களங்களுக்குள்ளும் சென்று திரும்புகின்றன.

கடந்த கால வாழ்க்கையையும் நிகழ்கால இருப்பையும் நேர்க்காட்சி வாதமாக எழுதுவதைத் தாண்டி, இலக்கியம், தத்துவம், குடும்பம், பண்பாட்டு நடவடிக்கைகள் எனக் கருத்தியல் அமைப்புகளையும், நட்பு, காதல், அன்பு எனப் பண்பு நிலைகளையும் தூக்கம் வராத இரவுகளின் அலைவுகளாக ஆக்கியிருக்கும் கவிதைகளாக விரிந்துள்ளன. தமிழ்மொழிக்குள் செயல்படும் நண்பர்களை நினைவுக்குக் கொண்டுவரும் ஒரு கவிதையை வாசிப்பதோடு அதனை முடிக்கலாம்:

தூக்கமற்ற இரவை / பேச்சுகளால் நிரப்புகிறார்கள்
ஜெமோவும் நண்பர்களும்

நிறங்களால் நிரப்புகிறான் றஸ்மி

கஜானி ஒளிப்படங்களால் /கவின் பாடல்களால் /இசை கவிதைகளால்/ சுகு அன்பினால் /சிராஜ் புத்தகங்களினால் /எஸ்.ரா கதைகளினால் / தேவகி அழுகையினால் /நிலா போதனைகளினால் /வாசு மதுவினால் / கோணங்கி பயணங்களால் /அம்ரிதா விதைகளால் /அரசு கண்காணிப்பினால் / ஞானச் செல்வம் சூதாட்டத்தினால் /ஜி.என் கலவியி னால / கரீம் காக்கா விருந்தினால்/ வசந்தி முத்தங்களால் /மனோகரன் நீரினாலும் நெல் மணிகளாலும்/ இளையராஜா பாடல்களால்/அன்ரன் அரசியல் பாடங்களால் /வோச்சர் சின்னத்துரை விழித்திருப்பதால்/ராகவன் விவாதங்களால்/கலை முடிவேயில்லாத கேள்விகளால் / யோசுவா பகிர்தலால்/சாரு புதிதளித்த லினால் /தயாளன் தன்னையே தருவதினால் /மகிழ் அலங்கரிப்பினால்/ மௌனன் (யாத்திரிகா) வேட்டையினால் / ப்ரஸன்னா ஒத்திகைகளினாலும் அளிக்கையினாலும் அ.ரா. விமர்சனங்களால் / காடு தன்னுடைய பச்சைக் கனவுகளால் / வானம் விரிவினால் / கடல் ஓயாத அலைகளினால்/ மலைகள் ஆழ்ந்த அமைதியினால் / இப்படியே இரவு நிரம்பிக்கொண் டிருக்கிறது. ■

# எழுத்தின் இயங்கியல்

## மொழி என்பது

ந.மயூரரூபன்

இலக்கியத்தின் இயல்புகளில் மிக முக்கியமானது மொழி. அந்த இலக்கியத்தின் இலக்கியத் தன்மையை எடுத்துக் காட்டுகின்ற ஒரு குறிகாட்டியாக மொழி அமைந்திருக்கிறது.

இங்கு மொழி என்பது என்ன?

ஒரு மனிதனால் / ஒரு சமூகக்குழுவால் பேசப்படுகின்ற, எழுதப்படுகின்ற எழுத்துகளாலும் ஒலிகளாலும் உணரப்படுகின்ற ஒரு வடிவம் மட்டும் தானா என்கிற கேள்வி உண்டு. மொழி என்பது வெறுமனே எழுத்துகளாலும் ஒலிகளாலும் மட்டுமே யாதென அடையாளப் படுத்தவோ, குறுக்கிடவோ முடியாதது.

ஒரு பொருளுக்கு அர்த்தம் தருவதாக மொழியை நாம் உணர்ந்திருக்கிறோம். ஒரு பொருளை - ஒரு நிகழ்வை - ஒரு உணர்வை ஒருவருக்கு அல்லது ஒரு சமூகத்திற்கு கடத்துகின்ற ஊடகமாக மொழி இயங்குகிறது என்பது உண்மைதான் ஆயினும், எழுத்து மற்றும் ஒலிகளைக் கடந்தும் மொழியினுடைய இயக்கம் இருக்கிறது என்பது மொழியினுடைய ஆழத்தையும் அதன் மிக நுண்ணிய செயலியக்கத்தையும் உணர்ந்து கொள்ளச் செய்வதாக அமைகிறது. ஒரு சமூகத்தின் - மனிதக் குரலின் வாழ்வும் வரலாறும் சமூக இயக்கமும் மொழியின் பிரதான எழுத்து - ஒளி வடிவங்களைக் கடந்த அதிக அர்த்தங்களை கொண்டுள்ளன. சைகைகள், குறிகள், பொருட்கள், ஓவியங்கள், சிற்பங்கள், சிதைவுகள், புதைவுகள் என அர்த்தம் தருவதற்கு ஒரு சமூகக் குழுவிடம் பல உண்டு.

- கைகளைக் குவித்து வணக்கம் தெரிவிக்கின்ற முறையும், கைலாகு கொடுத்து வரவேற்கின்ற முறையும் தருகின்ற அர்த்தமும்
- பிள்ளையார் சிலை, சிலுவையில் அறையப்பட்ட இயேசு, பிறைச் சந்திரன், நிஷ்டையில் இருக்கும் புத்தர் என பிரதிமைகள் / குறிகள் தருகின்ற அர்த்தமும்
- கலப்பை, அரிவாள், சுமைதாங்கி, ஆவுரோஞ்சியக் கல், புத்தகங்கள், ஏட்டுச் சுவடி, தொலைபேசி என பாவனைப் பொருட்கள் தருகின்ற அர்த்தமும்
- கீழடி ஆய்வில் பெறுகின்ற பொருட்கள், பிரமிட், ஆதி லிங்கேஸ்வரர் கோயில் அடையாளம் மற்றும் ஆய்வுப் பிரச்சினைகள் என்பன தருகின்ற அர்த்தங்களும்.
- எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம், மீளுருவாக்கம் செய்யப்பட்ட நூலகம், உடைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் எனப் பலதும் சொல்லுகின்ற அர்த்தங்களும்.

மிக முக்கியமானவையும் வார்த்தைகள் எழுத்துக்கள் கடந்து அர்த்தங்களைக் கனதியாகக் கடத்தும் திறன் மிக்கவையாகவும் அமைந்தவை. சமூகத்தின் பேராற்றல்மிக்க உணர்வுகளின் நுண்ணசைவுகளைத் தீர்மானிப்பவை.

இன்னொரு விதத்தில் மொழியைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை எமக்கிருக்கிறது. ஒரு நிகழ்வுக்கும் சம்பவத்திற்கும் அல்லது வரலாற்று உணர்வுக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்பைப் புரிந்து கொள்வது இதற்கு துணை செய்யும். மேற்குறித்த விடயங்களை மொழியினூடாக நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம். மொழி புரிந்து கொள்வதற்கான ஆற்றலை எப்படித் தருகிறது. ஒரு வரலாற்றை, புனைவை "எழுதுபவரின் மொழி" இன்னொருவருக்கு இன்னொரு சமூகக் குழுவுக்கு அல்லது தன் குழுவிற்கு அந்த அர்த்தத்தைக் கொண்டு செல்கிறது. இங்கு "எழுதுபவரின் மொழி" என்பது மிக முக்கியமானது. "எழுதுபவரின் மொழி" என்பது போல வாசிப்பவரின் மொழி என்பதும் மிக முக்கியமானது. மொழியின் இயக்கத்தில் நாம் கவனப்படுத்த வேண்டிய விடயம் இது.

எழுதுபவர் எழுதுபவரின் மொழி பிரதி வாசிப்பவனின் மொழி அர்த்தம்




இங்கு ஒரு பிரதிக்கு இரண்டு காலங்களை அடையாளப்படுத்த முடியும்.

**01.** பிரதி உருவாவதற்கு அடிப்படையான எழுதுபவரின் மொழி

**02.** பிரதி உருவான பின் அர்த்தங்களைத் தரக்கூடிய வாசிப்பவரின் மொழி

பிரதி உருவாக முன் பிரதி எழுதுபவரின் மொழியால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அதே எழுதுபவரின் மொழியில் உள்ள கூறுகள் எவை?

**01.**எழுதுபவர்

**02.**எழுதுகின்ற காலம்

**03.**புவியியல் அமைவு

**04.**புனைவு / உண்மை

இங்கு எழுதுபவர் என்பது, எழுதுபவர் யார்? என்பதைப் புரிந்து கொள்வதில் அடங்குகிறது. எழுதுபவர் ஆணா? பெண்ணா? ஆண் மொழிதலின் சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படும் - ஆண் மைய வாழ்க்கையின் அனுபவக் கூறுகளின் ஆதிக்கம் செறிந்திருக்கும்.

எழுதுபவர் சமூகத்தில் அடையாளப்படுத்தலில் உயர்ந்த சாதியாகக் கருதப்படுபவர் அல்லது தாழ்ந்த சாதி என்கிற அடையாளப்படுத்தலில் வாழ்க்கையை உணர்ந்தவராக அவரவர் ஆதிக்கத்தையும் விடுதலையையும் அவலத்தையும் பேசுவர்.



**"ஒரு கூடைக்கொழுந்து, வாடைக்காற்று, தண்ணீர் போன்ற நாவல்களின் வேறுபட்ட மொழி வடிவங்கிளல் இருந்து நாம் இதனை உணர்ந்து கொள்ள முடியும். எழுதுபவனின் மொழியைத் தீர்மானிப்பதில் அடுத்த மிக முக்கியமான ஒன்று புனைவு அல்லது உண்மை எழுத்தில் புனைவும் இருக்கிறது உண்மையும் இருக்கிறது. புனைவு சார் எழுத்துகள் என்கிற கவிதை, சிறுகதை, நாவல் வடிவங்கள் அனைத்திலும் காணப்படுகின்ற புனைவுத் தன்மை எழுதுபவனின் மொழியைத் திட்டமிடுகின்றன."**

அதே போல் தான் அவரது சமயம், கல்வி பொருளாதாரம், அவரது அரசியல் நம்பிக்கை, அவரது கோட்பாடு, அவரது குடும்ப - குழும வரலாறு என அனைத்தும் எழுதுபவரின் அடையாளமாக அமையக் கூடியது. இந்த அடையாளங்கள் அனைத்தும் "எழுதுபவரின் எழுத்தில்" தமது ஆதிக்கத்தை செலுத்துவன. எழுத்துகளில் தோன்றியும் தோன்றாமலும் அவ்வவற்றுக்கான அர்த்தங்களைக் காவிச் செல்வன.

அடுத்து எழுதுகின்ற காலம் என்பது மிக முக்கியமானது. எழுதுபவர் என்ன காலப்பகுதியில் வசிக்கிறார் என்பது அந்த எழுத்தின் அர்த்த விளைவுக்குள் செல்வாக்குச் செலுத்தக் கூடியது. குறிப்பாக, இரண்டாம் உலகப் போர்க் காலம், வன்னி இறுதி யுத்தகாலம், போர் உக்கிரமடைந்த காலம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலம், இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த காலப்பகுதி என பல காலப் பகுதியினை நாம் அடையாளப்படுத்தலாம்.

இன்னும் விளக்க வேண்டுமெனின் சங்க காலம், சங்கமருவிய காலம், நாயக்கர் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம் என மரபார்ந்த காலப் பிரிப்பினூடாகவும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். ஒரு படைப்பில் காலம் மிகுந்த செல்வாக்கைச் செலுத்த வல்லது. ஐ.சாந்தனின் எழுத்துகளில் இந்தியராணுவக் காலப்பகுதி வாழ்வு சிறுகதையில் வெளிப்படுவதும் தீபச் செல்வனின் "நடுகல்" நாவலில் போராட்ட கலை அனுபவம் வெளிப்படுவதும், டானியல் நாவல்களில் சாதிய போராட்ட அனுபவங்கள் வெளிப்படுவதையும் நாம் சில எடுத்துக் காட்டுகளாக அடையாளப்படுத்த முடியும்.

புவியியல் அமைவு என்பதுவும் எழுத்துகளின் மொழியைத் தீர்மானிக்கின்ற மிக முக்கிய பண்புக் கூறாக அமைகிறது. புவியியல் அமைவு எழுதுபவரின் வாழ்க்கை முறையை, தொழிலை, சமூக ஊடாட்டத்தை, அரசியலை, நம்பிக்கையை என வாழ்வின் ஒட்டு மொத்த அனுபவத்தையும் "எவ்வகை அனுபவம் உனக்கு எனப் பிரித்து தருகின்ற மிக முக்கியமான ஒன்று இந்த புவியியல் அமைவு மொழியின் பண்பாட்டு வடிவத்தை ஒலி வடிவத்தை தீர்மானிக்கிறது. பிராந்திய மொழிக் கூறின் அடிப்படை புவியியல் அமைவிலே தங்கியிருக்கிறது. மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாணம் என்கிற புவியியல் அமைவுகளில் மொழி கையாளுகையை நாம் அறிந்திருக்கிறோம். அதே போல், கடல் சார் பிரதேசம், காடு சார் பிரதேசம், மலையகப் பிரதேசம், சூடான பிரதேசம், குளிரான பிரதேசம் எனப் புவியியல் பௌதிகப் பண்புகளும் எழுதுபவனின் மொழியை வடிவமைக்கின்றன.

ஒரு கூடைக்கொழுந்து, வாடைக்காற்று, தண்ணீர் போன்ற நாவல்களின் வேறுபட்ட மொழி வடிவங்களில் இருந்து நாம் இதனை உணர்ந்து கொள்ள முடியும். எழுதுபவனின் மொழியைத் தீர்மானிப்பதில் அடுத்த மிக முக்கியமான ஒன்று புனைவு அல்லது உண்மை எழுத்தில் புனைவும் இருக்கிறது உண்மையும் இருக்கிறது. புனைவு சார் எழுத்துகள் என்கிற கவிதை, சிறுகதை, நாவல் வடிவங்கள் அனைத்திலும் காணப்படுகின்ற புனைவுத் தன்மை எழுதுபவனின் மொழியைத் திட்டமிடுகின்றன.

இன்று எழுத்தில் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. நேர்கோட்டு முறையிலான எழுத்து, நேர்கோட்டு முறையற்ற எழுத்து எனவும் நனவோடைப் பண்பு, கதை சொல்லல் பண்பு என்கிற பண்புகளும் உத்திகளும் நிறையப் பேசப்படுகின்றன. எது எவ்வாறு என்றாலும் அந்தப் பண்புகளை, உத்திகளைக் கொண்டு செல்லும் மொழி அவ்வவற்றுக்கான பாத்திரத்தையும் புனைவுத் தன்மையையும் தனக்குள்ளே கொண்டிருக்கின்றது. மேலும் அந்தப் புனைவு கொண்டிருக்க கூடிய கருத்தியல் களம் என்பதுவும் புனைவு மொழியைத் தீர்மானிக்க வல்லது. குறிப்பாக புனைவு அரசியல் சார் விமர்சனமாக அல்லது தான் நம்பிக்கை கொண்ட அரசியலை அதன் சார்பு நிலையில் நின்று கொண்டு பேசுகின்ற புனைவு எழுத்தாக அமைகின்ற போது அப் புனைவு எழுத்துகள் தமக்கான பிரத்தியேக மொழியை உருவாக்கிக் கொள்கின்றன.

குறிப்பாக, தென் அமெரிக்கப் புனை கதைகள், சமகால அல்லது போர் நிகழ்ந்த காலத்திலான ஈழத்துப் புனை கதைகள், கவிதைகள்என்பன இவ்வாறான புனைவு மொழியை தமக்குரியதாக்கி கொண்டன. ஒரு வகையில் புனைவுகளுக்கான அரசியல் இவ் எழுத்து மொழியினை தீர்மானித்தன. இன்னொரு வகையில் புனைவுகளின் இனங்காட்டுகின்ற உண்மையும் மொழியின் வகைமையைத் தீர்மானித்தன. அரசியல் சார்பு எழுத்துகள் உண்மைக்கு மிக அருகில் நிற்பதான தோற்றத்தைக் காட்ட விளைந்தன. இதனால் அதற்குரிய மொழியும் பிரத்தியேகமாக அமைந்தது.

அந்த வகையில் பிரதிக்குத் தோற்றத்தை - உருவத்தை தருகின்ற செயற்பாட்டில் எழுதுபவரின் மொழி எழுதுபவரின் இயல்புக் கூடாக தனக்கான மொழியை வடிவமைத்து பிரதிக்கான மொழி ஒன்றை உருவாக்குகின்றது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ■

சி.விமலன்

# தொடரின் முடிவில் தெரியும்



சுவிற்சர்லாந்தின் ரென்னிஸ் நட்சத்திரமான றோஜர் பெடரர் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அதிக (20) கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்ற சாதனையை ரபெல் நடாலுடன் பகிர்ந்து கொண்டாலும் ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கத்தை இன்னும் அவர் கைப்பற்றவில்லை. 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அவரால் வெள்ளிப் பதக்கமே பெற முடிந்தது. 2016 றியோ ஒலிம்பிக் போட்டியில் முழங்கால் காயம் காரணமாக அவர் பங்குபற்றவில்லை. அதேவேளை 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் சக நாட்டு வீரரான வாவ்ரிங்காவுடன் இணைந்து தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார். பெடரர் இறுதியாக 2018 அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடரிலேயே சம்பியன் பட்டம் பெற்றிருந்தார். அதன் பின்னர் காயங்களால் அவதிப்பட்டு வந்த அவர், கடந்த வருடம் முழங்காலில் இரண்டு சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டிருந்தார். இதன் பின்னர் இந்த வருட பிரெஞ் ஓப்பன் தொடரில் விளையாடி இருந்த போதிலும் மூன்றாவது சுற்றோடு உடல் நலத்தைக் கருத்திற் கொண்டு வெளியேறினார்.

இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் விளையாடி வரும் பெடரரிடம் அடுத்த மாதம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் “அதில் நீங்கள் பங்கு பற்றுவீர்களா?” என ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி கேட்டுள்ளார்கள். அதற்குப் பதிலளித்த பெடரர், விம்பிள்டன் போட்டிகள் நடைபெறும் பதினைந்து நாட்களே எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கான திட்டங்களைத் தீர்மானிக்கும். வெளிப்படையாகச் சொன்னால் விம்பிள்டனில் நான் நன்றாகவோ அல்லது மோசமாகவோ விளையாடினால் அதுவே கோடைப் பருவகாலத்தில் ஒரு தாக்கத்தைச் செலுத்தும் என நினைக்கிறேன். நான் ஒலிம்பிக்கில் மட்டுமல்லாது முடிந்தவரை ஏனைய போட்டிகளிலும் விளையாடவே விரும்புகிறேன். அந்தவகையில் விம்பிள்டன் வழியாகச் செல்வதற்கு முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

பெடரரைப் பொறுத்தவரையில் விம்பிள்டன் ஒரு ராசியான ஆடுகளம். அவர் பெற்ற 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் அதிகபட்சமாக 8 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை இங்கு தான் அவர் பெற்றுள்ளார். அந்த அடிப்படையில்கூட இத்தகைய முடிவை அவர் எடுத்திருக்கலாம். ஆனாலும் அவர் இறுதியாக விம்பிள்டனில் சம்பியன் பட்டம் வென்றது 2017 என்பது குறிப்பிடத்தக்கது. ■

# பதவி நீடிப்பு



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக விளங்கும் ஈஷான் மானி உடைய பதவிக்காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைய உள்ள நிலையில் அவருக்கு மீண்டும் 3 வருடங்களுக்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 76 வயதான ஈஷான் மானி 2003 - 2006 வரையான காலப்பகுதியில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவராகவும் விளங்கியவர். 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரதமராக முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரான இம்ரான் கான் தெரிவு செய்யப்பட்ட பொழுது அவரது வேண்டுகோளுக்கு இணங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பொறுப்பை ஈசான் மானி ஏற்றுக் கொண்டார். அவருக்கு இரண்டாவது முறையாகவும் பதவியில் நீடிப்பதற்கு விருப்பம் இருந்தாலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் போஷகராக விளங்கும் இம்ரான் கானிடமிருந்து சம்மதம் கிடைக்குமா? என்றொரு சந்தேகம் ஆரம்பத்தில் பலருக்கும் இருந்தது. ஆனாலும் அவரது காலத்தில் ஆற்றிய பணிகள் திருப்தி அளித்ததனால் அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில் நிலவி வரும் தீவிரவாதத் தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக சர்வதேச அணிகள் அங்கு சுற்றுப்பயணத்தைத் தவிர்த்து வந்த நிலையில் சிம்பாவே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளை கடந்த காலங்களில் பாகிஸ்தானுக்கு வரவழைத்துப் போட்டிகளை சிறப்பாக நடத்தி முடித்ததும் அவரது பதவிக்காலத்தின் சாதனையாகவே பார்க்கப்படுகின்றது. குறிப்பாக இந்த வருடம் பெப்ரவரியில் நடைபெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகள் கொரோனாத் தொற்றால் இடை நிறுத்தப்பட்டாலும் எஞ்சிய போட்டிகளை சமீபத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். அத்தோடு ஒரு தேசமாக கொரோனாத் தொற்றை நாம் சிறப்பாக கட்டுப்படுத்தி உள்ளதனால் 2021 / 2022 காலப்பகுதியில் மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுடனான போட்டித் தொடர்களை நடத்துவதற்கான சாதகமான சூழலும் அடுத்த வருட பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரை பாகிஸ்தானில் நடத்துவதற்கான வாய்ப்பும் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ■

# சர்ச்சையாகும் மைதானங்கள்

தற்போது நடைபெற்று வரும் கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டிகள் காலிறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. ஆனாலும் போட்டிகள் நடைபெறும் மைதானங்களை ஆரம்பம் முதலே வீரர்களும் பயிற்சியாளர்களும் விமர்சித்து வருகின்றார்கள். கோபா அமெரிக்கா போட்டிகளை சென்ற வருடம் ஆர்ஜென்ரீனாவும் கொலம்பியாவும் இணைந்தே நடத்த இருந்தன. கொரோனா தாக்கத்தினால் போட்டிகள் சென்ற வருடம் நடைபெறாததோடு இம்முறை அதனை நடத்துவதில் இருந்து அவ்விரு நாடும் பின்வாங்கியதால் இறுதி நேரத்திலேயே பிறேசில் போட்டிகளை நடத்த முன்வந்திருந்தது. இதையடுத்து பிறேசிலியா, கோயினியா, குயாபே, றியோடி ஜெனிரோ ஆகிய 4 நகரங்களில் உள்ள மனே கரிஞ்சா, பான்ரனல், ஒலிம்பிகோ, மரக்கானா, நில்ரன் சன்ரோஸ் ஆகிய 5 மைதானங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இதில் றியோடி ஜெனிரோவில் உள்ள நில்ரன் சன்ரோஸ் மைதானத்திலேயே 2016 ஒலிம்பிக் தடகளப் போட்டிகள் நடைபெற்றிருந்தன. இதில் நடைபெற்ற சிலி அணியுடனான போட்டி 1 : 1 என்று முடிவடைந்ததும் மெஸி ஆடுகளம் போட்டிக்கு உதவவில்லை என்றும் ஆர்ஜென்ரீனா பயிற்சியாளர் லயனல் ஸ்கலோனி இந்த மைதானம் மற்றொரு விளையாட்டுக்கு உகந்ததே தவிர உதைபந்தாட்டத்திற்கு அல்ல எனவும் தெரிவித்திருந்தனர். அதுபோல கொலம்பியா உடனான போட்டியில் பிறேசில் 2 : 1 என்று வெற்றி பெற்ற பின்னர் பிறேசில் பயிற்சியாளரான ரைட் இந்த மைதானம் விளையாடுவதற்கு ஏற்றுக் கொள்ள முடியாத மைதானம் என்று தெரிவித்திருந்தார். இவ்வாறு விமர்சித்ததற்காக தென்.அமெரிக்க உதைபந்தாட்டக் கூட்டமைப்பு அவருக்கு 5000 அமெரிக்க டொலர்களை அபராதமாக விதித்தது.




Rio de Janeiro
Estádio Olímpico Nilton Santos

இதன் பின்னர் ஈக்குவடோர் அணியுடனான போட்டிக்கு முன்னதாகவும் ரைட் ‘மோசமான ஆடுகளங்கள் குறித்துப் பேசினால் எனக்கு அபராதம் விதிக்கப்படும். ஆனால் அது மீண்டும் நடக்கும் எனத்தோன்றுகிறது. ஏனென்றால் இறுதிப் போட்டி நடைபெறும் மரக்கானா மைதான மும் மேம்படுத்த வேண்டிய நிலை யிலேயே உள்ளது. ஆனாலும் அதனைச் செய்வதற்கு போதிய கால அவகாசம் இல்லை என்று நினைக்கிறேன். நீங்கள் அது குறித்து எழுதலாம்’ என்று ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருக்கின்றார். ஆனாலும் ரைட் குற்றஞ்சாட்டிய ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் தென் அமெரிக்க உதைபந்தாட்டக் கூட்டமைப்பு தமது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் சில நாட்களில் நல்ல முடிவு கிடைக்கும் எனத் தெரிவித்து மரக்கானா மைதானத்தில் மேற்கொண்டு வரும் புனரமைப்புப் பணிகள் குறித்த வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. கோபா அமெரிக்கா தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 03.07.2021 அன்று வெளியிடப்பட்டது,